விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2039 புரட்டாதி 11 சனிக்கிழமை (27.09.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 283

SATS-TECH

SATS TECH ENGINEERS
NEW PACKAGES & RENEWAL
CALL:-222 5908 / 222 8812

# புலிகளுடனான ஒப்பந்தம் குறித்து ஆராய நாடாளுமன்ற தெரிவுக்குழு

## ஐ.தே.கட்சி எதிர்ப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் அமைப்புடன் இலங்கை ஆளும் கட்சிக்கு இரகசிய உடன்பாடு இருந்ததாக கூறப்பட்ட குற்றச்சாட்டு, மிக் ரக விமானங்களின் கொள்வனவு குறித்த ஒரு சர்ச்சை மற்றும் இலங்கை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துக்கு எதிரான சில குற்றச்சாட்டுக்கள் ஆகியவை குறித்து விசாரிக்கும் முகமாக மூன்று நாடாளுமன்ற தெரிவுக்குழுக்களை இலங்கை நாடாளுமன்ற சபாநாயகர் டபிள்யூ.ஜே.எம்.லொக்குபண்டார நியமித்துள்ளார். இத் தெரிவுக்குழுவை எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி எதிர்த்துள்ளது. (12 ஆம் பக்கம் பார்க்க)



லெப்.கேணல் திலீபன், கேணல் சங்கர் ஆகியோரின் திருவுருவப் படங்களுக்கு விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் சுடர் ஏற்றி, வணக்கம் செலுத்துவதைப் படத்தில் காணலாம்.

## இராணுவ நடவடிக்கையினைக் கண்டித்து திங்களன்று நோர்வேயில் உண்ணாவிரதம்

(ஒஸ்லோ)

இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வரும் இராணுவ நடவடிக்கையினை கண்டித்து நோர்வேயில் நாளை மறுதினம் உண்ணாவிரதப் போராட்டம் இடம்பெறவுள்ளது.

நோர்வேயின் நாடாளுமன்றத்திற்கு முன்பாக திங்கட்கிழமை காலை 8 மணி முதல் மறுநாள் பிற்பகல் 3 மணி வரையான 32 மணி நேரம் இந்த உண்ணாவிரதப் போராட்டம் இடம்பெறும்.

இந்தப்போராட்டம் தொடர்பில் நோர்வே தமிழ் அமைப் (12ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கு அரியாலைப் பகுதியில் பரஸ்பரம் எறிகணைத் தாக்குதல்

### சிப்பாய் பலி; பொதுமகன் உட்பட இருவர் காயம்

(யாழ்ப்பாணம்)

கிழக்கு அரியாலைப் பகுதியில் நேற்றுக் காலை விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் பரஸ்பரம் இடம்பெற்ற எறிகணைத் தாக்குதலில் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார்: மற்றொரு சிப்பாய் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்திய (12 ஆம் பக்கம் பார்க்க)

## மண்கும்பானில் இரவுவேளை குடும்பஸ்தர் சுட்டுக்கொலை

(யாழ்ப்பாணம்)

வேலணை மண்கும்பான் பகுதியில் நேற்று முன்தினம் இரவு குடும்பஸ்தர் ஒருவர் கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். ஊரடங்கு வேளையில் வீதியில் நடமாடிய காரணத்தினாலேயே குறித்த குடும்பஸ்தர் மீது தாம் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாக விசாரணைகளில் கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவத்தில் அதே (12ஆம் பக்கம் பார்க்க)

## ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 7 பேர் நீதிமன்றில் தஞ்சம்

(பருத்தித்துறை)

உயிருக்கு அச்சுறுத்தல் எனத் தெரிவித்து ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 2 மாணவர்கள், 4 பெண்கள் உட்பட 7 பேர் பருத்தித்துறை நீதிமன்றில் பாதுகாப்பிற்காக தஞ்சமடைந்துள்ளனர்.

கரவெட்டியைச் சேர்ந்த இக்குடும்பத்தில் உறவினர் ஒருவர் அண்மையில் இனந்தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட நிலையில், (12 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியில் 3 தடவைகள் நேற்று விமானத் தாக்குதல்

(கொழும்பு)

இலங்கையின் வடக்கே வன்னியில் தெரிவு செய்யப்பட்ட விடுதலைப் புலிகளின் இலக்குகள் மீது நேற்று மூன்று தடவைகள் வான் குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டதாக இராணுவத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

பூநகரிப் பகுதியில் விடுதலைப் புலிகள் ஒன்று கூடும் இடமொன்றின் மீது நேற்று முன்தினமிரவு தாக்குதல் உலங்குவானூர்திகள் குண்டுத் (12 ஆம் பக்கம் பார்க்க)

## எறிகணைத் தாக்குதலில் பெண் படுகாயம்

(கிளிநொச்சி)

படையினரின் எறிகணைகள் உருத்திரபுரம் பகுதியில் வீழ்ந்து வெடித்ததில் ஒரு பிள்ளையின் தாய் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று காலை 8 மணியளவில் இடம்பெற்ற இந்த (12ஆம் பக்கம் பார்க்க)

## புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் அரசியல் அழுத்தம் கொடுக்கின்றனர்

### பா.நடேசன் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

புலம்பெயர்ந்து வாழும் எமது உடன் பிறப்புக்கள் என்றுமில்லாதவாறு அனைத்துலக நாடுகள் முழுவதிலும் எழுச்சி கொண்டு அந்தந்த நாட்டு அரசுகளுக்கு அரசியல் ரீதியாக அழுத்தங்களை கொடுத்து வருகின்றனர் என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் (12 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை-ஈரான் ஜனாதிபதிகள் சந்திப்பு

(நியூயோர்க்)

ஐக்கிய நாடுகள் சபையின் 63ஆவது கூட்டத்தொடரில் கலந்து கொள்வதற்காக நியூயோர்க்கிற்கு சென்றிருக்கும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, ஈரான் ஜனாதிபதி மொகமட் அஹமட் நிஜாத்தை நேற்று முன்தினம் சந்தித்து விசேட பேச்சுவார்த்தை நடத்தினார்.

இரு நாடு (12 ஆம் பக்கம் பார்க்க)




சூரியன் அலைகளில் (யாழ்ப்பாணம் 93 Mhz)
சனிக்கிழமைகளில் காலை 6.00 மணி முதல் 8.00 மணி வரை
மீண்டும் வாழ்வோம் நிகழ்ச்சியினை நீங்கள் கேட்கலாம்

உங்கள் கதைகளை கேளுங்கள்

உள் நாட்டில் இடம்பெயர்ந்து வாழும் மக்களுக்கான
மனிதாபிமான பணிகள் குறித்த தகவல்களை தாங்கி வருகின்றது
மீண்டும் வாழ்வோம் நிகழ்ச்சி. இது உங்களுக்காக
உங்கள் கதைகளை சொல்லும் ஒரு நிகழ்ச்சி.
தொடர்புகளுக்கு மீண்டும் வாழ்வோம் த.பெ.இல 1039 கொழும்பு

# 10வருடங்களுக்கு மேல் பணியாற்றிய முன்பள்ளி ஆசிரியர்களுக்கு கௌரவம்

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டில் பத்து வருடங்களுக்கு மேல் முன்பள்ளி ஆசிரியர்களாக சேவையாற்றியவர்கள் சான்றிதழ் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர். மகளிர் சிறுவர் மேம்பாட்டுத் திட்டத்தினரே யாழ்.பிராந்தியஉள்ளூராட்சி ஆணையாளருடன் இணைந்து மேற்படி முன்பள்ளி ஆசிரியர்களைக் கௌரவிக்கவுள்ளனர்.

பிரதேச ரீதியாக நடைபெறும் இந்த நிகழ்வில் முதல் நிகழ்வு எதிர்வரும் முதலாம் திகதி யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெறும். நெடுந்தீவு, வேலணை, ஊர்காவற்றுறை, காரைநகர், யாழ்ப்பாணம், தென்மராட்சி, ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த முன்பள்ளி ஆசிரியர்களுக்கு இச் சான்றிதழ்கள் வழங்கப்படவிருக்கின்றன.

வடமராட்சி வடக்கு, வடமராட்சி தெற்கு, மேற்கு ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கு எதிர்வரும் 3ஆம் திகதி கரவெட்டிப் பிரதேச சபையிலும் 4ஆம்திகதி வலி.கிழக்கு, வலி.மேற்கு, வலி. தெற்கு, வலி.வடக்கு பிரதேச ஆசிரியர்களுக்கு யாழ். பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் வைத்தும் சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன.

வலி.தென்மேற்குப் பிரதேச ஆசிரியர்களுக்கு எதிர்வரும் 6ஆம் திகதி வலி.தென்மேற்குப் பிரதேச சபை மண்டபத்திலும், யாழ்.மாவட்டத்திலுள்ள அனைத்து முன்பள்ளிகளிலும் 25வருடங்களுக்கு மேல் சேவையாற்றிய ஆசிரியர்கள் வலயப் பிரதேச இணைப்பாளர் ஆகியோரும் 8ஆம் திகதி மானிப்பாய் பிரதேச சபை மண்டபத்திலும் கௌரவிப்பு நிகழ்வு நடைபெறவுள்ளது. (ஓ)

# தேசிய பாடசாலைகளின் அதிபர் வெற்றிடங்களை நிரப்ப நேர்முகப்பரீட்சை

(கொழும்பு)

தேசிய பாடசாலைகளில் காணப்படும் அதிபர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கமைய 52 தேசிய பாடசாலைகளுக்கு அதிபர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை நடைபெறுகிறது.

இப் பரீட்சை இன்றும் 29 மற்றும் ஒக்டோபர் 2,3 ஆம் திகதிகளிலும் கல்வி அமைச்சில் நடைபெறவுள்ளது. இதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அமைச்சின் ஊடகச் செயலாளர் ஜயவீர தெல்பாகொட தெரிவித்தார்.

இதற்கு விண்ணப்பித்திருந்தும் இதுவரை நேர்முகப் பரீட்சைக்கான அழைப்புக் கடிதங்கள் கிடைக்கப் பெறாதோர் 011 2787 330 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளுமாறு கல்வி அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை பல தமிழ்மொழி மூல தேசிய பாடசாலைகள் நிரந்தர அதிபர் இன்றி இயங்குவதனால் இப் பாடசாலைகளின் நிர்வாகம் மற்றும் மாணவர்களின் பரீட்சை அடைவு மாற்றங்கள் என்பன பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. நாடு பூராகவும் சிங்கள மற்றும் தமிழ்மொழி மூல தேசிய பாடசாலைகள் 328 உள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-5)

## வித்தக விநாயகர் பாமாலை நூல், இசை இறுவட்டு வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி வித்தக விநாயகர் பாமாலை நூல், இசை இறுவட்டு வெளியீட்டு விழா இன்று சனிக்கிழமை காலை 9மணிக்கு யாழ்ப்பாண தேசியக் கல்வியியற் கல்லூரி பிரதான மண்டபத்தில் கல்லூரி கல்வியலாளரும் இந்து மாமன்ற காப்பாளருமான பிரபாகரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணத் தேசியக் கல்வியியற் கல்லூரி பீடாதிபதி எஸ்.கே. யோகநாதன் சிறப்பு விருந்தினராக யாழ்.போதனா வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி வி.கமலநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

தொடர்ந்து வெளியீட்டு உரையை கல்லூரி கல்வியியலாளர் திருமதி சி.வை. குகநேசன் வழங்குவார்.

கோப்பாய் லயன்ஸ் கழகத்தலைவர் சி.மகேந்திரம் முதற்பிரதியைப் பெற்றுக்கொள்வார். ஸ்கந்தவரோதயாக் கல்லூரி இசையாசிரியர் சி.சிவஞானராஜா மதிப்பீட்டுரையை வழங்குவார். தொடர்ந்து 2ஆம் வருட சித்திரத் துறை முகிழ்நிலை ஆசிரியர் ஆ.செந்தூரனின் சுவர்ச்சித்திரப் பட வெளியீடும் திரைநீக்கமும் இடம்பெறும். (ஓ)

# தேசிய மெய்வல்லுநர் போட்டிகளில் பங்குகொள்ளும் வடபகுதி மாணவர்களுக்கு விளையாட்டு சீருடை

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அன்பளிப்பு

பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மெய்வல்லுநர் போட்டியில் பங்குகொள்கின்ற வடபகுதி பாடசாலை மாணவ மாணவிகளுக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விளை யாட்டு சீருடைகளை அன்பளிப்புச் செய்துள் ளார்.

முன்னதாக வடபகுதியிலிருந்து மேற்படி தேசிய விளையாட்டுப் போட்டிகளில் பங்கு கொள்ளும் முகமாக வருகை தந்துள்ள 141 மாணவ மாணவிகளையும் அவர்கள் தங்கியிருந்த சமூக சேவைகள் அமைச்சின் தொழிற் பயிற்சி மையத்திற்கு நேரடியாக சென்று சந்தித்த அமைச்சர் போட்டிகளில் வெற்றி பெற அவர்களுக்கு தமது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டதுடன் அவர்களது குறைநிறைகளையும் கேட்டறிந்தார்.

யாழ்ப்பாணத்திலிருந்து வருகை தந்து தமது போக்குவரத்து, தங்குமிட, உணவு வசதிகள் அனைத்தையும் பொறுப்பேற்று தம்மை அன்புடன் கவனித்து வரும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிற்கு தமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொண்ட பொறுப்பாசிரியர்களும் மாணவ மாணவிகளும் தேசிய போட்டிகளின் ஆரம்ப நிகழ்வுகளில் கலந்துகொள்ளும் யாழ்.மாவட்ட பாடசாலை அணியினர் அனைவரும் ஒரே சீருடையுடன் காட்சியளிக்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்தனர்.

இவ் விடயத்தில் கூடிய கவனம் செலுத்திய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்படி வேண்டுகோளானது குறுகியகால அவகாசமாயினும் தம்மால் இயன்ற முயற்சி செய்வதாக உறுதியளித்தார்.

இவ்வாறு உறுதியளித்தன்பிரகாரம் அனைத்து மாணவ மாணவிகளுக்கும் விளையாட்டுச் சீருடைஅன்பளிப்புச்செய்யப்பட்டது. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பொது சன தொடர்பு அதிகாரி ஜெயக்குமார் மற்றும் ஈபிடிபி மக்கள் தொடர்பாளர் விஜயகாந்த் ஆகியோர் தேசிய விளையாட்டுப் போட்டிகளில் பங்குகொள்ளும் மாணவ மாணவிகள் அனைவருக்கும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் அன்பளிப்புச் செய்யப்பட்ட விளையாட்டு சீருடைகளை நேரடியாக வழங்கினார். (அ-5)

# யாழ்.சுப்பர்மடம்,மயிலிட்டி, காங்கேசன்துறை கடற்தொழிலாளர்கள் தொழில்புரிய வாய்ப்பு

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கையின் விளைவு

யாழ் .சுப்பர் மடம் மயிலிட்டி மற்றும் காங்கேசன்துறை கடற்தொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகள் நேற்றுமுன்தினம் சமூக சேவைகள்மற்றும் சமூக நலத்துறை அமைச்சரும் வட மாகாணத்திற்கான விஷேட செயற்பாட்டுகுழுவின் தலைவருமான டக்ளஸ் தேவானந்தாவைச் சந்தித்து தங்களது தொழில் சார் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடினர்.

சுப்பர்மடம், மயிலிட்டி மற்றும் காங்கேசன்துறை பகுதி வாழ் கடற்தொழிலாளர்கள் தொழிலில் ஈடுபடுவதற்கான அனுமதி உரிய வகையில் கிடைக்கப் பெறாமை காரணமாக மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் எடுத்துக் கூறியதையடுத்து, உரிய பாதுகாப்புத் தரப்பினருடன் உடனடியாகத் தொடர்புகொண்ட அமைச்சர் மேற்படி கடற்தொழிலாளர்கள் தொழில்புரிவதற்கான தடைகள் பற்றி கலந்துரையாடியதையடுத்து இத் தொழிலாளர்கள் தங்களது தொழில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

யாழ்.சுப்பர்மடம்,மயிலிட்டி மற்றும் காங்கேசன்துறை பகுதிகளில் சுமார் 300க்கும் மேற்பட்ட கடற்தொழிலாளர்களது குடும்பங்கள் வாழ்ந்து வருகின்ற நிலையில் அமைச்சர் டக்ளஸ் தேவான்நந்தா உடனடி நடவடிக்கை காரணமாக இத் தொழிலாளர்கள் தங்களுக்கு தொழில்துறைகளில் ஈடுபட வாய்ப்புக் கிட்டியுள்ளமை குறித்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு தங்களது நன்றியைத் தெரிவித்துக் கொண்டுள்ளனர். (அ)

# வீதியை புனரமைக்க நடவடிக்கை எடுக்குமாறு அரச அதிபரிடம் பொதுமக்கள் கோரிக்கை

(பொன்னாலை)

வட்டு .மூளாய் வீதியில் காளிகோயிலுக்கு முன்பாக இருந்து ஆரம்பித்து டச்சு வீதியில் பத்தானைக் கேணி வைரவர் ஆலயத்துக்குச் சற்று முன்னராகச் சென்று சந்திக்கும் முன் கோடை தேவாலய வீதி கடந்த 40வருட காலமாக புனரமைக்கப்படாதிருந்து வருகின்றது.

இவ் வீதியியைக் காலதாமதமின்றி புனரமைத்துத் தருவதற்கு யாழ்.மாவட்ட அரச அதிபர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அப் பகுதி மக்கள் மிகவும் உருக்கமாக வேண்டுகோள் விடுக்கிறனர்.

சாதாரணமாக துவிச்சக்கர வண்டியில் கூடபயணிக்க முடியாத அளவுக்கு பாரிய கிடங்குக்குழியும்-கற்களுமாகக் காணப்படும் குறித்த வீதி மாரி காலங்களில் முற்றாக பாவிக்க முடியாத நிலை ஏற்படலாம் என அச்சம் தெரிவிக்கும்மக்கள், பாடசாலை மாணவர்கள், அரச தொழிலாளர்கள், கூலித் தொழிலாளர்கள், பொதுமக்கள் எனத் தினமும் நூற்றுக் கணக்கானவர்களின் பொதுப் பாவனையிலுள்ள மேற்படி வீதி கடந்த 40 வருடகாலமாக புனரமைக்கப்படாது புறக்கணிக்கப்பட்டு வந்திருக்கின்றது எனத் தெரிவிக்கின்றனர்.

வலி. மேற்கில் கணிசமான வீதிகள் புனரமைக்கப்பட்ட நிலையில் மேற்படி வீதி மட்டம் புனரமைக்கப்படாதிருப்பது தமக்கு மிகுந்த வேதனையைத் தரும் விடயமாக அமைந்திருப்பதாகவும் அவர்கள் கவலையுடன் தெரிவிக்கின்றனர்.

இவ் வீதி புனரமைப்பின் அவசியம் குறித்து பல தடவைகள் வலி. மேற்கு பிரதேச செயலர் ,வலி. மேற்கு பிரதேச சபைச் செயலாளர்களுக்கு எழுத்துமூலமும் நேரடியாகவும் சுட்டிக்காட்டப்பட்டிருந்தும் இவ் வீதி திருத்தப்படவில்லையென அப்பகுதிமக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

இவ்விடயத்தில் அக்கறைகொண்டு மேற்படி வீதியை உடன் புனரமைத்து தருவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று அரச அதிபரிடம் அப் பகுதிமக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (ஓ-49)

யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்
யாழ்ப்பாணம்.
தரம் 6 அனுமதி -2009
[தமிழ் மொழி -ஆங்கில மொழி மூலம்]
மேற்படி தரம் 6 அனுமதிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. காரியாலயத்தில் விண்ணப்பப் படிவத்தினைப் பெற்று விண்ணப்பிக்கவும்.
விண்ணப்ப முடிவுத் திகதி : 10.10.2008
வி.மாணிக்கம்
அதிபர்
(C/1606)

Jaffna Central Sports Club
5ஆம் ஆண்டு புலமைப்பரிசுப் பரீட்சை 2008
கல்வியில் வீறுநடைபோடும் யாழ்.மத்திய கல்லூரியின் 26 சிறார்களுக்கு யாழ்.சென்றல் விளையாட்டுக்கழகம் உளமார மனமார வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகின்றது.
மத்தியின் மகிமை நித்தியம் நிலைக்கும்
26.09.2008
செயலாளர்
யாழ்.சென்றல் விளையாட்டுக்கழகம்
(C/1605)

காணி விற்பனைக்கு
மானிப்பாய் வேலக்கை பிள்ளையார் கோயிலுக்கு அண்மையில் 4 பரப்பு காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு:-021 4591438
077 6916929
(1767)

பாராட்டி வாழ்த்துகின்றோம்

உத்திராவத்தை யா/புலோலி கிழக்கு அ.த.க. பாடசாலை மாணவன் செல்வன் சா.சாருஜன் 2008ஆம் ஆண்டு நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் 145 புள்ளிகள் பெற்று பாடசாலை மட்டத்தில் முதன்மை அடைந்தமைக்கு பாடசாலை அதிபர் ஆசிரியர்களின் விடாமுயற்சியும், ரியூசன் ஆசிரியர்களின் விடாமுயற்சியும், முதலி அம்மனின் அனுக்கிரகமுமே காரணமாகும். இவர் மேலும் கல்வியில் பல சித்திகள் அடைந்து முன்னேற வேண்டுமென முதலி அம்மனின் அருளும் ஆசியும் வேண்டி பல்லாண்டு காலம் வாழ வேண்டுமென வாழ்த்துகின்றோம்.
தந்தை வே.சாந்தகுமார்
தாய்-சா.செல்வமலர்
அண்ணா-சா.கீர்த்தனன்
V.S.குமார் தையல் நிலையம்
பிரதானவீதி, பருத்தித்துறை
(C/1604)

# இன்று ஒரு தகவல்

## கடிதம்

ஒரு ஆன்மீகப் பெரியவர் இருந்தார். அவரிடம் எத்தனையோ நல்லபழக்கங்கள் இருந்தது. அவரிடம் நான் பார்த்து ஆச்சரியப்பட்ட ஒரு பழக்கம் என்ன தெரியுமா?

கடிதங்களுக்கு உடனுக்குடன் பதில் போடுவது தான்.

இவ்வளவுக்கும் ,அவர் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு ஊருக்குப் போய் பக்திப் பிரசங்கம் செய்து கொண்டிருப்பார்.

கடிதம் போடுபவர்கள் தெரிந்தவர்களாக இருந்தாலும் சரி, தெரியாதவர்களாக இருந்தாலும் சரி-உடனே ஒரு "காட்" டில் இரண்டுவரி எழுதிப் போட்டு விடுவார். போட்டவர்கள் மனதில் நிறைந்து விடுவார்.

நம்மில் பல பேருக்கு அந்தப் பழக்கம் இல்லை! பதில்போட வேண்டும் என்றுநினைத்தே காலத்தைக் கடத்தி விடுவோம். நாம் போடுவதற்குள் அவரே புறப்பட்டு நேரில் வந்து விடுவார்.

மனித நேயத்தைக் காட்டுவதற்கு "கடிதம்" ஒரு முக்கியமான சாதனம்என்பதை நாம் மறந்து விடக் கூடாது. கொஞ்சம் அக்கறைவேண்டும் அவ்வளவுதான்.

இன்றைக்கு ஒருகடிதம் வருகிது என்று வைத்துக் கொள்ளுங்கள். இன்றைக்கே அதற்கு ஒரு பதிலைஎழுதிப் போட்டு விட்டால் , அவர் நெஞ்சில் நாம் ஒரு தனி இடத்தைப் பிடித்து விடுவோம்.

இன்னொரு விஷயம்: கடிதத்தில் இடம் தாராளமாக இருக் கிறது என்று நினைத்துக் கொண்டு அதில் போய் புராணமெல்லாம் எழுதிக் கொண்டிருக்க வேண்டியதில்லை.

அதே நேரத்தில் "நலம் ,நலமறிய அவா" என்றஇரண்டு வார்த்தையில் முடித்துக் கொண்டு ,"இப்படிக்கு" என்றுஎழுதி கையெழுத்துப் போட்டாலும் அது நன்றாக இருக்காது.

ஒரு கடிதம் "வளவள" என்று நீளமாகவும் போகக்கூடாது. இரண்டு வரியிலும் முடியக்கூடாது. அளவாக கருத்தோடு இருக்க வேண்டும்.

அலுவலக கடிதங்களை "ரைப்" அடிக்கலாம். வேறொருவர் உங்களுக்காக கையெழுத்துப் போடலாம். ஆனால் மனைவிக்கோ- நண்பர்களுக்கோ எழுதும் கடிதங்களை நீங்கள் உங்கள் கைப்படவே எழுத வேண்டும். அது தான் மரியாதை!

ரைப்ரைட்டர் கடிதங்களில் "இதயம்" தெரியாது ,இயந்திரம் தான் தெரியும்! கடிதத்தில் எந்த விஷயத்தையும் மிகைப்படுத்தக்கூடாது... படிப்பவர்கள் மனம் புண்படக்கூடாது. திட்டி எழுதவும்கூடாது. பின்னர் அது இடைஞ்சலாகக் கூட முடியலாம். எதிரான சாட்சியாகவும் அமையலாம்!

நீங்கள் விளையாட்டாக ஒருவரைக் "கொன்று விடுவேன்" என்று தமாஷாக " கடிதம்" எழுதுகிறீர்கள்; அந்த ஆசாமியை நிஜமாகவே ஒருவர் "கொன்று விடுகிறார்."

அதன் பின்னர்நீங்கள்எழுதிய கடிதம் பொலிசுக்கு கிடைக்கிறது. என்னஆகும் என்று யோசித்துப் பாருங்கள். நீங்கள் நிரபராதி என்று நிரூபித்து விடலாம்... இருந்தாலும் அவஸ்தை அவஸ்தை தானே!

வரும் கடிதங்களைஒரே இடத்தில் ஒழுங்காக அடுக்கி வைக்க வேண்டும். பத்திரப்படுத்த வேண்டியதை பத்திரமான இடத்தில் வைக்க வேண்டும்

இது யார் கண்ணில் படப்போகிறது என்று நீங்கள் அலட்சியமாக இருக்கலாம்-ஆனால் பட்டு விடும்...அதன் பின் உங்களுக்குத் தான் கஷ்டம்!

இன்னொருமுக்கியமான விஷயம்:ஆண்கள் பெண்களுக்கு எழுதும் சமயத்திலும் பெண்கள் ஆண் களுக்கு எழுதும் சமயத்திலும்மிகவும்கவனமாக இருக்க வே ண்டும்.

வார்த்தைகளுடைய அர்த்தம் மாறிவிடாமல் ஜாக்கிரதையாக எழுத வேண்டும். யதார்த்தமாக நீங்கள் எழுதியிருப்பீர்கள்... படிக்கும் போது அதில் புதிதாக ஒரு அர்த்தம் இருப்பதுமாதிரி தோன்றும்.

நான் அந்த அர்த்தத்தில் எழுதவில்லை என்று அதன் பின் அல்லாட வேண்டியிருக்கும்! யாருக்கும் எழுதும் கடிதமாக இருந்தாலும் சரி...எழுதி முடித்ததும் ஒரு முறை படித்துப் பார்த்து விடுவது நல்லது. சின்ன எழுத்துப் பிழை கூட விபரீதமான அர்த்தத்தை உண்டாக்கலாம்.

ஒரே சமயத்தில் பல கடிதங்கள் எழுதும் போது கவரும் கடிதமும் மாறிப் போய் விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

முகவரி எழுதும் போது அவசரமில்லாமல் தெளிவாக எழுத வேண்டும். சரியானஅளவுக்கு முத்திரை ஒட்ட வேண்டும். வாங்குபவன்DUEகட்டிக் கொள்ளட்டும் என்று விட்டு விடக் கூடாது. ஒருதபால் பெட்டிக்கு முன்னால் ஒருவர் பரிதாபமாக முழித்துக் கொண்டிருந்தார். "என்ன நடந்தது?" என்று கேட்டார்இன்னொருவர்.

"ஒரு தப்பு நடந்து விட்டது சேர். ஒரு கவரை இந்தப் பெட்டிக்குள் போட்டு விட்டேன். அந்தகவருக்குள் வைக்க வேண்டிய கடிதத்தை வைக்க மறந்து விட்டேன்!" என்றார்.

இதைக் கேட்டதும் மற்றவர் ,"நான் கவருக்குள் கடிதத் தை வைத்து ஒட்டி சரியாகத்தான் போட்டேன். இருந்தாலும் ஒரு தவறு நடந்து விட்டது என்றார்.

"அதுஎப்படி?" என்றார் மற்றவர்.

"விலாசம் எழுத மறந்துவிட்டேன்!" என்றார் அவர்.

தென்கச்சி கோ சுவாமிநாதன்

# இலங்கைத் தமிழர்களை பாதுகாக்க எந்தத் தியாகத்தையும் செய்யத் தயார்

## பா.ம.க நிறுவனத் தலைவர் டாக்டர் ராமதாஸ் உறுதி

(சென்னை)

இலங்கையில் தமிழர்கள் தாக்கப்படுவது அதிகரித்து வருகிறது. கூண்டோடு அழிக்கப்படுவார்களோ என்ற நிலை உள்ளது. இதை கண்டும் காணாதது போல் இந்தியா உள்ளது. இதை தமிழகம் வேடிக்கை பார்த்துக் கொண்டுள்ளது. தமிழக அரசு ஈழ தமிழர்களின்துயரத்தை மத்திய அரசிடம் வலியுறுத்தி குரல் ஓங்கிஒலிக்க வேண்டும். தமிழகத்தில் உள்ள அனைத்து தலைவர்களுக்கும் முதல் அமைச்சர் கடிதம்எழுதி அவசர கூட்டத்தை கூட்டி தமிழகம் முழுவதும் ஒரே குரலில் சிங்கள அரசை கண்டிக்கவும் , தமிழர்களுக்க ஆதரவு கொடுக்கவும் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும்.

இலங்கை தமிழர்க ளுக்கு நியாயமான உரிமையும் , நிரந்தர பாதுகாப்பும் கிடைக்கும் வரை ஓய மாட்டோம். தமிழீழ போராளிகளுக்கு அடைக்கலம் தரும் கடமையில் .இருந்துஎந்தக் காலத்திலும் தவறமாட்டோம். இலங்கைதமிழனை பாதுகாக்க எந்த தியாகத் தையும் செய்ய தயாராக இருப் போம். இந்த கடமைகளை செய்யும் போது மத்தியமாநில அரசுகளின் அடக்கு முறையைக் கூட இன் முகத்தோடு ஏற்றுக் கொள்வோம்.

இவ்வாறு டாக்டர் ராமதாஸ் கூறினார். (அ-5)

# ஆறு சட்ட விரோத நிதி நிறுவனங்களின் நடவடிக்கைகளை மத்திய வங்கி முடக்கம்

இலங்கையில் சட்ட விரோதமாக செயற்பட்டுவந்த ஆறு நிதி நிறுவனங்களின்நடவடிக்கை களை மத்திய வங்கி முடக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி குறித்த நிதி நிறுவனங்களின் நிதி நடவடிக்கைகள் முற்றாக முடக்கப்பட்டுள்ளன. குறித்த நிதி நிறுவனங்களில் வைப்பிலிடுதல், கடன் வழங்கல், முதலீடு செய்தல், சொத்துக்கள்விற்பனை போன்ற நடவடிக்கைகளை மத்திய வங்கி தடை செய்துள்ளது. இனி வரும் காலங்களில் இல்ங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட நிதி நிறுவனங்கள் தொடர்பில் மாதாந்தம் ஊடகங்களின் மூலம் மக்கள் தெளிவு படுத்தப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

1988ஆம் ஆண்டு74ஆம் இலக்கநிதிச் சட்டத்தின் கீழ் இவ்வாறு சட்ட விரோதமாக இயங்கும் நிறுவனங்கள் தொடர்பில்கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாக மத்திய வங்கி அறிவித்துள்ளது. இதே வேளை ஒகந்த பினான்ஸ் என்ற நிதி நிறுவன அதிபர் சக்வித்தி ரணசிங்கவினால் சுமார் 900 கோடி ரூபா நிதி மோசடி செய்யப்பட்டமை அண்மையில் அம்பலமானதைத் தொடர்ந்து மத்திய வுங்கி நிதி நிறுவனங்கள் தொடர்பிலான கெடுபிடிகளை தீவிரப்படுத்தியுள்ளது.

எனினும்குறித்த நிதிநிறுவனத்தின் தலைவர் சக்வித்தி என்றபிரபல ஆங்கில ஆசிரியர் வெளி நாட்டுக்கு தப்பியோடியுள்ளதாகவும் அவரை கண்டு பிடிப்பதற்காகஇன்டர் போல் எனப் படும் சர்வதேச பொலிஸாரின் ஒத்துழைப்பு பெற்றுக் கொள்ளப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் குறித்த ஆங்கில ஆசிரியரை கடந்த13ஆம் மற்றும் 18ஆம் திகதிகளில் நுகேகொட பிரதேசத்தில் இருவர் பார்த்ததாக பொலிஸாரிடம் தெரிவித்துள்ளனர். (அ-5)

# இராசி பலன்

27.09.2008
(புரட்டாதி 11, சனிக்கிழமை)
மகம் முற்பகல் 9.40 மணிவரை
திரயோதசி பிற்பகல் 02.51மணிவரை
இராகுகாலம்-9.02-10.32 மணிவரை
சுபநேரம்-03.02-04.32 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | அஜீரண ரோகம்,தாழ்ந்த சுபாவம், வேலைச்சுமை,காரியதாமதம் |
| இடபம் | கல்வியில் ஆர்வம், அற்பர் உறவு,சுபசெலவு, வாகன சுகம் |
| மிதுனம் | நற்கீர்த்தி, கூட்டு முயற்சி, தேகநலன், விருந்துபசாரம் |
| கடகம் | விவாதம், வேலைச் சுமை, தனவிரயம், காரிய தாமதம் |
| சிங்கம் | வெகுமானம்,சயனசுகம்,அதிக பிரயாஸை,கற்பனை மிகுதி |
| கன்னி | காரிய அலைச்சல், பிதாசிந்தை,பெரியோர் சந்திப்பு , சுப செலவு |
| துலாம் | மனமகிழ்ச்சி ,நண்பர்கள் சந்திப்பு ,தனதானிய சேர்க்கை , குடும்பசுகம் |
| விருச்சிகம் | நன்கொடை ,பெரியோரால் மதிக்கப்படுதல் ,தூரதேசச் செய்தி , முயற்சி கைகூடும் |
| தனுசு | எதிர் பாராத செலவு ,இடமாற்றம் ,புதியதிட்டமிடல் ,சரீரப் பிரயாசை |
| மகரம் | பொருள் விரயம் ,காரிய தடங்கல் ,ஆரோக்கியக் குறைவு , திடீர்நன்மை |
| கும்பம் | செல்வாக்கு,காரிய நன்மை, பண வருவாய், நண்பர்கள் சந்திப்பு |
| மீனம் | சத்துரு ஜெயம் திடீர் பயணம் , சுவாரஸ்யம் ,முயற்சிகைகூடும் |

வளவன்

# மாகாண மட்ட தமிழ்மொழித்தின நாட்டுக் கூத்துப் போட்டி முடிவுகள்

(திருகோணமலை)

வடமாகாண கல்வித் திணைக்களத்தினால்நடாத்தப் பெற்றமாகாண மட்ட தமிழ் மொழித்தின நாட்டுக் கூத்துப் போட்டி முடிவுகள் வட மாகாணக் கல்விப் பணிப்பாளர் வீ.இராசையாவினால்அறிவிக்கப்பட்டுள்ளது. விபரம் வருமாறு,

**வடமோடிக்கூத்து திறந்தபோட்டி**

முதலாம் இடம்- யா/நாவற்குழி அ.த.க. பாடசாலை.

**தென்மோடிக்கூத்து திறந்தபோட்டி**

முதலாம் இடம்-யா/ இளவாலை மெய்கண்டான் ம.வி, இரண்டாம் இடம்- வவு/ கல்மடு மகா வித்தியாலயம்,சிறப்புத் தகை மை- யா/கந்தர்மடம் சைவப் பிர காச வித்தி.

**சிந்து நடைக் கூத்து திறந்தபோட்டி**

முதலாம்இடம்- யா/சண்டி லிப்பாய் இந்துக் கல்லூரி, இரண்டாம் இடம்- வ/புதுக்குளம் ம.வித்தி யாலயம், மூன்றாம் இடம் - மன்/மோட்டைக் கட்டை அ.த.க. பாடசாலை.

**இசைநாடகம் திறந்தபோட்டி**

முதலாம் இடம் - யா/ இணுவில் மத்திய கல்லூரி, இரண்டாம் இடம் - மன்/பரிகாரிகண்டல் அ.த.க. பாடசாலை,மூன்றாம் இடம் -வ/ தரணிக்குளம் கணேஸ் வித்தி.

**விசேட கூத்து திறந்தபோட்டி**

முதலாம் இடம் யா/புனித கென்றியரசன்கல்லூரி,இரண்டாம் இடம் இலுப்பைக்குளம் றோ.க.த க.பாடசாலை (ஓ)



அண்மையில் உடுவில் பிரதேச செயலக கலாசாரப் பேரவை,ஏழாலை முத்தமிழ் மன்றத்தில் நடாத்திய விழாவில் திறந்த பிரிவு சிறுகதைப் போட்டி - 2007இல் மூன்றாம் இடத்தைப் பெற்ற சைவத் தமிழ் செம்மல் செ. பரமநாதனுக்கு சமூக சேவை உத்தியோகத்தர் வ.சுரேஸ் குமார் சான்றிதழையும் பரிசினையும் வழங்குவதைக் படத்தில் காணலாம்.

## தேசிய மட்டப் போட்டிக்கு தெரிவானோர்



சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை மாணவியான த.அபிவர்ணா வடமாகாணத் தமிழ் மொழித் தினப்போட்டியில் பேச்சு போட்டியில் முதலாம் பிரிவில் முதலிடத்தைப்பெற்று தேசிய மட்டப்போட்டிக்குத் தெரிவாகியுள்ளார்.

◆◆◆◆



வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையின் உயர்தர கணிதப்பிரிவு மாணவியும் , கற்பகப்பிள்ளையார் கோவிலடி ,கோப்பாய் தெற்கைச் சேர்ந்தவருமான செல்வி லோஜனா கணபதிப்பிள்ளை வடமாகாணத் தமிழ் மொழித்தினப் போட்டியில் பிரிவு 5 இல் பேச்சுப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்று தேசிய மட்டத்திற்கு தெரிவாகியுள்ளார். ஓ

## விதை நெல் விநியோகம்

தீவகத்தில் நெற் செய்கையை ஊக்குவிக்கும் முகமாக விவசாயத் திணைக்களத்தினால் அண்மையில் நெடுந்தீவு, நயினாதீவு ,புங்குடுதீவு கமக்கார அமைப்புக்களைச் சேர்ந்த விவசாயிகளுக்கு புங்குடுதீவு கமநல கேந்திர நிலையத்தில் வைத்து விவசாயப் போதனாசியர் பி.பத்மநாதனால் விதை நெல் வழங்கப்பட்டது.

இந் நிகழ்வு நிலையத் தலைவர் கை.ஸ்ரீஸ்காந்தன் தலைமையில் நடைபெற்றது.அத்துடன் சமுர்த்தி உத்தியோகத்தர் ஜெயகாந்தனும் கலந்துகொண்டார் என புங்குடுதீவு விவசாய சம்மேளனம் அறிவித்துள்ளது. ஓ

## ஒன்றுகூடல்

மீள் பரிசீலனைக்கு அழைக்கப்பட்ட பட்டதாரிகள்,சமூக சேவைகள் சமூக நலத் துறை அமைச்சரை சந்திப்பதற்காக நாளை மறுநாள் திங்கட்கிழமை காலை 8மணிக்கு யாழ். பெருமாள் கோவிலடியில் ஒன்று கூடுமாறு யாழ். பட்டதாரிகள் செயற்குழு அறிவித்துள்ளது.ஓ

## ஆண்டு நிறைவு விழாவும் பரிசில் வழங்கலும்

கரவெட்டி தஞ்சை ஐங்கரன் அறநெறி பாடசாலையின் மூன்றாம் ஆண்டு நிறைவு விழாவும் சைவ சமய அறிவு போட்டியில் பரிசு பெற்ற மாணவர்களுக்கும் பரிசில் வழங்கல் நாளை ஞாயிற்றுக்கிழமை 2.30 மணிக்கு அறநெறிப்பாடசாலைதலைவர் சி.செல்வரத்தினம் தலைமையில்நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதமவிருந்தினராகயாழ் மேல்திக அரசாங்கஅதிபர் ஆ.சிவசுவாமி, கௌரவ விருந்தினராக. யாழ்.பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன், கரவெட்டி பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.(ஓ-35)

# கலை இலக்கியப் பெருவிழா

நல்லூர் பிரதேச செயலக கலாசாரப் பேரவை நடாத்தும் கலை இலக்கியப் பெருவிழாவின் முதலாவது அமர்வு ''ஏரம்பு சுப்பையா அரங்கு'' இன்று சனிக்கிழமை மாலை 1.30 முதல் 5.30மணிவரை நல்லூர் சட்டநாதர் வீதியில் அமைந்துள்ள இளங் கலைஞர் மன்ற கலாமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்டச் செயலக மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி, சிறப்பு விருந்தினராக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம், கௌரவ விருந்தினராக லயன் இ.எஸ்.பி.நாகரட்ணம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

நிகழ்வில் மங்கல விளக்கேற்றல், தமிழ்த் தாய் வாழ்த்து, பேரவைக் கீதம், மங்கள இசை ஆகியவற்றைத் தொடர்ந்து நல்லை ஆதினம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞான தேசிக சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், நல்லூர் சென் பெனடிக்ற் தேவாலய வணபிதா அ.லோறன்ஸ் அடிகளார் ஆகியோரின் ஆசியுரை இடம்பெறும்.

தொடர்ந்து செல்வி தனசொரூபி நவரெத்தினத்தின் இசையரங்கு, கவிஞர் சோ. பத்மநாதன் தலைமையில்'' இழந்தனவும் இழப்பனவும்'' எனும் தலைப்பிலான கவியரங்கம், சதாவேல்மாறன் குழுவினரின் கூட்டிசை விருந்து, யா/கனகரட்ணம் மத்திய மகா வித்தியாலய மாணவர்களின்''மாலையிட்டாள் மணாளனுக்கே'' எனும் நாட்டிய நாடகம், அண்ணாவியார் மு.அருட்பிரகாசத்தின் நெறியாள்கையில்''மாவீரன் சங்கிலியன்'' எனும் தலைப்பிலான தென்மோடி நாட்டுக்கூத்து ஆகியன இடம்பெறும்.

அத்துடன் தேசிய கலை இலக்கியப் போட்டிகளில் வெற்றியீட்டியோருக்கான சான்றிதழ் வழங்கலும் இடம்பெறும். ஓ

# உதைபந்தாட்ட இறுதிப் போட்டியும் பரிசளிப்பு விழாவும்

(நீர்வேலி)

அண்மையில் யாழ்.மாவட்டத்தில் நடைபெற்ற உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டியில் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகம் எதிர் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழகம் A அணிகள் மோதின. அதில் 1:0 என்ற கோல் கணக்கில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்றது. மூன்றாவது இடத்தை ஞான முருகன் B பிரிவினர் பெற்றுக் கொண்டார்கள்.

மூன்று அணிகளுக்கும்,தனிப்பட்ட வீரர்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன. இப் போட்டியில் ஆட்டநாயகனாக றோயல் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த த. வெள்ளை, ஞான முருகன் விளையாட்டுக்கழகம் அணியைச் சேர்ந்த சேகர் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டு பரிசுகளும் வழங்கப்பட்டது.

புத்தூர் பிரதேசத்திற்கான போட்டியில் முதல் இடத்தை புன்னாலைகட்டுவன் செந்தா விளையாட்டுக்கழகம், இரண்டாம் இடத்தை ஈவினை கலையரசி விளையாட்டுக்கழகம் , மூன்றாவது இடத்தை ஈவினை அம்பாள் விளையாட்டுக்கழகம் நான்காவது இடத்தை நவக்கிரி எல்லாளன் விளையாட்டுக்கழகம் பெற்றுக் கொண்டன.

பெண்களுக்கான இறுதிப்போட்டியில் கரவெட்டிபிரதேச பெண்கள்அணியும்ஆனைக் கோட்டை கலைஒளி விளையாட்டுக்கழக அணியும் போட்டியிட்டது. இறுதியில் இரு அணிகளும் சம நிலையில் முடிக்கப்பட்டு இரண்டு அணிகளுக்கும் வெற்றி வழக்கப்பட்டு பணப் பரிசும் வெற்றிக்கேடயமும் தனிப்பட்ட வீராங்கனைகளுக்கு பரிசுவழங்கப்பட்டது. இப் போட்டியில் வலி கிழக்கு பிரதேச செயலர் சி.ஏ.மோகன்றாஸ் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்தார் வெற்றிபெற்ற கழகங்களுக்கும் பரிசில்கள் வழங்கிக் கௌரவித்தார். (ஓ-25)



இறுதிப் போட்டியில் வெற்றியீட்டிய ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணி வீரர்கள் வலி.கிழக்குப் பிரதேச செயலர் சி.ஏ. மோகன்றாஸ் உடனான அறிமுக நிகழ்வையும் விளையாட்டு அதிகாரி அனுராககாந்தன், பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் தலைவர் எஸ்.வேதாபரணம் ஆகியோர் நிற்பதையும் காணலாம்.



கரவெட்டி பிரதேச பெண்கள் அணி வீராங்கனைகள் பிரதேச செயலர் சி.ஏ.மோகன்றாஸ் உடனான அறிமுக நிகழ்வில் விளையாட்டு அதிகாரி அனுராககாந்தன் அருகில் நிற்பதையும் காணலாம்.

## நிதி ஒதுக்கீடு

(மருதங்கேணி)

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் யாழ்.மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கே.சிவாஜிலிங்கத்தின் நிதி ஒதுக்கீட்டில் வடமராட்சியில் 2 கோடி ரூபாவில் 15 வேலைத்திட்டங்கள் அமுல்படுத்தப்படவுள்ளன. (ஓ-35)

## கரித்தாஸ்-கியூடெக் கண்காட்சியும் விற்பனையும்

(யாழ்ப்பாணம்)

கரித்தாஸ் கியூடெக் நிறுவனத்தின் யாழ். சுனாமிப் பிரிவு, வாழ்வாதாரத் திட்டமும் தேசிய இளைஞர் சேவை மன்றமும் இணைந்து நடாத்திய தையல் பயிற்சியின் போது தைத்த ஆடைகளின் கண்காட்சியும் விற்பனையும் இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் காலை 10.30 மணி தொடக்கம் 4.30 மணிவரையும் மாரீசன் கூடல் றோ.க. பாடசாலையில் அதிபர் உதயகுமார் தலைமை யில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் பிரதேச செயலக அபிவிருத்தித்திட்ட இணைப்பாளர் திருமதி பொன்மதி சிவகுமாரனும் கௌரவ விருந்தினர்களாக தேசிய இளைஞர் சேவை மன்ற உதவிப் பணிப்பாளர் சிவதட்சணாமூர்த்தி, கைத்தொழில் அபிவிருத்திச் சபை உதவிப் பணிப்பாளர் ஜெயமனோன், பண்டத்தரிப்பு ப.நோ.கூ. சங்க தலைவர் த.செல்வரத்தினம் ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாக கரித்தாஸ் கியூடெக் வாழ்வாதாரத் திட்ட முகாமையாளர் ந.தவராஜகுமார்,திட்ட இணைப்பாளர் ம.பத்மசேகரி, உயிர்ப்பூட்டல் இணைப்பாளர் செ. ஜோசப்பாலா ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

அத்துடன் சான்றிதழ் வழங்குதலும் இடம்பெறவுள்ளது. ஓ




# ஜீவனோபாயத்திற்கு உதவி கோரி அரச சார்பற்ற நிறுவனங்களிடம் வேண்டுதல்

(பொன்னாலை)

பொன்னாலை மற்றும் திருவடிநிலை கடற்பரப்பில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுவரும் தொழிலாளர்களுக்கு வாரத்தில் இரண்டு அல்லது மூன்று தினங்களுக்கு திடீர் திடீரென்று தொழிற் தடை விதிக்கப்பட்டு வருவதாக அப் பகுதி கடற்தொழிலாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

பொன்னாலை மற்றும் திருவடிநிலை கடற்கரைகளில் நிலைகொண்டிருக்கும் கடற்படையினரிடம்''கடற்பாஸ்'' மற்றும் உரிய ஆவணங்கள் சமர்ப்பித்து பூரண அனுமதிபெற்ற பின்னரே தாம் தொழிலுக்குச் சென்று வருவதாகவும் இவ்வாறு சென்று வந்தாலும் திடீர் திடீரெனத் தடைகள் விதிப்பது தமது அன்றாட ஜீவனோபாயத்தைப் பாதிக்கும் விடயமாக அமைந்திருக்கிறதென்றும் அவர்கள் கவலைதெரிவிக்கின்றனர்.

தற்போது ஆழ்கடல் மீன்பிடிக்கு அனுமதி வழங்கப்பட்டது. வெறும் பரவைக்கடல் மீன்பிடிக்கே அனுமதி வழங்கப்படுவதாகவும் இதனால் தமது அன்றாட ஜீவனோபாயமே பெருங் கேள்விக்குறியாக இருப்பதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

ஆழ்கடல் மீன்பிடிக்கு அனுமதி வழங்கப்பட்டால் நல்ல மீன்பிடி பாடு இருக்குமென்றும் இரண்டு தினங்கள் தொழிலுக்கு அனுமதித்து ,மூன்று தினங்கள் தடைவிதித்தாலும் தமது ஜீவனோபாயத்தைப் போக்கக் கூடியதாக இருக்குமென்றும் அவர்கள் நம்பிக்கை தெரிவிக்கின்றனர்.

தற்போது, நடைமுறைப்படுத்தப்படும் திடீர் தொழிற் தடையால் பாதிக்கப்படும் தமக்கு நிவாரணங்களை வழங்க அரச சார்பற்ற நிறுவனங்கள் முன்வர வேண்டுமெனவும் அவர்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (ஓ-49)

# ஆலயம், பாடசாலைகளுக்கு அருகில் "கள்" விற்பனை நிலையத்தை நிறுவ வேண்டாம்

## அராலி மத்தி கிராம மக்கள் விண்ணப்பம்

(பன்னாலை)

சங்கானை பனை -தென்னை வள அபிவிருத்தி நிலையம் தனது அராலி மேற்கு கிளையை அராலி மத்தியில் பாடசாலை ஆலயங்கள் மற்றும் குடிமனைகளுக்கு அண்மையில் நிறுவ முற்படுவதாக குற்றஞ் சாட்டப்படுகிறது.

கடந்த பல வருடங்களாகஅராலி மத்தியில் முன்பள்ளி ஆலயம் குடியிருப்புகளுக்கு மத்தியில் இருந்து வந்த மேற்படி கிளை அப்பகுதி மக்களின் எதிர்ப்பையடுத்து சில வருடங்களுக்கு முன் அங்கிருந்து அகற்றப்பட்டது.

இதுதொடர்பாக அராலி மத்தி கிராம அலுவலர் மற்றும் வலி மேற்கு பிரதேச செயலர் போன்றோரின் கவனங்களுக்கு கொண்டுவரப்பட்டதையடுத்து குறித்த கிளையை குடியிருப்புப் பகுதிகளில் நிறுவாது குடியிருப்புகளற்ற பிரதேசங்களில்-பொருத்தமான காணிகள் தெரிவு செய்து நிறுவுமாறு பிரதேச செயலர் அறிவுறுத்தியிருந்தார்.

இந்நிலையில் சில வருடங்கள் இயங்காதிருந்த கிளையை பொருத்தமான காணி எங்கேயும்கிடைக்கவில்லைஎன்பதைக் காரணங்காட்டி மீண்டும் பாடசாலை ஆலயங்கள் மற்றும் குடியிருப்புக்கள் நிறைந்த பகுதியில்சம்பந்தப்பட்டவர்கள் கொண்டு வந்து நிறுவுவதற்கு முற்படுவதாக குற்றஞ் சாட்டப்படுகிறது.

குறித்த கிளையை நிறுவுவதற்கான ஆரம்பகட்ட வேலைகள் தற்போது இடம் பெற்று வருவதாகவும் இதனை தடுத்து நிறுத்தி முன்னர் அறிவித்தது போன்று பொருத்தமான வேறு இடம் ஒன்றில் அமைப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறுவலி மேற்கு பிரதேச செயலரிடம் அப் பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ஓ-49)

# நோத் முதல் கோபல்லவா வரை (110)



### மனிங் காலத்து முதற்றிருத்தம்

மனிங் அவர்கள் அமைப்பைப் பார்த்தவுடன் உத்தியோக அங்கத்தவர் 14பேரும் உத்தியோகப் பற்றற்றவர் 23 பேரும் இருக்கிறார்கள் எனத் தோன்றும்.ஆனால் உள் நிலைமை வேறாய் இருந்தது. ஆள்பதியின் விரலசைய ஆடும் 14 உத்தியோக அங்கத்தவரோடு உத்தியோகப் பற்றற்ற ஐரோப்பியர் இருவரும், பறங்கியர் ஒருவரும் ஆங்கிலேயர் மயமான வர்த்தக சங்கப் பிரதிநிதியாய ஐரோப்பியரும், நியமன அங்கத்தவர் ஏழுபேரும் சேர்ந்து கொண்டால் நிலைமை வேறாய் அமையும் போலிருந்தது. அப்படியானால் உத்தியோக பற்றுள்ள பிரதிநிதிகள் நிலைமை 14 அல்ல. அவர்கள் வாக்களித்தால் 25பேரைத் தம் பக்கம் இழுக்கக் கூடியவராயிருந்தனர்.

எனவே இத்திருத்தத்தாலும் உத்தியோகப் பற்றற்றவர் நிலைமை திருப்திகரமாகவிருக்கவில்லை. அவர்கள் 23:14 எனக் கருதினர்.ஆனால் அது 12:25 ஆக ஆடி அசையவுங் கூடியதாக இருந்தது. சுருங்கக் கூறின் தெரியப்பெற்ற அங்கத்தவர் தொகை அதிகரித்த போதிலும் பொறுப்பு உத்தியோக அங்கத்தவர் கையிலேயே முன்போல இருந்தது எனலாம்.

இன்னும் உத்தியோகப் பற்றற்றவர் 23 பேரில் 16 அங்கத்தவரே தேர்தல் மூலம் தெரியப் பெற்றனர்.ஏனையவர் ஆள்பதியின் தயவினாலேயே அங்கத்துவம் பெற்றனர். அந்த ரீதியில் பார்த்தால் 16:21 ஆகவும் கொள்ளலாம். இன்னும் இலங்கையர் பிரதிநிதிகளிலும் பார்க்க உத்தியோக அங்கத்தவர் தொகையில் அதிகமாகவே இருந்தனர். அன்றி சிங்களவரும் கரைநாட்டினருக்கும் தமிழருள் இலங்கைத் தமிழருக்கும் மாத்திரம் ஆள்புல அமைப்பில் தேர்தலை வகுத்துவிட்டு ஏனைய சமூகத்தவருக்கு நியமன முறையும் வகுப்புவாத முறையும் அமைத்தமை முற்போக்காக இருக்கவில்லை என்றனர்.

ஆள்பதி மனிங் அமைத்த திருத்தத்தில் இருந்த குறைகள் பல கோணங்களில் ஆராயப்பட்டன . அதில் உத்தியோகப் பற்றற்ற பிரதிநிதிகள் முதன் முதலாக எண்ணிக்கைப் பலம் வாய்ந்தவராயிருந்தமை உண்மை தான். ஆனால் அவர்களுக்கு அதிகாரமோ பொறுப்போ வழங்கப்படவில்லை என்பதும் உண்மையே. இதில் உள்ள வேடிக்கை என்ன என்றால்,ஆள்பதி அவர்கள் ஏதாவது ஓரலுவல் முக்கியமானது எனக் கருதுவாராயின் அவர் உத்தியோகப் பற்றற்ற பிரதிநிதிகளைப் புறக்கணித்துவிட்டு உத்தியோக அங்கத்தவரை மாத்திரம் கொண்ட சபையில் அந்த அலுவலைத் தமது விருப்பத்தின் பிரகாரம் நிறைவேற்றியோ தடைப்படுத்தியோ கொள்ளலாம் என்பது. இன்னும் சட்டசபையின் வைகலின் போக்கு, வாதப் பிரதிவாதங்கள், இகலாட்டுப் பேச்சுக்கள் ஆகியன மனதுக்கு உகந்ததாக இல்லாவிட்டால், ஆள்பதி அவர்கள் உடனடியாகச் சட்டசபையின் வைகலைத்

**மீள் பார்வை**

தரிப்பிட அதிகாரம் உள்ள தலைவராயிருந்தார்.

ஆள்பதி மனிங் அவர்களின் திருத்தத்தின் வண்ணம் அமைந்த சட்டசபையில் ஆள்பதி அவர்களுக்கு 1920 ஆம் ஆண்டின் வேத்தியல் கற்பனையின் வண்ணம் பின்வரும் முறிகளை வீட்டாணை செய்ய அதிகாரம் வழங்கப்பட்டது.

1.தூய்மையான திருமணத்தில் இணைக்கப்பட்ட தம்பதிகளின் விவாகரத்துச் சம்பந்தமான முறி.

2.ஆள்பதி அவர்களுக்கு அன்பளிப்போ சலுகைப் பணமோ, நிலமோ வேறுவித தானமோ அளிக்க வழி வகுக்கும் முறி.

3. இலங்கைக் காசுத்தாள்கள் சம்பந்தமாகவோ, வங்கி நோட்டுகள் சம்பந்தமாகவோ எழுந்த முறிகள்.

4. வங்கிகள் சம்பந்தமான சங்கங்களை நிறுவுவதற்கோ, அரச யாப்பைத் திருத்துவதற்கோ, அரச யாப்பை மாற்றியமைப்பதற்கோ, வழிவகுக்கும் முறிகள்.

5. வேறுபாட்டுக் கடமைகளை விதிக்கின்ற முறிகள்.

6.மாட்சிமை தங்கிய மன்னபிரானுடன் ஏற்பட்ட இணைப்புக்கு முன்பின் முரணான விதிகளை வகுக்கும் முறிகள்.


7. மாட்சிமை தங்கிய மன்னபிரானின் தரைப்படை, கடற்படை, ஆகாயப்படைகளின் கட்டுப்பாடோ தடைகளோ சம்பந்தமான முறிகள்.

8. வேத்தியல் தற்கிழமை சம்பந்தமாகவோ,பிரித்தானிய குடிகளின் உரிமைகள் உடைமைகள், அன்னார் கப்பற் போக்கு, வர்த்தகம் என்பனவுக்குத் தப்பெண்ணம் உண்டாக்கக் கூடிய முறிகள்.

**க.சி.குலரத்தினம்**

9. ஐரோப்பிய குடிமக்களைப் பாதிக்காமல் உள்ள ஏதாவது நிபந்தனைகளை ஐரோப்பியரல்லாதாருக்கு விதித்து வேறுபாடு காட்டும் முறிகள்.

10.முன்னமே மனனர்பிரானின் அங்கீகாரத்தைப் பெறத் தவறிய அலுவலை மறுபடியும் குறிப்பிடும் முறிகள்.(தொடரும்)



சாவகச்சேரி மீசாலை விக்னேஸ்வரா மகாவித்தியாலய பரிசளிப்பு விழாவில், யாழ்.கல்வி வலயப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் மங்கல விளக்கேற்றுவதையும், பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட பேராசிரியர் க.கந்தசாமி உரையாற்றுவதையும், வித்தியாலய அதிபர் திருமதி சி.கந்தசாமி பரிசில் வழங்குவதையும், மாணவர்களின் கலைநிகழ்ச்சிகளையும் படங்களில் காணலாம்.

# தொல்லியல் நோக்கில் (16)

# கந்தரோடையும் கதிரமலையும்

இந் நாணயங்கள் பூநகரி வட்டாரத்திலுள்ள கல்முனை, மட்டுவில் நாடு,பாலாவி போன்ற இடங்க்ளில் கிடைத்தவை. இவையனைத்தும் சதுரவடிவில் அமைந்த செப்பு நாணயங்களாகும். இவற்றின் நீள அகலம், எடை என்பனவற்றில் பல வேறுபாடுகள். காணப்பட்டாலும் இவை சராசரி 1.8,1.6 செ.மீ. நீள அகலமும், 2.8 கிராம் எடையும் உடையன.

இவற்றின் முன்புறத்தில் விளிம்பைச் சுற்றி சிறு புள்ளிகளாலான வட்டமும், வட்டத்திற்குள் இரு குத்துவிளக்கும்,அதன் நடுவில் கிடையான அமைப்பில் மீன் சின்னம் காண்ப்படுகிறது. இந்த அம்சமோ நாணயத்தின் பின்புறத்திலும் காணப்படுகிறது. இதே சின்னங்கள் வட இலங்கையில் கிடைத்த வட்டவடிவில் உள்ள நாணயங்களிலும் காணப்படுகின்றன.

பிடுப்பே இந்நாணயங்களை இலங்கையை வெற்றி கொண்ட ஸ்ரீமாறாஸ்ரீபல்லவன் ஒன்பதாம் நூற்றாண்டில் வெளியிட்டிருக்கலாம் எனக் கூறுகிறார். ஆனால் தமிழகத்தில் இவன் வெளியிட்ட நாணயங்கள் வட்டவடிவில் இருப்பதுடன் முன்புறத்தில் இரு மீன் சின்னங்களுடன் பின்புறத்தில் தமிழில் "ஸ்ரீ அபனிகபசேகர கோளக" என்ற பெயரும் காணப்படுகிறது.

அந்த அம்சம் வட இலங்கையில் கிடைத்த நாணயங்களில் இருந்து முற்றிலும் வேறுபட்டது. வட இலங்கையில் கிடைத்த நாணயங்களில் பெரும்பாலானவை சதுர வடிவில் உள்ளன. இவ் வடிவ நாணயங்கள் தமிழ்நாட்டில் பெரும்பாலும் சங்க காலத்திலேயே வெளியிடப்பட்டன. ஆனால் சங்க கால நாணயங்களுக்கும் மேற்கூறப்பட்ட நாணயங்களுக்கும் அடிப்படையில் சில வேறுபாடுகள் காணப்படுகின்றன.சங்ககால நாணயங்களில் கோட்டுருவில் காட்டப்பட்டுள்ள மீன் சின்னம் இங்கே உருவமாக வார்க்கப்பட்டுள்ளது. சங்ககால நாணயங்களின் பின்புறத்தில் தனியொரு சின்னமாக இடம்பெற்றுள்ள மீன் சின்னம் இங்கே குத்து விளக்குகளுடன் நாணயத்தின் இருபுறம் இடம்பெற்றுள்ளது.

இதில் முக்கியமாகக் கவனிக்கப்படவேண்டிய அம்சம் இவ்வகை நாணயங்கள் வட இலங்கைக்கு வெளியே குறிப்பாகத் தமிழகத்தில் இதுவரை கிடைத்ததாகத் தெரியவில்லை. அத்துடன் இதில் காணப்படும் மீன்



லஷ்மி நாணயம் கந்தரோடை

சின்ன அமைப்பு பாண்டியர் வெளியிட்ட நாணயங்களில் வரும் மீன் சின்ன அமைப்புக்கு அன்னியமானதாகத் தெரிகிறது. இதனால் இவை வட இலங்கையில் வெளியிடப்பட்டதென்பது தெளிவாகிறது. இதற்கு இந் நாணயங்கள் இதுவரை வட இலங்கையில் மட்டும் கிடைத்திருப்பதையும் இங்கு சிறப்பாகக் கவனிக்க வேண்டும்.

சிங்கள மன்னர்கள் தாம் வெளியிட்ட நாணயங்களில் மீனையோ அல்லது குத்து விளக்கையோ முக்கிய சின்னமாகப் பயன்படுத்தியதற்கு இதுவரை சான்றுகள் இல்லை. மேலும் அவர்கள் ஆட்சிபுரிந்த அனுராதபுரத்திலும், தென்னிலங்கையிலும் இவை கிடைக்காது. வட இலங்கையிலேயே எண்ணிக்கையில் அதிகமாகக் கிடைத்துள்ளன. இதனால் இவை வடஇலங்கையில் ஆட்சிபுரிந்த தமிழ் மன்னனால் வெளியிடப்பட்டதெனக் கூறலாம். இந்நாணயங்கள் சங்க காலத்திற்குப் பின் கி.பி. பத்தாம் நூற்றாண்டுக்கு முன் வெளியிடப்பட்டிருக்கலாம் என்பதை அவற்றின் வடிவமைப்பிலும், இங்கு பயன்பாட்டிலிருந்த பிற நாணயங்களைக் கொண்டும் ஓரளவு கணிக்க முடிகிறது.

மிற்சினர் இவை 7 ஆம் நூற்றாண்டிலிருந்து வெளியிடப்பட்டவை எனக் கூறுகிறார். அவரது காலக் கணிப்பு பெருமளவு பொருத்தமாகவே உள்ளது. இதையொத்த சின்னங்களுடன் கூடிய வட்ட நாணயங்கள் சதுரவடிவிலிருந்து வட்ட நாணயங்களை வெளியிடும் நிலைமாறும் காலத்தைச் சுட்டிக்காட்டுகின்றன. இவை காலத்தால் சற்றுப் பிற்பட்டதுடன் அதை வெளியிட்ட மன்னர்களும் வேறாக இருக்கலாம் என எடுத்துக் கொள்ளலாம். தமிழரசு தொடர்பான இலக்கியங்கள் கி.பி 10 ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் கதிரமலையைத் தலைநகராகக் கொண்ட அரசு பற்றிக் கூறுகின்றன.

சமகாலப் பாளி இலக்கியங் களில் வரும் தமிழர் தொடர்பான சம்பவங் களும் இக் கருத்திற்கு துணை நிற்பதாக உள்ளன. அதை மேலும் உறுதிப்படுத்தும் நம்பகரமான சான்றாக மேற்கூறப்பட்ட நாணயங்கள் விளங்குகின்றன என்பதில் ஐயமில்லை.

### கதிரமலையும் கந்தரோடையும் ஒன்றா?

வரலாற்றாசிரியர்கள் பலரும் தமிழ் அரசின் ஆரம்ப தலைநகரமான கதிரமலை கந்தரோ டையைக் குறிப்பதாகக் கூறுகின்றனர். இதற்கு தமிழ் இலக்கியங்கள் சிலவற்றில் இதைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்த உக்கிரசிங்கன் வரலாறு கந்தரோடைக்கு வடக்கே உள்ள கீரிமலை, மாவிட்டபுரம், காங்கேசன்துறை என்பவற்றோடு தொடர்புபடுத்தி கூறப்பட்டிருப்பதையும் யாழ்ப்பாணக் குடாநாட்டில் புராதன தொல்லியல் சின்னங்களைக்கொண்ட இடமாக கந்தரோடை காணப்படுவதையும் காரணங்களாகக் காட்டுகின்றனர்.

**வரலாற்றுத் துறைப் பேராசிரியர்**
**ப.புஷ்பரட்ணம்**

ஆனால் உக்கிரசிங்கன் மாருதப்புரவல்லி கதையைக் கூறும் பல தரப்பட்ட இலக்கியங் களையும் ஒன்று திரட்டிப் பார்க்கும் போது இவர்களின பெயர், வம்சம்,நாடு, தலைநகர் அமைந்த இடம் என்பவற்றில் இலக்கியத்திற்கு இலக்கியம் வேறுபட்டிருப்பதைக் காணமுடிகிறது. (தொடரும்)

# மீள்பரிசீலனைக்கா.....

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

கல்விளாங்குளம் அ.த.க பாடசாலை ஆங்கிலம் (1), நூலகவிஞ் ஞானம் (1),ஆலங்குளம் அ.த.க பாடசாலை ஆரம்பக் கல்வி (1), ஆங்கிலம் (1),பழைய முறிகண்டி அ.த.க பாடசாலை ஆரம்பக் கல்வி(1), ஆங்கிலம் (1), புத்துவெட்டுவான் அ.த.க பாடசாலை ஆங்கிலம் (2),கணிதம் (1), சமூகக்கல்வி (1), தமிழ் (1), தெணியங்குளம் அ.த.க பாடசாலை ஆங்கிலம் (2), விஞ்ஞானம் (1), தமிழ் (1), இந்து சமயம் (1),

துணுக்காய் அ.த.க பாடசாலை ஆங்கிலம் (2), சமூகக்கல்வி (1),உயிலங்குளம் அ.த.க பாடசாலை ஆங்கிலம் (1), வவுனிக் குளம படிவம் 04 அ.த.க பாடசாலை ஆங்கிலம் (2), அம்பலப்பெருமாள்குளம் அ.த.க பாடசாலை ஆரம்பக் கல்வி (1),ஆங்கிலம் (1), கோட்டை கட்டியகுளம் அ.த.க.பாடசாலை ஆரம்பக் கல்வி (2), ஆங்கிலம் (1), விவசாய விஞ்ஞானம் (1), சமூகக்கல்வி (1),தமிழ் (1), இந்து சமயம் (1), நூலகவிஞ்ஞானம் (1),ஆரோக்கிய புரம் தமிழ் வித்தி. ஆரம்பக்கல்வி(1), ஆங்கிலம்(1), தேறாங்கண்டல் அ.த.க பாடசாலை ஆங்கிலம் (2), விஞ்ஞானம் (1), விவசாய விஞ்ஞானம்(1), அமதிபுரம் தமிழ் வித்தி. ஆரம்பக் கல்வி (1), ஆங்கிலம் (1).

அனிஞ்சையன்குளம் தமிழ் வித்தி. இரண்டாம் மொழி (1),ஆங்கிலம் (1), நூலகவிஞ்ஞானம் (1), ஐயன்கண்குளம் அ.த.க.பாடசாலை நூலகவிஞ்ஞானம் (1), மாமடுப் பழம்பாசி அ.த.க பாடசாலை ஆங்கிலம் (1), பெரியஆத்திமடு அ.த.க.பாடசாலை ஆங்கிலம் (1),தண்டுவான் அ.த.க.பாடசாலை கணிதம் (1), ஆங்கிலம் (1),பெரியகுளம்அ.த.க பாடசாலை ஆரம்பக் கல்வி (3), ஆங்கிலம் (1), ஒதியமலை அ.த.க பாடசாலை ஆங்கலம்(2),விஞ்ஞானம் (1), கணிதம் (1), இந்து சமயம் (1).

ஒட்டுசுட்டான் மகா வித்தி. ஆங்கிலம் (3), சித்திரம் (1), தகவல் தொழில்நுட்பம் (1), மாங்குளம் மகா வித்தி. சித்திரம் (1), சமூகக்கல்வி (1), ஆங்கிலம் (1),கரிப்பட்ட முறிப்பு அ.த.க பாடசாலை ஆங்கிலம் (2), கணிதம் (1), ஒலுமடு தமிழ் வித்தி ஆங்கிலம் (2), விவசாய விஞ்ஞானம் (1),கற்சிலைமடு அ.த.க பாடசாலை ஆரம்பக் கல்வி (3), ஆங்கிலம் (1), கணிதம் (1), சித்திரம் (1), நடனம் (1), இரண்டாம் மொழி (1), தகவல் தொழில்நுட்பம் (1), நூலகவிஞ்ஞானம் (1), முத்தையன்கட்டு வலது கரை அ.த.க பாடசாலை ஆரம்பக் கல்வி (2), ஆங்கிலம் (2),கணிதம் (1), சங்கீதம் (1), சித்திரம் (1), நடனம் (1), இரண்டாம் மொழி (1),சமூகக்கல்வி(1), தகவல் தொழில நுட்பம் (1), நூலகவிஞ்ஞானம் (1), அம்பகாமம் அ.த.க. .பாடசாலை ஆங்கிலம் (1).

கருவே லங்கண்டல் அ.த.க பாடசாலை ஆங்கிலம் (1),காதலியார் சமளங்குளம் அ.த.க பாட சாலை ஆரம்பக் கல்வி (1),ஆங்கிலம் (1), கூழாமுறிப்பு அ.த.க பாடசாலை ஆங்கிலம் (2), கணிதம் (1), சமூகக்கல்வி (1),முத்தையன்கட்டு இடது கரை அ.த.க பாடசாலை ஆரம்பக் கல்வி (2), ஆங்கிலம் (1), சித்திரம் (1), நடனம் (1),சமூகக்கல்வி (1),புலுமிச்ச நாத குளம் ஆரம்பக் கல்வி (1), ஆங்கிலம் (1), ஒட்டுசுட்டான் இ.த.க பாடசாலை ஆங்கிலம் (1),பனிக்கன்குளம் அ.த.க பாடசாலை ஆரம்பக் கல்வி (1), ஆங்கிலம் (1)

பெரியபுளி யங்குளம் அ.த.க பாடசாலை ஆங்கிலம் (2), கணிதம் (1),சமூகக்கல்வி (1), தமிழ் (1),மன்னா கண்டல அ.த.க பாட சாலை.ஆங்கிலம் (1),திரு முறிகண்டி இ.த.க பாடசாலை ஆரம்பக் கல்வி (4),ஆஙகிலம் (2), விஞ்ஞானம் (1),விவசாயம் விஞ்ஞானம் (1),

### மாவட்டம்:- மன்னார்

### வலயம்:- மன்னார்

மடுக்கரை அ.த.க.பாடசாலை ஆரம்பக் கல்வி (1), செட்டியார் கட்டையடம்பன் அ.த.க. பாடசாலை ஆங்கிலம் (1), இசமாலைத்தாழ்வு றோ.க.த.க பாடசாலை ஆங்கிலம் (1),ஊற்று வெளி அ.த.க.பாடசாலை .ஆங்கிலம்(1), அச்சன்குளம் அ.த.க.பாடசாலை. ஆங்கிலம (1),மளிகைப்பிட்டி அ.த.க.பாடசாலை ஆங்கிலம் (1),இலகடிப்பிட்டி றோ.க.த.கபாட சாலை ஆங்கிலம் (1), சூரியகட்டைக்காடு றோ.க.த. கபாடசாலை தமிழ் (1),

அளவைக்கை அ.த.க.பாடசாலை ஆரம்பக் கல்வ (1), ஆங்கிலம் (1), வாழ்க்கைப் பட்டான் கண்டல் றோ.க.த. கபாடசாலை ஆங்கிலம் (1), நறுவிலிக்குளம் அ.த.க.பாடசாலை தமிழ் (1),

மாவிலன்கேணி. றோ.க.த.க.பாடசாலை ஆங்கிலம்(1),தமிழ் (1), கற்கிடந்தகுளம் றோ.க.த.க பாடசாலை கணிதம் (1), ஆங்கிலம் (1), விவசாய விஞ் ஞானம் (1), முள்ளிக்குளம் றோ.க.த.க பாடசாலை ஆங்கிலம் (1), தமிழ் (1), சமூகக்கல்வி (1), பண்டாரவெளி அ.மு.க. பாடசாலை ஆரம்பக் கல்வி (1), விஞ்ஞானம் (1), கணிதம் (1), ஆங்கிலம் (1), விவசாய விஞ்ஞானம் (1), தமிழ் (1),

சவேரியர்புரம் றோ.க.த.க பாடசாலை கணிதம்(1), ஆங்கிலம் (1),முசலி மகா வித்தி. மன்னார் ஆங்கிலம் (1),

அரிப்பு றோ.க.த.க பாடசாலை ஆங்கிலம் (1), இரண்டாம் மொழி (1), தமிழ் (2), தகவல் தொழில்நுட்பம் (1), சிலாவத்துறை அ.மி. முஸ்லிம் பாடசாலை விஞ்ஞானம் (1),ஆங்கிலம் (1), தமிழ் (1),

மருதமடு அ.த.க. பாடசாலை ஆரமபக் கல்வி (1),கொக்குப்படையான் றோ.க.த.க ப ஆரம்பக் கல்வி (1), தலைமன்னார் பியர் அ.மு.க பாடசாலை ஆரம்பக் கல்வி (1),கணிதம் (1), ஆங்கிலம் (1), தமிழ் (1),கௌரி அம்பாள் அ.த.க.பாடசாலை ஆரம்பக் கல்வி (1) தமிழ் (1), தலைமன்னார் பியர் அ.த.க. பாடசாலை ஆங்கிலம் (1),புதுக்காமம் அ.த.க. பாடசாலை ஆங்கிலம் (1), சென் லோறன்ஸ் றோ.க.த. கபாடசாலை கணிதம்(1),

எருக்கலம்பிட்டி கிழக்கு அ.மு.க.பாட சாலை ஆரம்பக் கல்வி(1),கட்டுக்காரன் குடியிருப்பு றோ.க.த.கபாடசாலை ஆங்கிலம் (1),

கரிசல் றோ.க.த.க பாடசாலை ஆரம்பக் கல்வி(1),உயிர்த்தராசன்குளம் றோ. க.த. பாடசாலை கணிதம் (1),ஆங்கிலம்(1), இரண்டாம் மொழி(1),

### வலயம் - மடு

அடம்பன்.மத்திய மகாவித்தி. ஆரம்பக் கல்வி (1), ஆங்கிலம் (3), கணிதம் (2), இரண்டாம் மொழி (1), விஞ்ஞானம் (1), கலைப் பாடங்கள் (4), வழி.ஆலோசனையும்(1), நூலகவிஞ்ஞானம் (1), உடற்கல்வி (1), பெரியமடு மகா வித்தி.ஆரம்பக் கல்வி (3), ஆங்கிலம் (2), கணிதம் (1),

ஆண்டான்குளம் றோ.க.த.க பாடசாலை ஆரம்பக் கல்வி (3),ஆங்கிலம் (1),கணிதம் (1), இரண்டாம் மொழி (1), நூலகவிஞ்ஞானம் (1),

இலுப்பைக்கடவை அ.த.க.பாடசாலை ஆரம்பக் கல்வி (4), ஆங்கிலம் (1), கலைப் பாடங்கள் (3), கருங்கண்டல் றோ.க.த.க ஆரம்பக் கல்வி (3), ஆங்கிலம் (1), கலைப் பாடங்கள் (2), வழி.ஆலோசனையும் (1),

பரப்பாங்கண்டல் றோ.க.த.க பாடசாலை ஆரம்பக் கல்வி (1), ஆங்கிலம் (2),கணிதம் (1), வட்க்கண்டல் அதக. பாடசாலை ஆரம் பக் கல்வி (3),ஆங்கிலம்(2),வழி. ஆலோசனையும்(1),

தூய ஜோசப்வாஸ் மகா வித்தி.ஆரம்பக் கல்வி (1),ஆங்கிலம் (2), இரண்டாம் மொழி (2), விஞ்ஞானம்(1), கணிதம்(1), நூலக விஞ்ஞானம்(1), அடம்பன் றோ.க.த.க பாட சாலை ஆங்கிலம்(1),

ஆத்திமோட்டை அ.த.க.பாடசாலை ஆரம்பக் கல்வி (1), ஆங்கிலம் (1),

கள்ளியடி அ.த.க.பாடசாலை ஆரம்பக் கல்வி (1), ஆங்கிலம் (2),

கோவிற்குளம் அ.த.க.பாடசாலை ஆங்கிலம் (2), விஞ்ஞானம் (1), நூலகவிஞ் ஞானம்(1),

தேவன்பிட்டி றோ.க.த.க பாடசாலை ஆங்கிலம் (1), பரப்புக்கடந்தான் அ.த.க. பாடசாலை ஆங்கிலம் (1), பாப்பாமோட்டை றோ.க.த.க ஆங்கிலம் (1),பாலைக்குழி றோ.க. த.க .பாடசாலை ஆங்கிலம் (1), பாலையடி புதுக்குளம். றோ.க.த.க. பாடசாலை ஆரம்பக் கல்வி (1),

மராத்தி கன்னாட்டி அ.த.க.பாடசாலை ஆங்கிலம் (1), வெள்ளாங்குளம் அ.த.க. பாடசாலை ஆங்கிலம் (2), விஞ்ஞானம் (1), நூலகவிஞ்ஞானம் (1),

கூராய் அ.த.க.பாடசாலை ஆங்கிலம்(2), விஞ்ஞானம் (1), மூன்றாம்பிட்டி அ.த.க. பாடசாலை ஆங்கிலம் (2),கணிதம் (1),

காக்கையன்குளம் மகா வித்தி.ஆரம்பக் கல்வி (2), ஆங்கிலம் (2), விஞ்ஞானம் (2), பெரிய குஞ்சுக்குளம் றோ.க.தக. பாட சாலை ஆரம்பக் கல்வி (1), ஆங்கிலம் (1), விஞ் ஞானம் (1), பெரியமுறிப்பு அ.த.க பாடசாலை ஆங்கிலம்(1),

இரணைஇலுப்பைக்குளம் அ.த. க.பாட சாலை ஆங்கிலம்(1), கணிதம் (1), சின்ன வலயன்கட்டு அ.த.க.பாடசாலை ஆரம்பக் கல்வி (1), ஆங்கிலம் (2), கணிதம் (1),

விளாத்திக்குளம் அ.த.க. பாடசாலை ஆரம்பக் கல்வி (2), ஆங்கிலம் (1),

சின்னப்பண்டிவிரிச்சான்அ.த.க.பாடசாலை ஆங்கிலம்(2), கணிதம்(1), நூலகவிஞ்ஞானம் (1), பெரியபண்டிவிரிச்சான் மகா வித்த ஆங் கிலம் (1),விஞ்ஞானம்(1), இரண்டாம் மொழி (1), கலைப் பாடங்கள் (1), வழி.ஆலோசனையும் (1), நூலகவிஞ்ஞானம் (1),

தட்சனார்மருதமடு அ.த.க.பாடசாலை ஆங்கிலம் (2), கணிதம் (1), நூலகவிஞ் ஞானம்(1), நாவற்குளம் றோ.க.த.க பாடசாலை ஆரம்பக் கல்வி (2), ஆங்கிலம் (2), கணிதம்(1),

கட்டையடம்பன் றோ.க.த.க பாடசாலை ஆரம்பக் கல்வி (1), ஆங்கிலம் (2),

திருக்கேதீஸ்வரம் இந்துசபை த.க.பாடசாலை ஆரம்பக் கல்வி (1), ஆங் கிலம் (1), பாலம்பிட்டி அ.த.க.பாடசாலை ஆரம்பக் கல்வி(2), ஆங்கிலம் 1

கீரிசுட்டான் அ.த.க.பாடசாலை ஆரம்பக் கல்வி (1), ஆங்கிலம் (2), விஞ்ஞானம் (1),

முள்ளிக்குளம் அ.த.க.பாடசாலை ஆரம்பக் கல்வி (2), ஆங்கிலம் (2), விஞ்ஞானம்(1),

### மாவட்டம் :- கிளிநொச்சி

கிளிநொச்சி இந்துக்கல்லூரி ஆங்கிலம் (2), இரண்டாம் மொழி (1), இணைந்தகணிதம் (1), தகவல்தொழில்நுட்பம் (1), ஆங்கிலம்(1), வழி.ஆலோசனையும் (1), நூலகவிஞ்ஞானம் (1), கலைப் பாடங்கள் (1),

வட்டக்கச்சி மகா வித்தி. ஆரம்பக் கல்வி (3), ஆங்கிலம் (1),விஞ்ஞானம் (1),தகவல் தொழில்நுட்பம் (2), இரண்டாம் மொழி (1), ஆங்கிலம் (1),வழி. ஆலோசனையும் (1), நூலகவிஞ்ஞானம் (1),சமூகக்கல்வி (1),

இராமநாதபுரம் மகா வித்தி.ஆரம்பக் கல்வி (1), ஆங்கிலம் (2),தமிழ் (2),மனைப்பொருளியல் (1), இரண்டாம் மொழி (1), தகவல் தொழில நுட்பம்(1), வழி.ஆலோ சனையும் (1),

அக்கராயன் மகா வித்தி. ஆரம்பக் கல்வி (2), ஆங்கிலம் (3), தமிழ் (2), விஞ்ஞானம் (1), கணிதம் (4), சித்திரம்(1), இரண்டாம் மொழி(1), சமூகக்கல்வி (1), தகவல் தொழில் நுட்பம்(1), வழி.ஆலோசனையும் (1), நூலக விஞ்ஞானம் (1),உடற்கல்வி(1), கலைப் பாடங்கள்(3),

உருத்திரபுரம் மகா வித்தி. கணிதம் (1), ஆங்கிலம் (1), இரண்டாம் மொழி (1), சமூகக் கல்வி (1),சித்திரம் (2),தகவல் தொழில்நுட்பம் (1),நூலகவிஞ்ஞானம் (1),

வன்னேரிக்குளம் மகா.வித்தி.ஆங்கிலம் (1), விவசாயம் (1), நூலகவிஞ்ஞானம் (1),கனகபுரம் மகா வித்தி. சித்திரம் (1) இரண்டாம் மொழி (1) தகவல் தொழில்நுட்பம் (1), வழி.ஆலோ சனையும் (1), நூலகவிஞ்ஞானம்

இராமநாதபுரம் மேற்கு அ.த.க பாடசாலை ஆரம்பக் கல்வி (2),ஆங்கிலம் (1), தமிழ் (1), சித்திரம்(1),நூலகவிஞ்ஞானம் (1),சமூகக்கல்வி (1), புனித Bற்றிமா றோ.க.த.க பாடசாலை ஆங்கிலம் (1), சித்திரம் (1), இரண்டாம் மொழி (1), தமிழ் (1), வழி.ஆலோசனையும் (1), நூலக விஞ்ஞானம் (1), சமூகக்கல்வி (1),

திருவையாறு மகா வித்தி. ஆங்கிலம் (1), கணிதம்(1), இரண்டாம் மொழி (1), றோமன் கத்தோலிக்கம் (1),தகவல் தொழில்நுட்பம் (1), வழி.ஆலோசனையும் (1), நூலகவிஞ்ஞானம் (1),

அக்கராயன்அ.த.க பாடசாலை ஆரம்பக் கல்வி (4),ஆங்கிலம் (1) தமிழ் (2), கணிதம(1), நடனம் (1), இரண்டாம் மொழி (1), றோமன் கத்தோலிக்கம் (1), நூலகவிஞ்ஞானம் (1), இந்துசமயம் (1), சமூகக்கல்வி (1),

கனகாம்பிகைகுளம் அ.த.க பாடசாலை ஆரம்பக் கல்வி (3), ஆங்கிலம் (2), தமிழ் (1),கணிதம் (1), சித்திரம் (1),இரண்டாம் மொழி (1), றோமன் கத்தோலிக்கம் (1), நூலகவிஞ் ஞானம் (1),

பன்னக்கண்டி இ.த.க பாடசாலை ஆங்கிலம் (1), நூலகவிஞ்ஞானம் (1), ஸ்கந்தபுரம் இல 01 அ.த.க பாடசாலை (தரம்1-5) ஆரம்பக் கல்வி (1), ஆங்கிலம் (1), ஸ்கந்தபுரம் இல 02 அ.த.க பாடசாலை (தரம்1-6) ஆரம்பக் கல்வி (3), கணிதம்(1), ஆங்கிலம்(1), சமூகக்கல்வி (1), தமிழ் (1),சிவநகர் அ.த.க.பாடசாலை ஆங்கிலம் (1), நூலகவிஞ்ஞானம் (1),

வட்டக்கச்சி தெற்கு அ.த.க.பாடசாலை ஆரம்பக் கல்வி (1), குஞ்சுக்குளம் கணேஷா வித்தி.ஆங்கிலம் (1),புதுமுறிப்பு விக்கினேஸ்வரா வித்தி.ஆரம்பக் கல்வி (1),ஆங்கிலம் (1),சித்திரம் (1), நடனம் (1), இந்துசமயம் (1), றோமன் கத்தோலிக்கம் (1),

புனித அந்தோனியார் றோ.க.த.க பாடசாலை ஆங்கிலம (1),பாரதி வித்தி.ஆரம்பக் கல்வி(2), ஆங்கிலம்(2), இரண்டாம் மொழி (1), இந்துசமயம் (1), கலைப் பாடங்கள் (1),

ஆனைவிழுந்தான்குளம் அ.த.க பாடசாலை ஆரம்பக் கல்வி (1),ஆங்கிலம் (2), கணிதம் (1),சமூகக்கல்வி (1), தமிழ் (1),

ஊற்றுப்புலம் அ.த.க.பாடசாலை ஆரம்பக் கல்வி (1),ஆங்கிலம் (1),கணிதம் (1), நூலக விஞ்ஞானம்(1),சிவபாதகலையகம் அ.த.க பாடசாலை ஆரம்பக் கல்வி (1), ஆங்கிலம் (1),

யூனியங்குளம் அ.த.க பாடசாலை ஆரம்பக் கல்வி (2), கணிதம் (1), ஆங்கிலம் (1), தமிழ்(1), றோமன் கத்தோலிக்கம் (1), கண்ணகிபுரம் அ.த. க பாடசாலை ஆங்கிலம் (1), கணிதம் (1), ஆங் கிலம்(1), சமூகக்கல்வி (1), தமிழ் (1),செல்வா நகர் அ.த.க பாடசாலை ஆரம்பக் கல்வி (2), ஆங்கி லம் (1),

கிளிநொச்சி மகா வித்தி.ஆங்கிலம்(1), ஐயனார்புரம் அ.த.க பாடசாலை ஆரம்பக் கல்வி (1), ஆங்கிலம் (1), விஞ்ஞானம் (1), கணிதம் (1), மனைப்பொருளியல் (1), சமூகக்கல்வி (1), சாந்தபுரம் கலைமகள் வித்தி.ஆரம்பக் கல்வி (2), ஆங்கிலம் (1), அழகாபுரி வித்தி. ஆங்கிலம் (1),

மாயவனூர் வித்தி ஆரம்பக் கல்வி (1),ஆஙகலம் (1), இராமநாதபுரம் கிழக்கு அ.த.க பாடசாலை ஆங்கிலம் (1),தமிழ் (1), சங்கீதம் (1), சித்திரம் (1), நடனம் (1), விவசாய விஞ்ஞானம் (1), இரண்டாம் மொழி (1), சமூகக்கல்வி (1), இந்துசமயம் (1), றோமன் கத்தோலிக்கம் (1),

முருகானந்தா மகா வித்தி. ஆங்கிலம் (2),சித்திரம் (1),தமிழ் (1),சமூகக்கல்வி (1),தகவல் தொழில்நுட்பம்(1), நூலகவிஞ் ஞானம் (1),

கலவெட்டித்திடல் நாகேஸ்வரா வித்தி. ஆங்கிலம் (1),ஆரம்பக் கல்வி (1),சமூகக் கல்வி(1), கண்டாவளை மகா வித்தி. ஆங்கிலம் (1),சங்கீதம் (1),நடனம் (1), சமூகக்கல்வி (1),

தருமபுரம் மகா வித்தி. ஆங்கிலம் (2), தமிழ் (2), விஞ்ஞானம் (1), சங்கீதம் (1), இரண்டாம் மொழி (1),சமூகக்கல்வி (2), இந்து சமயம்(1), தகவல் தொழில்நுட்பம் (1), வழி. ஆலோசனையும் (1), நூலகவிஞ்ஞானம் (1), உடற்கல்வி (1),

முரசுமோட்டை அ.த.க பாடசாலை ஆங் கிலம் (1), பரந்தன் அ.த.க பாடசாலை ஆங்கிலம் (1),கணிதம் (1), நூலகவிஞ்ஞானம் (1),

கண்ணகையம்மன் வித்தி. ஆரம்பக் கல்வி (4),ஆங்கிலம் (2),விஞ்ஞானம் (1), கணிதம் (1),கடல்வள உயிரியல் (1), தமிழ்(1),இந்து சமயம் (1),உமையாள்புரம் அ.த.க பாடசாலை ஆங்கிலம் (1).

பெரியகுளம் ஐயனார் வித்தி. ஆரம்பக் கல்வி (1),ஆங்கிலம் (1), தமிழ் (1),நாகேந்திரா வித்தி. ஆரம்பக் கல்வி (1), கணிதம் (1), ஆங் கிலம் (1), சமூகக்கல்வி (1), நூலகவிஞ் ஞானம் (1), மயில்வாகனபுரம் அ.த.க பாட சாலை ஆரம்பக் கல்வி (2), புன்னை நீராவி அ.த.க. பாடசாலை கணிதம் (1),ஆங்கிலம் (2),சமூகக் கல்வி (1),பிரமந்தனாறு மகா வித்தி. விஞ்ஞானம் (1), இரண்டாம் மொழி (1), சங்கீதம் (1), தகவல் தொழில்நுட்பம் (1), நூலகவிஞ்ஞானம் (1),

கல்மடுநகர் அ.த.க பாடசாலை ஆங்கிலம் (1),கட்டைக்காடு அ.த.க பாடசாலை ஆரம்பக் கல்வி (2), ஆங்கிலம் (1),குமாரசாமிபுரம் அ.த.க பாடசாலை ஆரம்பக் கல்வி (1), ஆங்கிலம் (1), தம்பிராசபுரம் அ.த.க பாடசாலை ஆங்கிலம் (1),கல்லாறு தமிழ் வித்தி. ஆரம்பக் கல்வி (1),கணிதம் (1), ஆங்கிலம்(1),

மாசார் அ.த.க பாடசாலை ஆங்கிலம் (1), தமிழ் (1), நூலகவிஞ்ஞானம் (1),கிளாலி றோ.க.த.க ஆங்கிலம் (1), நூலக விஞ் ஞானம் (1), கோவில்வயல் சீ.சீ.த.க.பாட சாலை ஆரம்பக் கல்வி (1), கணிதம் (1), ஆங்கிலம் (1), தமிழ் (1), முகமாலை றோ.க. த.க பாடசாலை ஆங்கிலம் (1), முகாவில் அ.த.க பாடசாலை ஆரம்பக் கல்வி (1),கணிதம (1), ஆங்கிலம் (2),சமூகக்கல்வி (1), தமிழ் (1), மனைப்பொருளியல் (1), நூலக விஞ் ஞானம் (1), சோரன்பற்று சீ.சீ.த.க பாடசாலை ஆங்கிலம் (1),சோரன்பற்று கணேசா வித்தி ஆங்கிலம் (1), தமிழ் (1), தருமக்கேணி அ.த.க பாடசாலை ஆரம்பக் கல்வி (1), ஆங் கிலம் (1), சமூகக்கல்வி (1) நூலகவிஞ் ஞானம் (1),

இரணைதீவு றோ.க.த.க.பாடசாலை கி ஆரம்பக் கல்வி (1),கணிதம் (1),சமூகக்கல்வி (1), தமிழ் (1), நூலகவிஞ்ஞானம் (1),முழங் காவில் மகாவித்தி.ஆங்கிலம் (2),தமிழ் (2), விஞ்ஞானம் (2), கணிதம் (1), ஆரம்பக் கல்வி (1),சங்கீதம் (1), சித்திரம் (1), நடனம் (1), இரண்டாம் மொழி (1), றோமன் கத் தோலிக்கம் (1), கணக்கியல்(1),தகவல் தொழில் நுட்பம் (1), வழி. ஆலோ சனையும்(1),

நாச்சிக்குடா அ.த.க பாடசாலை ஆங்கிலம் (1) விஞ்ஞானம் (1), இந்துசமயம் (1), றோமன் கத்தோலிக்கம் (1), உடற்கல்வி (1),

வேரவில் இந்து மகா வித்தி.ஆரம்பக் கல்வி (1), விஞ்ஞானம் (1), கணிதம் (1), சித் திரம் (1), தமிழ் (1), சங்கீதம் (1), ஆங்கிலம் (1),நூலகவிஞ்ஞானம் (1),

செம்பன்குன்று அ.த.க பாடசாலை ஆரம்பக் கல்வி (1),கரியாலை நாகபடுவான் ஆங்கிலம் (3), விஞ்ஞானம்(1), கணிதம் (1),சித்திரம் (1), கிராஞ்சி அ.த.க பாடசாலை ஆரம்பக் கல்வி (1), விஞ்ஞானம்(1), ஆங்கிலம் (1), தகவல் தொழில்நுட்பம் (1),சமூகக் கல்வி (1), நூலக விஞ்ஞானம் (1), குமுழமுனை அ.த.க பாடசாலை ஆங்கிலம் (1), பல்லவராயன் கட்டு இ.த.க பாடசாலை ஆங் கிலம் (1), பொன்னாவெளி சைவப்பிரகாச வித்தி. ஆரம்பக் கல்வி (1), ஆங்கிலம் (1),

செல்லியாதீவு அ.த.க பாடசாலை ஆரம்பக் கல்வி (1), கணிதம் (1), ஆங்கிலம் (1), வர்த்த கம் (1), நூலகவிஞ்ஞானம் (1), ஞானிமடம் அ.த.க பாடசாலை கிளி நொச்சி ஆங்கிலம் (1), கணிதம் (1),ஆரம்பக் கல்வி (1),சமூகக்கல்வி (1), தமிழ் (1).

கறுக்காய்தீவு அ.த.க. பாடசாலை ஆரம்பக் கல்வி (1), ஆங்கிலம் (1), தமிழ் (1),கௌதாரி முனை அ.த.க பாடசாலை ஆங்கிலம் (2),பூநகரி நல்லூர் அ.த.க பாடசாலை ஆரம்பக் கல்வி (1), விஞ்ஞானம் (1), ஆங்கிலம் (1), சித்திரம் (1), தமிழ் (2), அளவையியல்(1), நூலக விஞ்ஞானம் (1),

சாமிபுலம் அ.த.க பாடசாலை ஆங்கிலம் (1),தம்பிராய் அ.த.க பாடசாலை ஆங்கிலம் (1),ஜெய புரம் அ.த.க.பாடசாலை ஆரம்பக் கல்வி (1), கணிதம் (1),ஆங்கிலம் (1), சங்கீதம்(1), நடனம்(1),விவசாயம் (1), இரண்டாம் மொழி (1), றோ மன் கத்தோலிக்கம் (1), நூலகவிஞ்ஞானம் (1),

சுண்ணாவில் அ.த.க பாடசாலை ஆங்கிலம் (1),முக்கொம்பன் அ.த.க பாட சாலை ஆரம்பக் கல்வி(1), விஞ்ஞானம்(1), ஆங்கிலம்(1), சமூகக்கல்வி (1), தமிழ் (1),

பூநகரி ஸ்ரீ விக்கிஸேஸ்வரா வித்தி. ஆங் கிலம் (1), விஞ்ஞானம் (1),கணிதம் (1), சித்திரம்(1),நடனம்(1), வர்த்தகம் (1),இரண்டாம் மொழி(1),றோமன் கத்தோலிக்கம்(1),

## உலகின் முதலாவது கடல் அலை மின் பிறப்பாக்கத் திட்டம் ஆரம்பம்

உலகின் முதலாவது வர்த்தக ரீதியான கடல் அலைசக்திப் பிறப்பாக்கத்திட்டமானது போர்த்துக்கல்கடற்கரைக்கு அப்பால்ஆரம் பித்துவைக்கப்பட்டுள்ளது. மீள் புதுப்பிக்கக்



கூடிய சக்திவளங்களை பெற்றுக்கொள்ளும் முயற்சியின் ஒரு அங்கமாகவே இத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. ஸ்கொட்லாந்து பொறியில் ஸ்தாபனமான *பெலாமிஸ்வேவ்* பவர்நிறுவனம்வட போர்த்துக்கல்லிலுள்ள அகுகடோராகடற்கரைக்கப்பால் 3மைல் தொலைவில்இந்த கடல்அலைசக்தி பிறப் பாக்கிகளை ஸ்தாபித்துள்ளது.

இத் திட்டத்தின்முதல்கட்டமாக 3கடல் அலை சக்தி பிறப்பாக்கிகளைப் பயன் படுத்தி 2.25மெகா வோட்ஸ்மின்சாரம் பிறப் பிக்கப்படவுள்ளது. இத் திட்டம் வெற்றிகர மாக அமையும் பட்சத்தில் மேலும் 25சக்திப் பிறப் பாக்கிகள் ஸ்தாபிக்கப்படும். ஒவ் வொன் றும் 140மீற்றர் நீளமும் 3.5மீற்றர் அகல முடையதாகும்.

கடல் அலை மூலமான இந்த சக்திப் பிறப் பாக்கத் திட்டம் முழுமையாக நடை முறைப் படுத்தப்படும் பட்சத்தில் ஒவ்வொரு வருடமும் 2பில்லியன் தொன் காபனீரொட்சைட் வெளியேற்றத்தை இல்லாதொழிக்கலாம். என தெரிவிக்கப்படுகிறது. (அ-5)

# மாமரங்களை கத்தரித்து விளைச்சலை கூட்டுவோம்

முக்கனிகளில் ஒன்றாகக் காணப்படுகின்ற மாம்பழமானது எம்மவர் உணவுப் பழக்கத்தில் பிரதான பங்கினை வகிக்கின்றது. எமது அனைத்துச் சடங்குகளுடனும் பிரதான பங்கு இப்பழத்திற்கு உண்டு. ஆனால் இன்று மாம்பழங்களின் விளைவு மற்றும் பருமன் என்பன குறைவடையத் தொடங்கியதுடன் சந்தையில் இரசாயனப் பாவனைக் குட்பட்ட சுவையற்ற பழங்கள் அதிக விலையில் கிடைக்கும் நிலை காணப்படுகின்றது. இவற்றால் உடல்நலத்திற்கு கேடு விளைவிக்கக் கூடிய நோய்கள் பரவும் நிலை காணப்படுகின்றது. இந்நிலையினை மாற்றி மாமரங்களை கத்தரித்து பராமரித்தல் அவசியமாகின்றது.

யாழ். குடாநாட்டில் பல்வேறுபட்ட வளர்ச்சி நிலையில் பயிற்றுவிக்கப்பட வேண்டிய, கத்தரிக்கப்பட வேண்டிய, மீள இளமையாக்கப்பட வேண்டிய மாமரங்கள் காணப்படுகின்றன. தற்போது கத்தரிக்கப்பட வேண்டிய நிலையில் பல மாமரங்கள் நம் மத்தியில் காணப்படுவதால் சுவிஸ் நாட்டின் அபிவிருத்திக்கும் ஒத்துழைப்பிற்குமான முகவர் அமைப்பின் (SDC) நிதி அனுசரணையுடன் மாமரங்களை கத்தரித்தலும் பயிற்றுவித்தலும் என்ற திட்டமொன்றை விவசாய திணைக்களம் நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறது.

யாழ். குடாநாட்டிலுள்ள சுமார் 72ஆயிரம் மாமரங்களில் 66ஆயிரம் மரங்கள் காய்க்கும் நிலையில் உள்ளன. இம்மரங்கள் ஒழுங்காக பராமரிக்கப்படாமலும் கத்தரிக்கப்படாமலும் இருப்பதனால் இவற்றிலிருந்து கிடைக்கக்கூடிய பழங்களின் எண்ணிக்கையில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. அத்துடன் எமது மாமரங்கள் உரிய பராமரிப்பின்றி சடைத்து வளர்ந்து செல்வதாலும் நோய் தாக்கத்திற்குட்பட்டு பட்ட கிளைகளுடன் நிற்பதாலும் அம்மரங்களை வெட்டி விறகுத் தேவைக்கும், பலகைத் தேவைக்கும் பயன்படுத்தும் துர்ப்பாக்கிய நிலையே இன்று இங்கு காணப்படுகின்றது.

இம் மாமரங்களிலிருந்து தற்போது சராசரியாக ஏக்கரிற்கு 16ஆயிரம் பழங்கள் கிடைக்கின்றது. மாமரங்களை கத்தரித்து பராமரிப்பதன் மூலம் இங்கிருந்து கிடைக்கும் பழங்க ளின் எண்ணிக்கையை 3 இலட்சத்திற்கு உயர்த்தலாம். மேலும் இக் கத்தரித்தல் செயன்முறை முற்றிய காய்களை மட்டும் அறுவடையைச் செய்ய உதவுகின்றது. இதனால் பழங்களை இரசாயனங்கள் இன்றி பழுக்க வைக்க முடியும்.

கிளைகளை கத்தரிப்பதால் மரம் பட்டு விடாதா? என்ற கேள்வி எம்மில் பலருக்கு தோன்றியிருக்கும். ஒழுங்கான முறையில் அதற்குரிய காலத்தில் கத்தரித்து தேவையான பசளையை மரத்திற்கு வழங்கினால் மரத்தின் காய்த்தலை தூண்டலாம்.

மாமரங்களில் கத்தரித்தல் பல நோக்கங்களை நிறைவேற்றவதற்காக மேற்கொள்ளப்படுகின்றது.

1) ஒரு மரக் கன்றை நாட்டியதிலிருந்து அது காய்க்கத் தொடங்கும் வரை அதன் வடிவம், உயரம், கிளைகளின் எண்ணிக்கை என்பவற்றை தீர்மானித்து அம் மரத்தை பயிற்றுவித்தலுக்காக கத்தரித்தல் செயற்பாடு மேற்கொள்ளப்படுகின்றது.

2) பராமரிப்பின்றி இருந்த பெரிய மரங்களின் கிளைகளிற்கு அதிக சூரியஒளியை பெறச்செய்வதன் மூலம் அதிகளவு பூக்களை தோற்றுவிப்பதற்கும், புதிய இளம் கிளைகளைத் தோன்றச் செய்வதன் மூலம் விளைச்சலை அதிகரிப்பதற்கும் கத்தரித்தல் என்ற செயற்பாடு பொதுவாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

3) மாமரங்கள் 100 வருடங்களிற்கு மேல் உயிர் வாழக்கூடியன. எனவே பராமரிப்பின்றிய பழமைவாய்ந்த மரங்களை பாதுகாப்பதற்காக கத்தரித்தல் மூலம் மீள இளமையாக்குதல் (மரத்தின் தாய்க்கிளையிலிருந்து 1/3 கிளைகளை மாறிமாறி 3 வருடங்களிற்கு அகற்றி புதிய கிளைகளை தோன்றச் செய்தல்) எனும் செற்பாடு மேற்கொள்ளப்படுகின்றது.

### கத்தரித்தல் காலம்

மாமரங்களில் அறுவடை முடிந்து துளிர் விட ஆரம்பிக்கும் முன் அவற்றை கத்தரிக்கலாம். பொதுவாக தை,மாசி, ஆனி, ஆடி மதங்கள் கத்தரிப்பதற்கு ஏற்றவை .

மழை காலமாயின் வெட்டிய பகுதியில் தொற்று ஏற்பட்டு மரத்தின் வீரியம் குறையுமாதலால் இக் காலத்தில் கத்தரித்தலை தவிர்ப்பது சிறந்தது.

ஒரு மரத்தை கத்தரித்து பயிற்றுவித்தலிலுள்ள பலன்களாவன,

- எமது கட்டுப்பாட்டிற்குள் மரத்தை வைத்திருக்க உதவுகிறது.
- மரத்திற்கு சிறந்த தோற்றம் கிடைக்கிறது.
- கிளைகளிற்கிடையில் சிறந்த காற்றோட்டத்தை ஏற்படுத்த உத்வுகிறது.
- அதிக தரமான பழங்கள் கிடைக்கிறது.
- ஒன்றுவிட்ட காய்த்தலை தவிர்த்து தொடர்சியான பழங்கள் பெற உதவுகிறது.
- இலகுவான பராமரிப்பு.
- இலகுவான அறு வடைக்கு உதவுகிறது.
- நோய்பீடைத்தாக்கத்தைக் குறைக்கிறது.

மாமரத் தத்திகள் பிரகாசமான ஒளியை விரும்புவதில்லையாதலால் மாமரத்தை கத்தரிப்பதன் மூலம் தத்திகளின் வாழிடங்களில் சாதகமற்ற சூழலை ஏற்படுத்தி குடித் தொகையைக் குறைக்கலாம்.

மாமரங்களில் குருவிச்சை ஒட்டுண்ணி வளர்தல் ஒரு பொதுவான பிரச்சனை யாகும். பல பாரிய மரங்களில் இவை அளவுக் கதிகமாக வளர்ந்து மரத்தின் கிளைகளை நிழற்படுத்துவதோடு நீர் மற்றும் போசணைப் பொருட்களிற்காகவும் போட்டி போடுவதால் மரத்தின் காய்க்கும் தன்மை குறைவடைகின்றது. இத்தகைய குருவிச்சை ஒட்டுண்ணியின் தொற்றலை வெட்டி நீக்குவதால் மரம் செழிப்பாக வளர்ந்து சிறந்த பலனை தர வழி ஏற்படும்.

### எவ்வாறான கிளைகளை கத்தரிக்க வேண்டும்?

- சூரிய ஒளி பிரதான கிளைக்கு கிடைப்பதை தடுக்கும் கிளைகள்
- பூக்காத கிளைகள்
- நோய் தாக்கிய கிளைகள்
- ஒட்டுண்ணி (குருவிச்சை) தாக்கிய கிளைகள்
- இறந்த கிளைகள்
- நலிவுற்ற கிளைகள்

ஒன்றுவிட்ட காய்த்தல் பழக்கமுடைய மரங்களில் பூவரும்புகளை அகற்றுதலும் கத்தரித்தலே. இவ்வாறான மரங்களில் கிளைகளை கத்தரித்து எமது பராமரிப்பிற்கு வசதியான தோற்றத்தைப் பெற்ற பின் ஒரு போகத்திற்கு அவை பூ அரும்புகளை உருவாக்கும்போது 50வீதமான வீரியமற்ற அரும்புகளை அகற்றுதல் வேண்டும். இவ்விடத்தில் சேமிக்கப்பட்ட உணவிலிருந்து அடுத்த போகத்திற்கு காய்கள் உருவாக்கி தன்னை தொடர்ச்சியான காய்த்தலுக்கு பழக்கப் படுத்திக் கொள்கிறது.

கத்தரித்தல் இரண்டு வகையில் மேற்கொள்ளப்படும்.

1.மென்கத்தரித்தல்

2.வன்கத்தரித்தல்

### மென்கத்தரித்தல்

மரங்களில் அறுவடைக்கு முன், அல்லது பின் பழங்கள் வந்த காம்புகள், பட்ட, காய்ந்த கிளைகள், நோய் , பீடைத் தாக்கமுடைய கிளைகள், நலிவுற்ற கிளைகள், ஒளி கிடைக்காத கிளைகள், உள்நோக்கிய கிளைகள் ஆகியவற்றை அகற்றும் முறையாகும்.

### வன்கத்திரித்தல்

பராமரிப்பற்ற மரங்களிற்கும், 3-5 வருடங்கள் கத்தரிக்கப்படாத மரங்களிற்கும் மேற்கொள்ளப்படும் கத்தரித்தல் முறையாகும்.

### கத்தரித்தல் முறைகள்

மைய முறையிலான திறந்த முறைக் கத்தரிப்பு

இதுவே மாமரத்திற்குரிய சிறப்பான கத்தரித்தல் முறையாகும்.

படிமுறை 1: 45° மேல் நிமிர்ந்து செல்லும் கிளைகள் யாவற்றையும் அகற்றல் வேண்டும்.



படிமுறை 2: அகற்றப்படும் கிளை தாய் கிளையிலிருந்து விரிந்து செல்லும் இடத்தில் மருவி வெட்டப்படல் வேண்டும்.



படிமுறை3:- அகற்ற வேண்டிய கிளையிலுள்ள இலைகள், சிறு கிளைகள் யாவற்றையும் அகற்றி கிளையின் பாரத்தை குறைத்த பின் தாய்க்கிளையிலிருந்து முறியாதவாறு வெட்டப்படல் வேண்டும்.இதற்கு கத்தரிக்கும் வாள் தவிர்ந்த வேறு உபகரணங்கள் பாவிப்பது தவிர்க்கப்படல் வேண்டும்.

படிமுறை 4:-கத்திரித்த பகுதிக்கு போடோ பசை பூசுதல் வேண்டும்.கத்தரித்து இரு வாரங்களிற்கு நீர் இறைத்தல் தவிர்க்கப் படவேண்டும்.

படிமுறை 5:- கத்தரித்த பகுதியிலிருந்து உருவாகும் புதிய கிளைகள், தேவையற்ற கிளைகள் தொடர்ச்சியாக அகற்றப்படல் வேண்டும்.

இறுதியாக மையத்தில் திறக்கப்பட்ட நன்கு சூரிய ஒளி கிடைக்கக் கூடிய அமைப்பு கிடைக்கும்.

*குறிப்பு 1:* ஒரு பழ மரத்திலிருந்து உச்ச பயனைப் பெற மரத்திற்கு மதிய வேளையில் பிரதான தண்டுப் பகுதிக்கு சூரிய ஒளி கிடைக்கும் வகையில்கிளைகளை அகற்றல்வேண்டும்.

*குறிப்பு 2* : போடோப்பசை தயாரித்தல்

முதலில்;

செப்புசல்பேற் -50கிராம்

நீறிய சுண்ணாம்பு -50கிராம்-

என்பவற்றைத் தனித்தனியாக எடுத்து தேவையான அளவு நீரில் கரைத்தல்

அதன்பின் சுண்ணாம்புக் கரைசலினுள் சிறிது சிறிதாக செப்புசல்பேற் கரைசலைச் சேர்த்தல்.தயாரிக்கப்பட்ட கரைசலை வெட்டிய பகுதிகளுக்கு பூசுதல்.

**சுந்தரவதனி நிமலன்**
நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்,
பிரதி விவசாய பணிப்பாளர் (விரி) அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

*குறிப்பு 3.* கத்தரிக்கப் பயன்படும் உபகரணங்கள் கொண்டிருக்கவேண்டிய இயல்புகள்

- உறுதியானதாகவும் கூரானதாகவும் இருத்தல்.
- பொருத்தமானதாக இருத்தல்
- சுத்தமானதாக இருத்தல்
- தொற்று நீக்கப்பட்டு இருத்தல்

இதுதொடர்பான மேலதிக விபரங்களை பெற விரும்பின் தங்கள் பகுதி விவசாயப் போதனாசிரியர்களை அணுகவும்.

# பழமரச் செய்கை

இவ்வருடம் யாழ். விவசாயத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட விவசாய விலங்கு வேளாண்மை கண்காட்சியில் பழப்பயிர்களை சிறந்த முறையில் நடுகை செய்வதுடன் அவற்றினை சிறந்த முறையில் பராமரித்து உச்சபலனைப் பெறுவதற்கான தொழில்நுட்பங்கள் பிரயோக ரீதியாகவும் செயல்முறை விளக்கங்களுடன் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது.

பழச்செய்கையாளர்கள், ஆர்வலர்கள் ஆகிய இருபாலரின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யக் கூடிய வகையில் இக் கண்காட்சியில் கீழ்வரும் தொழில்நுட்பங்கள் உட்புகுத்தப் பட்டிருந்தன.

- பழமரக்கன்று நடுகை செய்வதற்கான நடுகைக்குழி தயாரித்தல்,ஊடகம் தயாரித்தல், உரியமுறையில் நடுகை செய்தல்.
- ஆண்டுப் பயிராக வாழைப்பயிர்ச் செய்கை முறையில் நடுகை இடைவெளி போசணை முகாமைத்துவம் போன்ற பல பயிராக்கவியல் தொழில்நுட்பங்கள் ஒருங்கிணைக்கப்பட்டிருந்தன.
- பொருளாதார ரீதியாக இலாபம் தரக் கூடிய ரெட்லேடி இனபப்பாசிச் செய்கைக்கான பயிராக்கவியல் தொழில்நுட்பங்கள் கண்கட்சியில் காட்சிப்படுத்த ப்பட்டிருந்தன.

### உயர்விளைச்லைத் தரும் ரெட்லேடி பப்பாசி இனம்




பழமரங்களிலிருந்து உச்சப் பயனைப் பெற மரத்தின் உற்பத்தித் திறன் உள்ள சகல பாகங்களிற்கும் குறைந்தது 5-6மணித்தியால சூரிய ஒளியாவது கிடைக்க வேண்டும். எனவே பழமரங்களை கத்தரித்தல் வடிவமைத்தல் அவசியம். மா,தேசி, மாதுளை போன்ற பயிர்களுக்கான கத்தரித்தல் தொழில்நுட்பம், கத்தரித்தலினால் ஏற்படும் நன்மைகள் ஆகியன பற்றியும் விளக்கப்பட்டது.

- தேசிச் செய்கையில் உற்பத்தியை அதிகரிக்கும் தொழில் நுட்பங்கள் நான்கு மாவட்ட விவசாயப்பயிற்சி நிலையத்தில் பரிகரிக்கப்பட்டது. தொழில் நுட்பங்களான சேதனப் பசளையிட்டு பத்திரக் கலவையிடல், அசேதன திரவப்பசளை விசிறல்,அசேதனப் பசளையிடல், இரசாயன முறையில் நோய் பீடை முகாமைத்துவம்.

இப் பரிசோத னையில் நான்கு பரிகரிப்புகளும் ஒருங்கிணைத்து பிரயோகிக்கப்பட்ட தொகுதியில் மாதம் ஒன் றிற்கு மரம் ஒன்றிலிருந்து சரா சரியாக 15 கிலோகிராம் பழம் பெறப் பட்டது. இப் பரிசோதனைத் துண்டம் கண் காட்சியில் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

### இயற்கைப் பசளை இடப்பட்ட தேசி



உயர் விளைச்சலை தொடர்ந்து பெறுவதற்கு நீர் முகாமைத்துவம், போஷணை முகா மைத் துவம் முக்கிய மானது. தேசி, தோடை, மாதுளை,கொய்யா, மா,பப்பாசி போன்ற பழப்பயிர்களுக்கான பத்தரக்கலவையிடல்,சேதன, அசேதன பசளை அளவு, பசளையிடும் காலம், பசளை யிடும்முறை என்பன செயல்முறைப்படுத் தப்பட்டிருந்தன.

நன்கு பராமரிக்கப்பட்ட மாதுளை



பழமரங்கள் பல்லாண்டுப் பயிராகையால் இதன் இனப்பெருக்கத்தில் அல்லது நாற்றுக்கள் உற்பத்தி செய்வதில் தாய் தாவரத் தெரிவு அவசியம்.

தாய் தாவரம் எனப்படுவது விதைக்கான பழம் எடுக்கும் மரம் அல்லது ஒட்டுக்கிளை எடுக்கும் பழப்பயிராகும்.

**சி.சிவகுமார்**
பிரதி விவசாயப் பணிப்பாளர் (விரி)
யாழ்ப்பாணம்.

இதற்கென மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் பராமரிக்கப் பட்டு வரும் தாய்த்தாவரத் தெரிவுகளுடன் வேறு தாய்த் தாவரத் தெரிவுகள் தொடர்பான தகவல்கள் காட்சிப்படத்தப்பட்டிருந்தன.

# ஆசிரியர் சேவை உள்வாங்கல், பதவி உயர்வு தொடர்பில் சில நிபந்தனைகளுக்கு விதிவிலக்கு

## கல்விஅமைச்சு தீர்மானம்

ஆசிரியர் சேவையில் உள்வாங்கப்படுவதற்கும் அச்சேவையில் பதவி உயர்வு பெறுவதற்கும் விதிக்கப்பட்டுள்ள சில நிபந்தனைகளில் விதிவிலக்கு அளிப்பதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து தெரியவருவதாவது,

ஆசிரிய பிரமாணக்குறிப்புகளுக் கமைவாக சில நிபந்த னைகள் குறித்து கவனம் செலுத்தப்பட்டு அவற்றில் சில நிபந்தனைகளில் விதிவிலக்கை ஏற்படுத்தி இவ்வருட இறுதிக்குள் ஆசிரியர் சேவையில்பதவி உயர்வையும் உள்வாங்கலையும் மேற்கொள்ளல் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்பிரகாரம் ஆசிரியர் சேவையில் தரம் 2 வகுப்பு (ii), முதல் தரம் 2 வகுப்பு (i) மற்றும் தரம் 2 வகுப்பு முதல் முதலாம் தரத்தில் உள்ளவர்களும் ஏனையவர்களும் பயன்பெறுவர் எனவும் இத்தீர்மானத்தின் பயனாக மிக நீண்ட காலமாகபதவி உயர்வின்றி ஆசிரியர் பணிபுரிவோர் நன்மையடைவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (அ-5)

# அடுத்த மூன்று மாதங்கள் சுழற் காற்று வீசலாம்

## வளி மண்டல திணைக்களம் எச்சரிக்கை

எதிர்வரும் 3 மாதகாலப்பகுதிக்குள் நாட்டில் சுழல் காற்று வீசுவதற்கான வாய்ப்புக்கள் இருப்பதாக வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரித்துள்ளது.

கொழும்பில் நேற்று இடம் பெற்ற சந்திப்பின்போது வளிமண்டலவியல் திணைக்களத்தின் பிரதிப்பணிப்பாளர் எஸ்.ஆர்.ஜெயசேகர இந்த எச்சரிக்கையை விடுத்தார். இந்த 3 மாதகாலப் பகுதிக்குள் மாலை நேரங்களில் சிறிய அளவிலான மழைவீழ்ச்சி காணப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஒக்டோபர், நவம்பர், டிசம்பர் ஆகிய மாதங்களில் சுழல் காற்று வீசுவதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளதாகவும் அவர் தெரிவித்தார். அத்துடன் சுழல்காற்று தொடர்பாக மக்களுக்கு அறிவிக்க விசேட திட்டங்களை முன்னேடுக்க உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# மன்னாரில் இருந்து தமிழகத்துக்கு அகதிகளாக மேலும் 22 பேர்

இலங்கையில் இருந்து மேலும் 22 பேர் நேற்று முன்தினம் அகதிகளாக இராமேஸ்வரம் வந்தடைந்ததாக தமிழகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இவர்கள் மன்னாரில் இருந்து படகுகள் மூலம் அரிச்சல் முனைக் கடற்கரைப் பகுதியைச் சென்றடைந்துள்ளனர்.

இவ்வாறு வந்தடைந்தவர்கள் தனுஷ்கோடி காவல் நிலையத்தில் பதிவு செய்ததன் பின்னர் கியூ பிரிவு காவல் துறையினரி னால் மண்டபம் அகதிமுகாமில் ஒப்படைக்கப்பட்டனர். 6 குடும்பங்களைச் சேர்ந்த இவர்கள் மன்னரை சொந்த இடமாகக் கொண்டவர்கள் எனத் தெரியவந்துள்ளது.

இந்த அகதிகளில் 7 ஆண்கள், 8 பெண்கள் மற்றும் 7 குழந்தைகளும் அடங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை இலங்கையில் இருந்துஅகதிகளாக வருவோரின் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்து வருவதாக தமிழகச் செய்திகள் தெரிவிக்கின்றன. (அ)

# ஒப்பந்த அடிப்படையில் மீள் நியமன விண்ணப்பம் கோரல்-2009

## சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர் பிரிவு–யாழ்ப்பாணம்

எம்மால் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தில் யாழ்ப்பாணம் சுகாதார சேவைகள் பிராந்தியப் பணிப்பாளர் பிரிவில் உள்ள வைத்தியசாலைகளில் உள்ள வெற்றிடங்களிற்கு ஒப்பந்த அடிப்படையில் மீள் நியமனத்தில் 2009 ஆம் ஆண்டுக்காலத்தில் கடமையாற்றுவதற்கு கோரப்பட்ட பதவிகளிற்கான வயதெல்லை.

துணை மருத்துவ சேவைக்குவிண்ணப்பத்திகதியில் வயதெல்லை 67இற்கு உட்பட்டதாகவும், வைத்திய உத்தியோகத்தர்களுக்கான வயதெல்லை ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்ற 67வயதிற்கு மேற்பட்டவர்களும் விண்ணப்பிக்கலாம் என்பதனையும் சேர்த்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி

*வைத்திய கலாநிதி ஆ. கேதீஸ்வரன்,*
*பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்,*
*யாழ்ப்பாணம்.*

(சி/1607)

# அனுமதி மறுத்தமை கனடா அரசின் பொறுப்பற்ற தன்மையை காட்டுகிறது

## கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன கடிதம்

(கொழும்பு)

கனடா அரசு தனக்கு நுழைவு அனுமதி அளிப்பதற்கு மறுத்துள்ளதானது அதன் பொறுப்பற்ற தன்மையை எடுத்தக்காட்டுவதுடன் ஆபத்தானதும் கூட என்று இடதுசாரி கட்சியின் தலைவரும் நவசமாஜ கட்சியின் பொதுச்செயலாளருமான விக்கிரமபாகு கருணாரட்னா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் கனேடிய தூதுவருக்கு எழுதிய கடிதத்தில் மேலும் தெரிவித்திருப்பதாவது,

பாதுகாப்பு காரணங்களை முன்வைத்து எனக்கு கனடாவுக்கான தற்காலிகநுழைவு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. நான் லண்டனில் பொங்கு தமிழ் நிகழ்வில் கலந்து கொண்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் நான் அதில் கலந்து கொள்ள்வில்லை.

தமிழ் மக்களையும் சிங்கள மக்களையும் ஒருங்கிணைக்கும் முகமாகவே நான் கூட்டங்களில் பங்கேற்றிருந்தேன். நான் விடுதலைப்புலி உறுப்பினர் என்பதற்கு உங்களிடம் உறுதியான ஆதாரங்கள் இருப்பின் அதனை மகிந்த அரசுடன் பகிர்ந்து கொள்ளவும். இது தொடர்பில் அரசு நடவடிக்கை எடுக்காதது ஆச்சரியமானது.

உங்கள் குற்றச்சாட்டுக்களை போர் வெறிகொண்ட மஹிந்த அரசே முக்கிய மானதாக கருதவில்லை.

ஏதாவது ஜனநாயக உணர்வு உங்களிடம் எஞ்சியிருந்தால் உங்களின் இந்த பொறுப்பற்றதும் ஆபத் தானதுமான முடிவை எதிர்த்து மீண்டும் விண்ணப்பிக்கும் உரிமை எனக்கு உள்ளதா என்பதை தெரியப்படுத்தவும் என்று அவர் தனது கடிதத்தில் கேட்டுள்ளார். (அ-5)

# இந்துக் கோயில் சிலை உடைப்பை நேரில் கண்ட சாட்சியான தமிழ் இளைஞன்

## பயங்கரவாதத் தடுப்புப் பிரிவால் கைது

(கொழும்பு)

கிராண்ட்பாஸ் பகுதியில் அமைந்துள்ள இந்துக்கோயில் ஒன்றிற்குள் புகுந்து தெய்வ உருவச்சிலைகளை உடைத்துச் சேதமாக்கிய சம்பவத்தை நேரில் கண்ட சாட்சியான தமிழ் இளைஞன் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

கிராண்ட்பாஸ் டீ மெல் மாவத்தையில் அமைந்துள்ள சிறீ முத்துமாரியம்மன் கோயிலிலுள்ள உருவச்சிலைகளே கடந்த 3 ஆம் திகதி உடைக்கப்பட்டன. கோயிலின் வருடாந்த மகாகும்பாபிஷேகம் மறுநாள் நடைபெறவிருந்த நிலையிலேயே 3 ஆம் திகதி அதிகாலை 1.30 மணியளவில் சிலைகள் உடைக்கப்பட்டன.

இச்சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் பிக்கு ஒருவர் உள்ளிட்ட மூவரை மறுநாள் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

சிலைகள் உடைக்கப்பட்டதை நேரில் பார்த்த சாட்சியான முச்சக்கரவண்டி உரிமையாளரான சௌந்தரராஜன் பிரேம் நாத் (வயது 29) என்ற இளைஞனே பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கடந்த 18 ஆம் திகதி வியாழக்கிழமை சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

கொழும்பு ஹோட்டன் பிளேஸ் விகார மாதேவி பூங்காவுக்கு அருகில் கடந்த 16 ஆம் திகதி பஸ்ஸொன்றில் இடம்பெற்ற குண்டு வெடிப்புடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரிலேயே இந்த இளைஞன் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார். (அ-5)

# ஜனாதிபதித் தேர்தலில் குடியரசுக்கட்சி வேட்பாளர் மக்கேய்னுக்கு ஆதரவு அளிக்க முடிவு

## அமெரிக்க வாழ் தமிழ் பழைமைவாதிகள் அமைப்பு அறிவிப்பு

(கொழும்பு)

அமெரிக்காவில் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் குடியரசுக்கட்சி வேட்பாளரான ஜோன் மக்கேய்னுக்கு தமது ஆதரவை வழங்குவதாக அமெரிக்கா வாழ் தமிழ் பழைமைவாதிகள் என்ற அமைப்பினர் அறிவித்துள்ளனர்.

குடியரசுக் கட்சியைச் சேர்ந்த ஜோன் மக்கேய்ன் அடுத்த வருடம் ஜனவரி மாதம் அமெரிக்காவின் ஜனாதிபதியாகத் தெரிவானவுடன் தமது கவலைகள்குறித்து அனுதாபம் கொண்டிருப்பார் என்று தாம் நம்புவதாக அமெரிக்க பழமை வாத தமிழர்கள் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளனர்.

குறிப்பாக இலங்கையிலுள்ள தமிழர்கள் கொஞ்சம் கொஞ்சமாக இனப்படுகொலை செய்யப்பட்டு வருவதால் தாங்கள் மன அழுத்தத்துக்கு உள்ளாகியிருப்பதாகக் குறிப்பிட்டுள்ள அவர்கள் இல்ங்கையிலுள்ள தமிழ் மக்கள் மற்றும் அவர்களுடைய கலாச்சாரம் என்பன அழிவடைந்து வருவது தொடர்பாக தம்மைப் போன்றே மக்கேய்னும் அக்கறை கொள்வார் என்று தாம் நம்புவதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளனர்.

இலங்கையில் முடிவின்றித் தொடரும் உள்நாட்டுப்போர் அமெரிக்காவுக்கு ஒரு தலையிடியாக இருக்கும் என்ற மக்கேய்னின் நிலைப்பாட்டைத் தாம் ஏற்றுக்கொள்வதாகக் குறிப்பிட்டிருக்கும் அவர்கள் அதனால் ஜனாதிபதி தேர்தலில் அவருக்கு ஆதரவளிக்கத் தாம் தீர்மானித்திருப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதி மக்கேய்ன் தனது செல்வாக்கின் மூலம் இலங்கையில் நிலவும் போருக்கு முடிவு கண்டு . அனைத்து மக்களும் சமாதானமாக அங்கு வாழக்கூடிய ஒரு அரசியல் தீர்வைக்காண வழிசெய்வார் என்று நாம் நம்புகிறோம்.

அயர்லாந்து மற்றும் மத்திய கிழக்கு நாடுகளுக்கும் அனுப்பப்பட்ட முன்னாள் செனற்றர் ஜோர்ஜ் மீற்சேய்ல் போன்ற ஒருவரை மக்கேய்ன் ஜனாதிபதியானதும் இலங் கைக்கு அனுப்பி இரு தரப்புகளுடனும் பேசி இலங்கையில் சமாதானத்தை நிலை நாட்டுவதற்கான திட்டத்தை உருவாக்குவார் என நம்புகிறோம்.

முடிவின்றித் தொடர்ந்து வரும் உள் நாட்டுப் போரைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் எதனையும் கடந்த 60 வருடங்களாக ஆட்சி புரிந்து வரும் அரசாங்கங்கள் எடுக்க வில்லையெனவும் தமது அறிக்கையில் தெரிவித்துள்ள அவர்கள்.

இந்த நிலையில் கொழும்பிலிருந்து ஒரு நியாயமான அதிகாரப் பகிர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கை தமிழர்களுக்குக் கிடை யாது என்றும் பில் கிளின்ரன் ஜனாதிபதியாக இருந்த காலத்தில் லாரி கிங்குடனான நேர்காணலிலே இலங்கைத் தமிழர்கள் குறித்து ஜோன் மக்கேய்ன்தனது அனுதாபத்தை வெளிப்படுத்தியிருந்தமை தங்களுக்குத் தெரியுமென்றும் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

ஜோன் மக்கேய்ன் ஜனாதிபதியானதும் தனது முன்னைய உணர்வுகளை மனதில் கொண்டு அவற்றைத் தனது கொள்கையாக முன்னெடுத்துச் செல்வார் என்று தாங்கள் உறுதியாக நம்புவதாகவும் அமெரிக்க பழமை வாத தமிழர்கள் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளனர். (அ-5)

வீணை உயர்தரமானதுதான், வித்துவானும் தேர்ந்தவர்தான். ஆனால் ஒரு நரம்பு மட்டும் ஒரிடத்தில் தளர்ந்திருக்கிறதென்றால் வீணையின் நாதமும் கெடும். வித்துவானின் உழைப்பும் பாழ்படும். -அறிஞர் அண்ணா

வலம்புரி

## வேலையற்ற பட்டதாரிகளின் துயரம் நீக்கப்படுமா?

வட பகுதியிலுள்ள வேலையற்ற பட்டதாரிகள் தமக்கு எப்போது அரச நியமனம் கிடைக்கும் என காத்திருக்கும் பரிதாபம் நெஞ்சை அடைக்கிறது.

நாளாந்தம் அதிகரித்துச் செல்லும் விலையேற்றத்தின் மத்தியில் வேலையில்லாது இருந்தால் வாழ்க்கைச் செலவு எப்படி இருக்கும் என்பதைச் சிந்தித்துப் பார்ப்பதில் அதிக சிரமம் இருக்க முடியாது.

படித்துப் பல்கலைக்கழகம் சென்று பட்டம் பெற்ற தன் பிள்ளை தனது வறுமையை -கஷ்டத்தை போக்கும் என நம்பியிருந்த பெற்றோருக்கு பட்டம் பெற்ற பிள்ளை வீட்டிற்குள் இருந்தால் எப்படி இருக்கும்?

ஆக, பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை மேற்கொண்டதால் சாதாரண வேலைக்கும் செல்ல முடியாமல் -தகுதிக்கேற்ற வேலையும் இல்லாமல் அவஸ்தைப்படும் வேலையற்ற பட்டதாரிகளின் மனித வலுவைப் பயன்படுத்த வடக்கு மாகாண சபை உடனடியாக நடவடிக்கை எடுத்தாகவேண்டும்.

வடக்கு மாகாணத்தால் வேலையற்ற பட்டதாரிகளில் ஒரு பகுதியினருக்கு ஆசிரிய நியமனம் வழங்கும் பெயர் விபரம் வெளியானதும், தமது பெயர் வராத பட்டதாரிகளின் மனக் கவலை பன்மடங்கு அதிகரித்துள்ளது.

தம்மோடு பட்டம் பெற்ற ஒரு பகுதியினர் வேலைக்குச் செல்லும்போது தாம் வேலையில்லாமல் இருக்கின்றோமே என்ற அவர்களின் ஆதங்கம் நியாயமானதே.

எனவே ஒரு பகுதி பட்டதாரிகளுக்கு ஆசிரிய நியமனம் வழங்கப்பட்டதுபோல வேலையற்ற ஏனைய பட்டதாரிகளுக்கும் வடக்கில் இருக்கக் கூடிய திணைக்களங்கள், கூட்டுஸ்தாபனங்களில் உள்ள வெற்றிடங்களுக்கு நிரப்ப நடவடிக்கை எடுப்பதனூடாக நியமனம் வழங்கவேண்டும்.

இல்லையேல் பட்டதாரிகளின் ஆளுமைத் திறன் -ஆர்வம் -பெற்ற சிறப்பு பயிற்சி என்பவற்றை இந்த நாடு பயன்படுத்தாத பெரும் குற்றத்தைச் செய்த பழிக்குரியதாகும்.

பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை நிறைவு செய்த பின்னர் பல வருடங்கள் வேலையில்லாது இருக்கும் நிலைமை நம் நாட்டில் நீடிக்கவே செய்கிறது.

எனினும் தென்னிலங்கையில் இருக்கக் கூடிய பட்டதாரிகள் அரச வேலையை எதிர்பார்த்திருக்கவேண்டிய தேவை இல்லாத வகையில்· அங்கு தனியார் துறை, அரச சார்பற்ற அமைப்புக்கள், தொழில் அமைப்புக்கள் என பல்வகை நிறுவன அமைப்புகளில் வேலை வாய்ப்பைப் பெறும் சாத்தியம் உண்டு.

இதனால் பட்டத்தை முடித்துவிட்டு வேலையில்லை என ஏங்கிக் கொண்டு வீட்டுக்குள் அடங்கிக் கிடக்கும் தேவை அங்கு இல்லை.

ஆனால் யாழ்ப்பாணத்தில் இது வேறுவிதம். இங்கு அரச வேலையைத் தவிர வேறு எதுவுமே இல்லை என்பதே யதார்த்தம்.

கொழும்பு சென்று அங்கேயேனும் வேலை தேடுவதென்றால் அங்கிருக்கக் கூடிய தேடல், பதிதல், கைதாகுதல் என்ற குழப்பங்கள் அதற்கு தடை விதிக்கின்றன.

அவ்வாறாயின் வடபுலத்து வேலையற்ற பட்டதாரிகள் என்னதான் செய்ய முடியும்? எனவே வடபுலத்து வேலையற்ற பட்டதாரிகள் அனைவருக்கும் உடனடியாக நியமனம் கிடைப்பதற்கான ஏற்பாடுகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மேற்கொள்வது காலத்தில் கட்டாயமும் நீதியான பணியுமாகும்.

# பயங்கரவாதம் என்னும் அரசாங்கத்தின் இலக்கணத்தை ஏற்றுக்கொள்ள முடியாது

## மாவை சேனாதிராஜா தெரிவிப்பு

(கொழும்பு)

ஓர் இனத்திற்கான விடுதலைக்காக பல தசாப்தகாலமாக முன்னெடுக்கப்பட்டுக்கொண்டிருக்கின்ற விடுதலைப் போராட்டத்திற்கு பயங்கரவாதம் என்ற இலக்கணத்தை கற்பிப்பதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் கூட்டமைப்பு அரசாங்கத் தினரும் முயற்சி மேற்கொண்டு வருகின்றனர் என்று தமிழ் தேசியக்கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

தமிழர்களின் விடுதலைப்போராட்டத்தை பயங்கரவாதம் எனும் இலக்கணத்திற்குள் கொண்டுவந்து பயங்கரவாதத்தை அழிப்பதாகவும் அதற்கு சர்வதேசத்தின் ஆதரவை பெற்றுக் கொள்வதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் அவர் மேலும் சொன்னார்.

அவர்மேலும் கூறியதாவது,

இலங்கையில் தமிழர்களுக்கான உரிமைகளை பெற்றுக் கொடுப்பதற்காகவும் ஓர் இனத்தின் விடுதலைக்காகவுமே பல தசாப்தகாலமாக விடுதலைப்போராட்டம் நடத்தப்படுகின்றது.

இந்த விடுதலைப்போராட்டம் நியாயமானது என்று கடந்த காலங்களில் ஏற்றுக்கொள்ளப்பட்டு அதனடிப் படையில் ஒப்பந்தங்களை செய்து கொண்டு பேச்சுவார்த்தைகளும் நடத்தப்பட்டன. கடந்தகாலவரலாறுகளைப்பார்க்கின்றபோதுவிடுதலைப் போராட்டமாக சித்தரிக்கப்பட்ட, ஏற்றுக்கொள்ளப்பட்ட தமிழர்களின் போராட்டத்தை அரசாங்கம் பயங்கரவாதமாக சிந்திரிப்பதற்கும் அந்த பயங்கரவாதத்தை அழிப்பதற்காக சர்வதேசத்தின் ஆதரவை பெற்றக்கொள்வதற்கும் பல்வேறு முயற்சிக ளை மேற்கொண்டுவருகின்றது.

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுக்கூட்டத்தில் ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷவின்உரை ஓர் இனத்தின் விடுதலைப் போராட்டத்திற்கு பயங்கரவாதம் எனும் இலக்கணத்தை கற்பித்து அதற்கு சர்வதேச ஆதரவையும் பெற்றுக் கொள்வதற்கு முயற்சிகளை மேற்கொள்ளும்வகையில் அமைந்துள்ளது.

அமெரிக்கா உள்ளிட்ட சர்வதேசரீதியில் பயங்கரவாதம் என்ற பதத்திற்கு பல்வேறு அர்த்தங்கள் கற்பிக்கப்பட்டுள்ளன. எனினும் அரசாங்கம் விடுதலைப்போராட்டத்தையே பயங்கரவாதம் என்ற இலக்கணத்திற்குள் கொண்டுவருவதற்கு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

இலங்கையில் பல தசாப்த காலமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்ற ஆயுதப் போராட்டம் ஓர் இனத்தின் விடுதலைக்கான போராட்டம் என்பதை யாருமேமறுதலிக்கமுடியாது. (அ-5)

# வன்னிப் பெருநிலப்பரப்பு மக்களுக்கு நிவாரணம் உரிய முறையில் வழங்க நடவடிக்கை எடுக்கவும்

## கத்தோலிக்க திருச்சபை மாநாட்டில் தீர்மானம்

(கொழும்பு)

வன்னிப் பெரு நிலப்பரப்பில் இடம் பெயர்ந்துள்ள மக்களுக்கான நிவாரணங்கள் உரிய முறையில் வழங்கப்படவில்லை என்றும் உடனடியாக அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்எனவும் கத்தோலிக்க திருச்சபையின் மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டதாக யாழ். ஆயரின் செயலாளர் அருட் தந்தை எஸ்.ஏ.றொசான் வியாழக்கிழமை ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

இனப்பிரச்சினைக்கு சமாதான வழியில் தீர்வு காணப்பட வேண்டும் எனவும் இம்மாநாட்டில் கலந்துரையாடப் பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். இது தொடர்பாக அருட் தந்தை எஸ்.ஏ.றொசான் மேலும் தெரிவிக்கையில், கடந்த 18 ஆம் நாள் முதல் 24 ஆம் நாள் வரை கொழும்பில் கத்தோலிக்க திருச்சபையின் மாநாடு இடம்பெற்றது.

கத்தோலிக்க திருச்சபையின் எதிர்கால பணிகள் தொடர்பாகவே இம்மாநாடு இடம்பெற்றது. ஆனாலும் இம் முறை மாநாட்டில் தற்போதைய நிலைமைகள் குறித்தும் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

வன்னிப்பெரு நிலப்பரப்பில் இடம்பெயர்ந்த மக்களின் நிலைமைகள் குறித்து மன்னார் மறை மாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப், கிழக்கு மாகாணத்தில் இரண்டு வருடங்களுக்கு முன்னர் இடம்பெயர்ந்த மக்களின் தற்போதைய நிலைமைகள் தொடர்பாக திருகோணமலை, மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆகியோர் விளக்கமளித்தனர்.

யாழ். ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் வடக்கு-கிழக்கு மாகாணத்தின் தற்போதைய நிலைமை குறித்து விளக்க மளித்தார். இம்மாநாட்டிற்கு கத்தோலிக்க திருச்சபையின் ஆயர் சங்கத் தலைவரும் கண்டி மறை மாவட்ட ஆயருமான லியான பெர்ணாண்டோ தலைமை தாங்கியிருந்தார். திருச்சபையின் 11 மறை மாவட்ட ஆயர்களும் இம் மா நாட் டில் கலந்துகொண்டு சமயப்பணிகள் உட்படதற்போதைய சூழ் நிலை தொடர்பாக கருத்துக்களைமுன்வைத்தனர் என்றும் யாழ். ஆயரின் செயலாளர் அருட்தந்தை எஸ்.ஏ.றொசான் மேலும் தெரிவித்தார். (அ-5)

# வடக்கு- கிழக்கு மனித உரிமைக்ள் செயலகம் புலம்பெயர்ந்த தமிழர்களிடம் வேண்டுகோள்

(கொழும்பு)

புலம்பெயர் நாடுகளில் வாழும் ஈழத்தமிழர்களிடம் வடக்கு கிழக்கு உரிமைகள் செயலகம் (நிசோர்) வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பில் அந்த அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் ரமணன் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

இலங்கை இராணுவத்தால் பாதிக்கப்பட்டு தற்போது புலம்பெயர் நாடுகளில் வாழும் தமிழ் மக்களுக்கு இந்த வேண்டுகோளை வடக்கு கிழக்கு மனித உரிமைகள் செயலகத்திலிருந்து விடுக்கின்றோம்.

இலங்கைத் தீவில் தற்போது வாழ்ந்து வரும் தமிழ் மக்கள்இராணுவத்தின் கைகளில் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து வருகின்ற போதும் அதனை முன்வந்து சொல்லவும் முடியாத அளவுக்கு அந்த இராணுவம்தமிழ் மக்களின் கழுத்தை திருகிய வண்ணம் உள்ளது.

பாதிக்கப்பட்டபின் வெளி நாடுகளில் பாதுகாப்பை தேடிக் கொண்டவர்களாலேயே பூட்டப்பட்ட தமிழ் மக்களின் துயரத்தை வெளிக் கொண்டு வரமுடியும் .

உங்களுக்கு இலங்கை இராணுவத்தால் பாதிப்புக்கள் எக் காலத்தில் ஏற்பட்டதாயினும் அத னை ஆவணப் படுத்த விரும்புகின்றோம்.

ஆயினும் குறிப்பாக 2006 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திற்கு பின்னர் உங்களுக்கோ உங்களின் உறவுகளுக்கோ ஏற்பட்ட பாதிப் புக்களை வடக்கு கிழக்கு மனித உரிமைகள் செயலகம் ஆவணப்படுத்த விரும்புகின்றது.

நீங்கள் விரும்பினால் நீங்கள் தரும் விபரங்களின் இரகசியத்தன்மை பேணப்படும்.

அதேநேரம் நீங்கள் விரும்பினால் ஐ.நா.அமைப்புகளின் முன் உங்கள் அனுபவங்களை எடுத்துச் செல்வதற்கும் நாம் ஒழுங்குபடுத்திக் கொடுப்போம்.

முதற்கட்டமாக பின்வரும் மின்னஞ்சல் ஊடாக வடக்கு - கிழக்கு மனித உரிமைகள் செயலகத்துடன் தொடர்பு கொள்ளும் படி அன்புடன் கேட்கின்றோம்.

nesohr.victims@gmail.com இந்த மின்னஞ்சல் முகவரிக்கு நீங்கள் முன்வந்து உங்களுக்கோ உங்கள் உறவுகளுக்கோ ஏற்பட்ட பாதிப்புக்கள் தொடர்பில் எம்மிடம் தொடர்பு கொள்ளும்போது அது ஒட்டு மொத்த தமிழ் மக்க ளின் மனித உரிமைகளுக்கான உங்கள் பணியாகவும் இருக்கும் என்பதையும் இங்கு கூறவிரும்புகிறோம் என்றுஅதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)

## சுவாமி விவேகானந்தரின் ஆளுமை வளர்ச்சி

### ஆளுமையின் பல்வேறு நிலைகள்



வெளிச்சக்தி எதுவும் பாதிக்க முடியாத போது எந்த மாறுதலையும் உண்டாக்க இயலாத போது தான் சுதந்திரம் என்பது இருக்க முடியும். எல்லா நியதிகளுக்கும் எல்லா எல்லைகளுக்கும் எல்லா விதிகளுக்கும் காரண காரியம் எல்லாவற்றிற்கும் அப்பால் தான் சுதந்திரம் என்பது இருக்க முடியும். எனவே எந்த வகை மாறுதலுக்கும் உட்படாதது தான் சுதந்திரமாகவும் அழிவற்றதாகவும் இருக்க முடியும். இருக்கின்ற இது தான் அதாவது மனிதனது உண்மைத்தத்துவம்' தான் ஆன்மா. இது மாறுதல் இல்லாதது கட்டுப்பாடுகளுக்கு உட்படாதது. எனவே இதற்கு பிறப்பும் இல்லை இறப்பும் இல்லை.

# மீள்பரிசீலனைக்காக விண்ணப்பிக்க வேண்டிய பாடவகுதிக்கான வெற்றிட விபரங்கள்

## மாவட்டம்- யாழ்ப்பாணம்

### வலயம்:-யாழ்ப்பாணம

ஷூதரவத்தை விக்கினேஸ்வரா வித்தி. ஆங்கிலம் (2),

### வலயம்:- தென்மராட்சி

கெற்பலி அ.த.க பாடசாலை (மிருசுவில்) ஆங்கிலம் (1), கோவிலகண்டி மகாலக்ஸ்மி வித்தி. ஆரம்பக்கல்வி (1),எழுதுமட்டுவாள் அ.த.க பாடசாலை ஆங்கிலம் (2),இருதிடல் அ.த.க பாடசாலை ஆங்கிலம் (1), ஆரம்பக் கல்வி (1), கரம்பை அ.மி.த.க பாடசாலை (வரணி)ஆங்கிலம் (1),குடமியன் அ.த.க பாடசாலை விவசாயம் (2),மந்துவில் றோ.க.த.க பாடசாலை ஆங்கிலம் (1),மட்டுவில் தெற்கு சாந்தநாயகி வித்தி.ஆங்கிலம் (1), போக்கட்டி அ.த.க பாடசாலை ஆங்கிலம்(2),கைதடி சேது காவலர் வித்தி. ஆங்கிலம் (1), வரணி வடக்கு அ.த.க பாடசாலை ஆங்கிலம் (1), இயற்றாலை அ.மி.த.க பாடசாலை ஆங்கிலம் (2),

### வலயம் :-வடமராட்சி

உடுத்துறை மகா வித்தி.ஆரம்பக் கல்வி (2), ஆங்கிலம்(1), உடற்கல்வி(1), கடல்வள உயிரியல் (1),

ஆழியவளை சீ.சீ.த.க பாடசாலை அரமபக் கல்வி(2),ஆங்கிலம் (1), உடற்கல்வி (1),விஞ்ஞானம் (1), கடல்வள உயிரியல் (1),

செம்பியன்பற்று அ.த.க பாடசாலை ஆரம்பக் கல்வி (2),ஆங்கிலம் (1),விஞ்ஞானம்(1),

மருதங்கேணி இ.த.க பாடசாலை ஆரம்பக் கல்வி (2),ஆங்கிலம் (1),விஞ்ஞானம் (1), உடற்கல்வி (1),

தாழையடி றோ.க.த.க பாடசாலை ஆரம்பக் கல்வி (1),ஆங்கிலம் (1), விஞ்ஞானம்(1),

மாமுனை அ.த.க பாடசாலை ஆரம்பக் கல்வி (2), ஆங்கிலம் (1),

வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தி.ஆரம்பக் கல்வி (2), விஞ்ஞானம் (1) ஆங்கிலம் (2), கடல்வள உயிரியல் (1),

செம்பியன்பற்று றோ.க.த.க பாடசாலை ஆரம்பக் கல்வி(1),விஞ்ஞானம் (1), ஆங்கிலம் (1),

கேரவில் அ.த.க பாடசாலை ஆரம்பக் கல்வி (1),விஞ்ஞானம் (1), ஆங்கிலம் (1),

கட்டைக்காடு றோ.க.த.க பாடசாலை ஆரம்பக் கல்வி (1), ஆங்கிலம் (1),

வெற்றிலைக்கேணி றோ.க.த.க பாடசாலை ஆரம்பக் கல்வி (1), ஆங்கிலம்(1),

மணற்காடு றோ.க.த.க பாடசாலை யாழ்ப ஆரம்பக் கல்வி (1), குடத்தனை அ.த.க பாடசாலை ஆரம்பக் கல்வி (2),ஆங்கிலம் (1),

குடத்தனை கரையூர் றோ.க.த.க பாடசாலை ஆரம்பக் கல்வி (2),ஆங்கிலம் (1),

அம்பன் அ.மி.த.க பாடசாலை ஆரம்பக் கல்வி (2), ஆங்கிலம் (1), குடத்தனை கரையூர் அ.மி.த.க பாடசாலை ஆரம்பக் கல்வி (2),ஆங்கிலம் (1), விஞ்ஞானம்(1),

நாகர்கோவில் மகா வித்தி.ஆரம்பக் கல்வி (2),ஆங்கிலம் (1), கடல்வள உயிரியல் (1),

துன்னாலை தெற்கு அ.த.க பாடசாலை ஆங்கிலம் (1), கரவெட்டி கிழக்கு அ.த.க பாடசாலை ஆங்கிலம் (1), கொற்றாவத்தை அ.மி.த.க பாடசாலை ஆரம்பக் கல்வி (2),

துன்னாலை மேற்கு மெ.மி.த.க பாடசாலை ஆங்கிலம் (1), வல்வெட்டி இ.த.க பாடசாலை ஆங்கிலம் (1), தொண்டைமானாறு மகா வித்தி. ஆரம்பக் கல்வி(1), ஆங்கிலம் (1), கரவெட்டி ஸ்ரீ நாரதர் வித்தி. ஆங்கிலம் (1), கெருடாவில் இ.த.க.பாடசாலை ஆரம்பக் கல்வி (1), ஆங்கிலம் (1), பொலிகண்டி இ.த.க பாடசாலை ஆரம்பக் கல்வி (1),ஆங்கிலம் (1),

கட்டுபுலம் அ.த.க பாடசாலை ஆங்கிலம் (1),

அராலி கிழக்கு அ.மி.த.க பாடசாலை மனைப்பொருளியல் (1),

### வலயம் தீவகம்

நெடுந்தீவு மகா வித்தி.ஆங்கிலம் (1), விஞ்ஞானம் (1), இரண்டாம் மொழி (1), நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தி.ஆங்கிலம் (1), மனைப்பொருளியல்(1), தகவல் தொழில்நுட்பம் (1), நூலகவிஞ்ஞானம் (1),நெடுந்தீவு றோ.க. மகளிர் கல்லூரி ஆங்கிலம் (1),மாவலித்துறை றோ.க.த.க பாடசாலை ஆங்கிலம் (1),சுப்பிரமணிய வித்தி.ஆங்கிலம் (1),நெடுந்தீவு மங்கையர்க்கரசி வித்தி. ஆங்கிலம் (1), நெடுந்தீவு ஸ்ரீஸ்கந்தா வித்தி. ஆங்கிலம் (1),சீக்கிரியாம்பள்ளம் அ.த.க விததி. ஆங்கிலம் (1), விஞ்ஞானம் (1), தமிழ்(1),

கரம்பன் சண்முக்ானந்தா மகா வித்தி. ஆரம்பக் கல்வி (1),நூலகவிஞ்ஞானம் (1), அனலைதீவு சதாசிவம் மகா வித்தி. தமிழ் (1), நூலகவிஞ்ஞானம் (1),

நாரந்தனை கணேசா வித்தி. ஆங்கிலம் (1),அனலைதீவு தெற்கு அ.த.க பாடசாலை ஆங்கிலம்(1),சரவணை சின்னமடு றோ.க.த. பாடசாலை ஆங்கிலம் (1),தம்பாட்டி அ.த.க. பாடசாலை ஆங்கிலம் (1), விவசாயம் (1),

எழுவை தீவு முருகவேள் வித்தி. ஆங்கிலம் (1), வியாவில் சைவ வித்தி. ஆரம்பக் கல்வி (1), ஆங்கிலம் (1), ஊரி அ.த.மகா வித்தி.(காரைநகர்) ஆங்கிலம்(1),

புங்குடு தீவு மகா வித்தி. ஆங்கி லம்(1), சித்தி விநாயகர் மகா வித்தி. ஆங்கிலம் (1), புங்குடுதீவு கமலாம்பிகை வித்தி.ஆங்கிலம் (1),

ஸ்ரீ சுப்பிரமணிய மகளிர் வித்தி.ஆங்கிலம் (2),ஸ்ரீ நாகபூசணி வித்தி.ஆங்கிலம்(1),மண்டை தீவு மகா வித்தி.ஆங்கிலம் (1),வேலணை கிழக்கு மகா வித்தி. ஆரம்பக் கல்வி (1),நூலக வியலாளர் (1), சரவணை நாகேஸ்வரி மகா வித்தி. ஆரம்பக் கல்வி (2), மண்டை தீவு றோ.க.த.பாடசாலை ஆங்கிலம் (1),செட்டிபுலம் அ.த.க.பாடசாலை ஆங்கிலம் (1),

## மாவட்டம்:- வவுனியா

### வலயம்:-வவுனியா தெற்கு

மதீனா வித்தி. ஆரம்பக் கல்வி (1), ஆங்கிலம் (1), திருஞானசம்பந்தர் வித்தி. ஆங்கிலம் (1), இரண்டாம் மொழி (1), ஆரம்பக் கல்வி (1), அண்ணாநகர் பரமேஸ்வரா விததி. ஆங்கிலம் (2), கற்பகபுரம் அ.த.க பாடசாலை ஆங்கிலம் (1), சிவபுரம் அ.த.க.பாடசாலை ஆரம்பக் கல்வி (1), ஆங்கிலம் (1),முதலியார் குளம் றோ.க.த.க பாடசாலை ஆரம்பக் கல்வி (3), கணிதம் (1), விஞ்ஞானம் (1), பெரியகோமரசங்குளம் மகாவித்தி உடற்கல்வி (1),ஆசிகுளம் அதக பாடசாலை ஆங்கிலம் (1)கல்நாட்டினகுளம் அ.த.க பாடசாலை ஆங்கிலம் (1),ஆரம்பக் கல்வி (1), கந்தபுரம் வாணி வித்தி. விவசாய விஞ்ஞானம் (1),

செக்கடிப்புலவு அ.த.க பாடசாலை ஆங்கிலம் (1), இயங்கராவூர் அ.த.க பாடசாலை ஆங்கிலம் (1), அறபா வித்தி. ஆரம்பக் கல்வி (1),ஆங்கிலம் (2), வழி.ஆலோசனையும் (1),கூமாங்குளம் சித்திவிநாயகர் வித்தி. இரண்டாம் மொழி (1),நூலகவிஞ்ஞானம் (1), கணேசபுரம் விநாயகர் வித்தி.ஆங்கிலம் (1),பாரதிபுரம் பாரதி வித்தி. ஆரம்பக்கல்வி (1),

தாலிக்குளம் அ.த.க பாடசாலை. ஆங்கிலம் (1), ஸ்ரீநாகராஜா வித்தி. இரண்டாம் மொழி (1), விஞ்ஞானம் (1), பாவற்குளம் கணேஸ்வரா மகா வித்தி. ஆங்கிலம் (2), இரண்டாம் மொழி (1), ஆண்டியாபுளியங்குளம் அ.மு.க பாட சாலை. ஆங்கிலம் (2),விஞ்ஞானம் (1),நூலக விஞ்ஞானம் (1), கிறிஸ்தோகுளம் அ.த.க பாடசாலை ஆரம்பக் கல்வி (2),ஆங்கிலம் (2),விஞ்ஞானம் (1), தமிழ் (1),

இலுப்பைக்குளம் றோ.க.த.க பாடசாலை ஆங்கிலம் (2),விஞ்ஞானம் (1), மனைப்பொருளியல் (1), கன்னாட்டி அ.த.க.பாடசாலை ஆரம்பக் கல்வி (1), ஆங்கிலம் (2),

குருக்கள்புதுக்குளம் அ.த.க பாடசாலை ஆங்கிலம் (1), முகத்தான்குளம் அ.த.க பாடசாலை ஆங்கிலம் (1),நெடுங்கரைச் சேனை அ.த.க பாடசாலை ஆரம்பக் கல்வி (1), ஆங்கிலம் (1), நொச்சிக்குளம் றோ.க.த.க பாடசாலை ஆரம்பக் கல்வி (2), ஆங்கிலம் (1), பாவற்குளம் கலைமகள் வித்தி.ஆரம்பக் கல்வி (1),

பெரிபுளியாலங்குளம் அ.த.க பாடசாலை ஆங்கிலம் (1), சின்னத்தம்பனை அ.த.க பாடசாலை ஆங்கிலம் (1), ஆரம்பக் கல்வி (3),

தாருள் உலூம் முஸ்லிம் வித்திஆங்கிலம் (2),விவசாய விஞ்ஞானம் (1),ஆனைவிழுந்தான் அ.மு.க பாடசாலை ஆங்கிலம் (1),

பெரியகட்டு அ.த.க பாடசாலை ஆங்கிலம் (1),ஆரம்பக் கல்வி (1),திருமகள் வித்தி. ஆங்கிலம் (1),ஆரம்பக் கல்வி (1), அன்புபுரம் நாமகள் வித்தி.ஆங்கிலம் (1)ஆரம்பக் கல்வி (1),

பிரமனாளங்குளம் விக்கினேஸ்வரா விததி. ஆங்கிலம் (1),ஆரம்பக் கல்வி (1),

நீலியாமோட்டை சரஸ்வதி வித்தி. ஆங்கிலம் (1),ஆரம்பக் கல்வி (1), கணேசபுரம் விநாயகர் வித்தி. ஆங்கிலம் (1),கூழாங்குளம் நாவலர் வித்தி.ஆரம்பக் கல்வி (1), ஆங்கிலம் (1), நித்தியாநகர் லோகேஸ்வரா விததி. ஆரம்பக் கல்வி (1),ஆங்கிலம் (1),

மணியர்குளம் வித்தியானந்தா வித்தி. ஆரம்பக் கல்வி (2),ஆங்கிலம் (1),முகத்தான்குளம் விக்கினேஸ்வரா வித்தி.ஆங்கிலம் (1),கங்கான்குளம் ஸ்ரீ சுப்பிரமணியர் வித்தி ஆங்கிலம் (1), கற்காரன்குளம் இளங்கோ வித்தி. ஆங்கிலம் (1),ஆரம்பக் கல்வி (2), வீரபுரம் மணிவாசகர் வித்தி. ஆங்கிலம் (2),

இரண்டாம் மொழி (1),வழி. ஆலோசனையும் (1), அருவித்தோட்டம் சிவானந்தா வித்தி. ஆங்கிலம் (1),ஆரம்பக் கல்வி(5) இரண்டாம் மொழி (1), பூசணிப்பிட்டி தாயுமானவர் வித்தி. ஆங்கி லம் (1),ஆரம்பக் கல்வி (2), ஸ்ரீ சித்தி விநாயகர் வித்தி. ஆங்கிலம் (1), ஆரம்பக் கல்வி (1), புளியடிமுறிப்பு சோமஸ்கந்தா வித்தி.ஆங்கிலம் (1),ஆரம்பக் கல்வி (1),

### வலயம்: வவுனியா வடக்கு

புதுக்குளம் மகா வித்தி. விஞ்ஞானம் (1),ஆங்கிலம் (2), உடற்கல்வி (1),நெடுங்கேணி மகா வித்தி. கணிதம் (1),விஞ்ஞானம் (1), ஆங்கிலம் (2),உடற்கல்வி (1),சமூகக்கல்வி (2), தமிழ் (1), கல்மடு படிவம் 01 அ.த.க.பாட (கல் மடுக்குளம்) ஆங்கிலம் (1), தமிழ் (1), தரணிக்குளம் கணேசா வித்தி. கணிதம் (1),விஞ்ஞானம் (2),ஆங்கிலம் (2),உடற்கல்வி (1),அழகியல் (1), ஆரம்பக் கல்வி(1), ஓமந்தை மத்திய கல்லூரி ஆங்கிலம் (1), சமூகக்கல்வி (1), தமிழ் (1),ஆரம்பக் கல்வி (1),பூம்புகார் கண்ணகி வித்தி.ஆங்கிலம் (1),தமிழ் (1),

சண்முகானந்தா வித்தி. (சேமமடுக்குளம்) கணிதம் (1),ஆங்கிலம் (2), சமூகக்கல்வி (1),தமிழ் (1),ஆரம்பக் கல்வி (2), கனகராயன குளம் மகாவித்தி. கணிதம் (2), ஆங்கிலம் (2), உடற்கல்வி (1),தமிழ் (1),இந்துசமயம் (1),ஆரம்பக் கல்வி (2), தவசியாகுளம் அ.த.க பாடசாலை விஞ் ஞானம் (1),ஆங்கிலம் (1),உடற்கல்வி (1), சமூகக்கல்வி (1), தமிழ் (1),ஆரம்பக் கல்வி (1), சுந்தரபுரம் அ.த.க பாடசாலை விஞ் ஞானம் (1),ஆங்கிலம் (1),உடற்கல்வி (1),சமூகக் கல்வி (1),ஆரம்பக் கல்வி (1), கோவில் புளியங்குளம் முத்தமிழ் வித்தி. கணிதம் (1),ஆங்கிலம் (1),ஆரம்பக்கல்வி (2),

புளியங்குளம் இந்துக் கல்லூரி கணிதம் (1),விஞ்ஞானம்(1),ஆங்கிலம் (2), தமிழ் (1), (வேடர்) மாதர்பணிக்கர் மகிழங்குளம் அ.த.க பாடசாலை கணிதம் (1),விஞ்ஞானம் (1),ஆங்கிலம் (1),உடற்கல்வி (1),சமூகக்கல்வி (1),தமிழ் (1),இந்துசமயம் (1),

கிடாய்ச்சூரி கருவேப்பங்குளம் அ.த.க பாடசாலை ஆங்கிலம் (1), தமிழ் (1), சுந்தரபுரம் சரஸ்வதி வித்தி. விஞ்ஞானம் (1),ஆங்கிலம் (1),உடற்கல்வி (1),தமிழ் (1), ஆரம்பக் கல்வி(2), ஒலுமடு அ.த.க பாடசாலை கணிதம் (1), விஞ்ஞானம் (1),ஆங்கிலம் (1),உடற்கல்வி (1),சமூகக்கல்வி(1), தமிழ் (1),இந்துசமயம் (1),ஆரம்பக் கல்வி(2), விக்கினேஸ்வரா மகா வித்தி. (புளியங்குளம்)கணிதம் (1),விஞ் ஞானம் (1),ஆங்கிலம் (1),உடற்கல்வி (1),சமூ கக்கல்வி (1),தமிழ் (1),இந்துசமயம் (1), ஆரம் பக் கல்வி(2),

சன்னடம்பன் பாரதி வித்தி. கணிதம் (1),விஞ்ஞானம்(1),ஆங்கிலம்(1),உடற்கல்வி (1), சமூகக்கல்வி (1),தமிழ் (1),ஆரம்பக்கல்வி (1), கோயில்குஞ்சுக்குளம் வித்தி.விஞ்ஞானம் (1),ஆங்கிலம் (1),உடற்கல்வி (1),தமிழ் (1), இந்துசமயம் (1),ஆரம்பக் கல்வி (1),மதியாமடு விவேகானந்தா வித்தி. கணிதம் (1), விஞ்ஞானம் (1),ஆங்கிலம் (1),உடற்கல்வி (1),சமூகக்கல்வி (1), தகவல் தொழில்நுட்பம் (1),இந்து சமயம் (1), ஆரம்பக் கல்வி (1),பட்டிக்குடியிருப்பு அ.த.க பாடசாலை கணிதம் (1),விஞ்ஞானம் (1),ஆங்கிலம்(1), உடற்கல்வி(1),சமூகக்கல்வி (1),தமிழ் (1),தகவல் தொழில்நுட்பம் (1), இந்துசமயம் (1), ஆரம்பக் கல்வி (1), குளவிசுட்டான் அ.த.க பாடசாலை ஆங்கி லம் (1),உடற்கல்வி (1), சமூகக்கல்வி (1),தமிழ் (1),தகவல் தொழில்நுட்பம் (1),இந்துசமயம் (1),ஆரம்பக் கல்வி (1),

பெரியமடு அ.த.க பாடசாலை கணிதம் (1), விஞ்ஞானம்(1),ஆங்கிலம் (1), உடற்கல்வி (1),சமூகக்கல்வி (1),சித்திரம்(1), தமிழ் (1),த்கவல் தொழில்நுட்பம் (1), இந்துசமயம் (1),ஆரம்பக் கல்வி (1),

மாறாவிலுப்பை அ.த.க பாடசாலைகணிதம் (1),ஆங்கிலம்(1),உடற்கல்வி (1), அழகியல் (1),தமிழ் (1),தகவல் தொழில்நுட்பம் 1 ஆரம்பக் கல்வி (1),

## மாவட்டம்:-முல்லைத்தீவு

முல்லைத்தீவு மகா வித்தி. உடற்கல்வி (1), செம்மலை மகா வித்தி.ஆங்கிலம் (1), நடனம் (1), குமுழமுனை மகாவித்தி. ஆங்கிலம் (1), சித்திரம் (1), வற்றாப்பளை மகா வித்தி. கணிதம் (1),விஞ்ஞானம் (1), ஆங்கிலம் (1),நடனம் (1),சித்திரம் (1),அமபல வன்பொக்கணை அ.த.க பாடசாலை சங்கீதம் (1),நடனம் (1),சித்திரம் (1),

அளம்பில் றோ.க.த.க பாடசாலை ஆங்கிலம் (1),நடனம் (1), சித்திரம் (1),கொக்கிளாய் அ.த.க பாடசாலை நடனம் (1),கொக்குத்தொடுவாய் அ.த.க பாடசாலை சித்திரம் (1),முள்ளிவாய்க்கால் சித்திரம் (1),

உடுப்புக்குளம் தமிழ் வித்தி.ஆங்கிலம்(1), சங்கீதம்(1),சித்திரம் (1),உடற்கல்வி (1),

சிலாவத்தை றோ.க.த.க பாடசாலை ஆங்கிலம் (1),சித்திரம் (1),உடற்கல்வி (1), மாத்தளன் றோ.க.த.க பாடசாலை விஞ் ஞானம் (1), சங்கீதம் (1), கள்ளப்பாடு அ.த.க பாடசாலை கணிதம் (1),விஞ்ஞானம் (1),ஆங்கிலம் (1),சங்கீதம் (1), முல்லைத்தீவு றோ.க.த.க பாடசாலை விஞ்ஞானம் (1),ஆங்கிலம் (1),சங்கீதம் (1),வலைஞர்மடம் அ.த.க. பாடசாலை ஆங்கிலம் (1), வெட்டுவாய்க்கால் அ.த.க பாடசாலை கணிதம் (1), விஞ்ஞானம் (1),ஆங்கிலம் (1),சங்கீதம் (1),தமிழ் (1),

ஆறுமுகத்தான்குளம் அ.த.க பாடசாலை ஆங்கிலம் (1), கருநாட்டுக்கேணி அ.த.க பாடசாலை ஆங்கிலம் (1),கேப்பாப்புலவு அ.த.க பாடசாலை ஆங்கிலம்(1),

முள்ளிவாய்க்கால் கிழக்கு அ.த.க பாடசாலை ஆங்கிலம்(1), முறிப்பு தமிழ் வித்தி. ஆங்கிலம் (1),

முல்லைத்தீவு இ.த.க.வித்தி ஆங்கிலம் (1),

விசுவமடு மகா வித்தி.கணிதம்(1), விஞ்ஞானம் (1),ஆரம்பக் கல்வி (1),உடற்கல்வி (1),

உடையார்கட்டு மகா வித்த. கணிதம் (1),ஆங்கிலம் (2), சங்கீதம் (1), உடற்கல்வி (1),

இரணப்பாலை மகா வித்தி. கணிதம் (1),ஆங்கிலம்(2), சித்திரம(1), பாரதி வித்தி. ஆங்கிலம் (1),நடனம் (1),

வள்ளிபுனம் கனிஸ்ட இடைநிலை வித்தி. கணிதம் (1),விஞ்ஞானம் (1),ஆங்கிலம்(2),

சுதந்திரபுரம் அ.த.க பாடசாலை முல்லைத் ஆங்கிலம் (1), சித்திரம் (1), உடற்கல்வி (1),

ஆனந்தபுரம் அ.த.க பாடசாலை விஞ்ஞானம் (1),ஆங்கிலம் (1),உடற்கல்வி (1), தேவிபுரம் அ.த. க பாடசாலை தமிழ் (1), சித்திரம்(1), மந்துவில் அரசரட்ணம் வித்தி. உடற்கல்வி (1),

கைவேலி கணேசா வித்தி. விஞ்ஞானம் (1),வேணாவில் ஸ்ரீ முருகானந்தா வித்தி. ஆங்கிலம் (1), குரவில் தமிழ் வித்தி. உடற்கல்வி (1), இருட்டுமடு தமிழ் வித்தி. ஆங்கிலம் (1),சமூகக்கல்வி (1), தமிழ் (1),

தேராவில் தமிழ் வித்தி. கணிதம் (1), விஞ்ஞானம் (1), ஆங்கிலம் (1), சங்கீதம் (1), சமூகக்கல்வி (1), தமிழ் (1),

மன்னாகண்டல் அ.த.க பாடசாலை. ஆங்கிலம் (1), சிவநகர் தமிழ் வித்தி. ஆங்கிலம் (1),நெத்தலியாறு தமிழ் வித்தி. ஆங்கிலம் (1),

### வலயம்:-துணுக்காய்

நட்டாங்கண்டல் அ.த.க பாடசாலை ஆங்கிலம் (1), பாண்டியன்குளம் மகா வித்தி. விஞ்ஞானம் (1), நடனம் (1), இரண்டாம் மொழி (1), தகவல் தொழில்நுட்பம் (1), பாலிநகர் மகா வித்தி. ஆரம்பக் கல்வி (3),இரண்டாம் மொழி (2), விஞ்ஞானம் (1), சித்திரம் (1), ஆங்கிலம் (1), தகவல் தொழில்நுட்பம் (1), நூலகவிஞ்ஞானம் (1),

கொல்லவிளாங்குளம் அ.த.க பாடசாலை ஆரம்பக் கல்வி (2), ஆங்கிலம் (1), செராட்டிகுளம் அ.த.க பா்டசாலை ஆரம்பக் கல்வி (1), ஆங்கிலம் (1), பனங்காமம் மூன்றுமுறிப்பு அ.த.க.பாடசாலை ஆரம்பக் கல்வி (1), ஆங்கிலம் (1), பனங்காமம் பூவரசங்குளம் அ.த.க. பாடசாலை ஆங்கிலம் (1), மூன்று முறிப்பு அ.த.க பாடசாலை ஆரம்பக் கல்வி (1), ஆங்கிலம் (1), வவுனிக்குளம் மத்திய சுலுசு வித்தி.ஆரம்பக் கல்வி (1), ஆங்கிலம் (1), வன்னிவிளாங்குளம் அ.த.க பாடசாலை ஆரம்பக் கல்வி (2), விஞ்ஞானம் (1), விவசாய விஞ்ஞானம் (1),

விநாயகபுரம் அ.த.க பாடசாலை ஆங்கிலம்(1),கூத்திமுலை தமிழ் வித்தி. ஆரம்பக் கல்வி (1), ஆங்கிலம் (1),அம்பாள் புரம் தமிழ் வித்தி. ஆரம்பக்கல்வி (1), ஆங்கிலம் (1), பாலைப்பாணி தமிழ் வித்தி. ஆரம்பக் கல்வி(1), ஆங்கிலம் (1), மல்லாவி மத்திய கல்லூரி ஆங்கிலம் (2), சித்திரம் (1),விவசாயம் (1),இரண்டாம் மொழி (1),தமிழ் (1), றோமன் கத தோலிக்கம் (1),யோகபுரம் மகா வித்தி. ஆரம பக் கல்வி (3), இரண்டாம் மொழி (2), ஆங்கி லம் (1), றோமன் கத்தோலிக்கம் (1),தகவல் தொழில்நுட்பம் (1),

# மீள் பரிசீலனைக்காக ....

(நேற்றையத் தொடர்ச்சி)

செல்வி.வினோதினி தேவராசா, செல்வி. தாரிணி செல்வராசா,செல்வி. கார்த்திகா நாகராஜா, திருமதி.பிரணவன் சுபாஷினி,திரு. அன்ரனி கிறிஸ்றி, திரு.கந்தசாமி ருகுணன், திருமதி. செல்வகுமார் தக்சாயினி,செல்வி. பத்மினி திருஞானசம் மந்தமூர்த்தி, திரு. இராநரத்தினம் இராகவன், திரு. சுப்பிரமணியம் உதயபா லன், திரு. சண்முகம் கருணாகரன்,செல்வி.ரதி நவரத்தினம், செல்வி. கோமளா நவரத்தினம்,திருமதி. துசியந் தன் சுமந்திரா,திரு. சுண்முகராஜா சிறிகாந்தன், செல்வி.பிரதீபா மகாலிங்கம், திருமதி.மகேஸ் வரலிங்கம் கங்கா, திரு. ஸ்ரீகரன் சுதாகரன், செல்வி. ரதிவதனி கந்தசாமி.

திருமதி. செந்திலக்குமரன் சிவப்பிரியா, திரு.தேவராசா றொபேசன்,திருமதி. கவிதா ஜோறம் அனசிலி,செல்வி.மாதங்கி முத்துக்குமாரசுவாமி,செல்வி. உசேனி பரதலிங்கம்,செல்வி. துரை றஜனி லாசரு,திரு.இலங்கைநாதன் பிரதீஸ், திரு.செல்வராசா மகிந்தன், திரு. செல்லையா திருக்குமரன்,திரு. சிவபாலன் பகீரதன்,திருமதி.வாசுகி ரமணசுதன்,திரு.முருகையா ஜெயமதன்,திரு. கனகலிங்கம் மதிருபன்,செல்வி. விசாளினி செல்வராசா,திருமதி. பரந்தாமன் கயிலநாயகி, செல்வி. பாமதி சிவராசா,செல்வி. சுதர்சலா துரைராசா, திருமதி. பகீரதன் சகுந்தலா,திரு.ஸ்ரீராம்குமார் நதிபரன்,திரு. முத்துச்சாமி சர்மா இரகுநாதன்,திரு. சக்கரியாஸ் ஸ்ரெலன் கருணைதாஸ்,செல்வி. சிவசோதி ஜயாத்துரை.

செல்வி.ஸர்மினி பாலசுப்பிரமணியம், திரு.தனபாலர் கோணேஸ்வரன், திருமதி. காருண் ணியநாதன் சாந்தினி,திரு.சந்தியா பீரிஸ் நியுமன் ரென்சி,திரு.சூசைதாசன் லோகு டக்ளஸ் மில்ரன் லோகு,திருமதி.பாலகுமாரன் ரஜனிமலர், திரு.பன்னிருகரம் மணிவண்ணன்,திரு.முகம்மது அபுல்காசிம் மரக்காயர் முகம்மது அஸ்லம், திரு.நடராசா பத்மசீலன்.

திருமதி.சுகுணேஸ்வரி கணேதீஸ்வரன், திரு.வினாயகமூர்த்தி அருட்செல்வம், திருமதி.கருணைவேல் வைதேகி,திருமதி.சுதாஸ்கரன் நந்தினி, திரு.இராசரத்தினம் புவிராஜ், இரா சேந்திரன் குணாகரன்,திருமதி.சசிகரன் விஜய கௌரி கலைவாணி.

திருமதி.வரதகுமார் கீதாஞ்சலி, திருமதி. புஷ்பகாந்தினி கார்த்திகேயன்,செல்வி.சதிஜினி சிவராசசிங்கம்,திரு. மகேந்திரசிங்கம் சிவஜங்கரன், திரு.இராசரத்தினம் சசிகுமார்,திரு. தனபாலசிங்கம் விநாயகதாசன்,செல்வி. அருந்ததி சிவக்கொழுந்து,திரு.நவரட்ணம் சத்தியரூபன், திரு. திருநாவுக்கரசு திருமாறன்,திருமதி. வினோதினி பாலகிருஷ்னன்,திருமதி. சுதர்ஸசன் சசிகலா, திரு.சிவஞானசுந்தரம் சுபேந்திரன், திருமதி.தயாபரன் செல்வலஷ்மி,திருமதி. சுகந்தகுமாரி ஜெராட் அல்பேட்,திரு.தருமலிங்கம் சுதர்சன், திருமதி. பிரபாகரன் ஸ்ரீரஞ்சனி,

செல்வி.கந்தையா உமாவதி, செல்வி. யோகேஸ்வரி செல்லையா,திரு.இரத்தினசிங்கம் நவசீலன்,திருமதி.புனிதமலர் வினோத், செல்வி. கலாஜினி வல்லிபுரநாதன்.

# 8 அணிகள் மோதும் சம்பியன்ஸ் லீக் இந்தியாவில் டிசம்பரில் நடக்கிறது

## பரிசுத் தொகை ரூ. 27 கோடி

(மும்பை)



ரூபாய் 27 கோடி பரிசுக் தொகைக்கான சம்பியன்ஸ் லீக் இருபது -20 கிரிக்கெட்போட்டிசென்னை உட்பட 3 இடங்களில் நடைபெறுகிறது. ஐ.பி.எல். "இருபது - 20" ஓவர் கிரிக் கெற்போட்டியை வெற்றி கரமாக நடத்திமுடித்த இந்திய கிரிக்கெட் லீக் (ஐ.பி.எல்) அமைப்பு அடுத்து உள்ளூர் அணிகளுக்கான சம்பியன்ஸ் லீக் இருபது கிரிக் கெட் போட்டியைநடத்த முடிவு செய்துள் ளது. இதன் படி முதலாவது சம்பியன்ஸ் லீக் "இருபது-20 "கிரிக்கெட் தொடர் எதிர்வரும் டிசம்பர் 3ஆம் திகதி முதல் 10ஆம் திகதி வரை நடைபெறுகிறது.

இத் தொடரில் ஐ.பி.எல் போட்டியில் முதல் 2இடங்களைப்பிடித்த ராஜஸ்தான் நோயல்ஸ் சென்னை சூப்பர்கிங்ஸ் அணிகளும் அவுஸ் திரேலியாவில் இருந்து வெஸ்ரன் அவுஸ்திரேலியாவாரியர்ஸ், விக்டோரிய ரேஞ்சர்ஸ் அணிகளும் தென் ஆபிரிக்கவில் இருந்து டைட்டன்ஸ், டால்பின்ஸ் அணிகளும் இங்கிலாந்தில் இருந்து மிடில்செக்ஸ் அணியும் பாகிஸ்தானில் இருந்து ஒரு அணியும் என்று மொத்தம் 8அணிகள் பங்கேற்கின்றன. இவை 2 பிரிவாக பிரிக்கப்படும். ஒவ்வொரு அணியும் தங்கள்பிரிவில்உள்ள மற்ற அணிகளுடன் தலா ஒரு முறைமோதும். இதன் அடிப் படையில்ஒவ்வொரு பிரிவில்இருந்தும் தலா 2அணிகள்அரை இறுதிக்கு தகுதி பெறும். மொத்தம் 15ஆட்டங்கள் நடக்கின் றன.

இந்த நிலையில்இந்த போட்டி நடை பெறும் இடங்கள் நேற்று முன்தினம் அறிவிக்கப் பட்டன. இதன் படி மும்மை பெங்களூர், சென்னை ஆகிய இடங்களில் இந்த போட்டிகள் நடை பெறும் என்றும்இறுதிப் போட்டி மும் பையில் நடக்கும்என்றும் ஐ.பி.எல் குழுத் தலைவர் லலித் மோடி நிரு பர்களிடம் கூறினார்.

ஒக்டோபரில் நடக்கஇருந்த இந்த போட்டி ஐ.சி.சி யின் நெருக்கடி காரணமாக திகதி மாற்றப்பட்டதால் அதைத் தொடர்ந்து அப் போது தேர்வு செய்யப்பட்டிருந்த இடங்களும் மாற்றப்பட்டு இருக் கின்றன. முதலில் ஜெய்ப் பூர், மொகாலி,டில்லி ஆகிய இடங்கள் இந்த போட்டிக்கு தேர்வு செய்யப்பட்டிருந்தது ஆனால்வட மாநிலங்களில் டிசம்பர் மாததில் கடும்குளிரும் இரவில் பனிப் பொழிவின் தாக்கமும் இருக்கும் என்பதால் போட்டியை வேறு இடங்களுக்குமாற்ற முடிவு செய்தத்ாக மோடி விளக்கம் அளித்தார்.

### ரூ.27கோடி பரிசுத் தொகை

இந்த போட்டிக்கான மொத்தப் பரிசுத் தொகை இந்திய மதிப்பில் ரூபா 27கோடி யாகும். இதில் சம்பியன் ஆகும் அணி ரூ13.5 கோடியை பரிசாக தட்டிச் செல்லும் அடுத்த ஆண்டு இந்த போட்டியில் 12அணிகள் கலந்து கொள்ளும் என்றும் ஆட்டத்தின் எண்ணிக்கை 23ஆக உயரும் என்றும் லலித் மோடி மேலும் தெரிவித்தார்.

சம்பியன்ஸ் லீக்போட்டிக்கான புதியலோகோ அறிமுகவிழா மும்மையில்நேற்று முன் தினம் நடந்தது. இதில் லலித் மோடி உட்பட பலா கலந்து கொண்டனர்.

## ஐ.சி.எல். , ஐ.சி.சி. தலைவர்கள் அடுத்த மாதம் சந்திக்கின்றனர்

(டுபாய்)

சர்வதேச கிரிக்கெட் சபைத் தலைவர் டேவிட் மோர்கன்இந்தியன் கிரிக்கெட் லீக் பிரதிநிதிகளை வரும்ஒக்டோபர் மாதம் 14 மற்றும் 15 திகதிகளில் சந்தித்து பேசவிருக் கிறார்.

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் கபில்தேர்வுடன் இணைந்து ஜீ வயி எஸ்டாடயின்மெண்ட குழுமம்இந்தியன் கிரிக் கெட் லீக் (ஐ.சி.எல்) அமைப்பை தோற்று வித்தது. பஞ்சாப் மாநிலத்தில் முதலாவது இருபது- 20 தொடரையும் ஐ.சி.எல் நடத்தியது . ஆனால் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை ஐ.பி. எல் என்ற அமைப்பை தோற்றுவித்து இருபது- 20 தொடரை நடத்தி சர்வதேச கவனத்தை ஈர்த்தது.

இந் நிலையில் ஐ.சி.எல் அமைப்பை அங்கீகாரம் இல்லாத அமைப்பு என்று இந்தியக் கிரிக் கெட் கட்டுப்பாட்டுச்சபை குற்றம் சாட்டியது. ஆனால் தாங் கள் முறைப்படி பதிவு பெற்றவர்கள் என ஐ. சி. எல்.,ஐ. சி. சி யிடம் முறையிட்டது. இந் நிலையில் எதிர் வரும் ஒக்டோபர் மாதம் 14, 15 ஆகிய திகதிகளில் துபாயில் ஐ.சி. சி தலைவர் டே விட் மோர்கன் ஜ.சி.எல் தலைவர் சுபாஷ் சந்தி ராவை சந்தித்து பேசவிருக்கிறார்.


## உயர்ரக துப்பாக்கி பயன்படுத்த அனுமதி கோரியுள்ள தோனி

(ராஞ்சி)

இந்திய ஒரு நாள் அணியின் தலைவர் தோனி உயர்ரக துப்பாக்கி பயன்படுத்தும் அனுமதியைக் கோரி விண்ணப்பித்துள்ளார். இந்தியக் கிரிக்கெற்றின் எழுச்சி நாயகனாக புகழப்படுபவர் தோனி . இருபது -20 உலக கோப்பையை (2007) பெற்று தந்த இவர் அவுஸ்திரேலிய ஒரு நாள் தொடர் (2007-08) மற்றும் இலங்கைக்கு எதிரான ஒரு நாள் தொடர் (2008) வெற்றிகள் மூலம் சிறந்த அணித் தலைவராக உருவெடுத்துள்ளார். இவரை கௌரவிக்கும் வகையில் ராஜீவ் கேல்ரத்னா விருது (2008) வழங்கப்பட்டது. மேலும் ஐ.சி.சி. சிறந்த ஒரு நாள் போட்டி வீரர் (2008) விருதும் பெற்று அசத்தினார். தற் போது பட்டப்படிப்புக்காக செயின்ட் சேவியர் கல்லூரியில் சேர்ந்துள்ளார். இவருக்கு இசட் பிரிவு பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே துப்பாக்கி பயன்படுத்தும் அனுமதியைப் பெற்றுள்ள தோனி தற்போது 9 எம்.எம். உயர்ரக துப்பாக்கி பயன்படுத்தும் அனுகுமதியைக்கோரி விண்ணபித்துள்ளார். இவரது சொந்த ஊரான ராஞ்சி மாவட்ட பொலிஸ் அதிகாரி மாற்றப்பட்டதால் இவரது விண்ணப்பம் கடந்த செப்.16முதல் நிலுவையில் உள்ளது. இவருக்கு விரைவில் அனுமதி அளிக்கப்படும் என தெரிகிறது.

இந்நிலையில் இந்தியாவின் முன்னணி அரசு நிறுவனமான ஸ்டீல் அத்தாரிட்டி ஒப் இந்தியா (செய்ல்) தோனியை விளம்பர தூதராக நியமிக்க உத்தேசித்துள்ளது. மத்திய அமைச்சர் ராம்விலாஸ் பாஸ்வான் கூறுகையில், தோனி செயில் நிறுவன விளம்பரத் தூதராக நியமிக்கப்பட்டார் மிகவும் மகிழ்ச்சி அடைவேன் என்றார்.



ஜார்க்கண்ட் முதல்வர் சிபு சோரன் தோனி எங்களின் பெருமை அவரை மாவட்டத் தின் விளையாட்டு வளர்ச்சி பணிகளில் ஈடுபடுத்த விரும்புகிறேன் என்றார்.

## ஆசிப் மீது விசாரணை

இந்திய பிரிமியர் லீக் போட்டிகளின்போது தடைசெய்யப்பட்ட ஊக்கமருந்து எடுத்துக் கொண்டதாக பாகிஸ்தான் வேகப்பந்து வீச்சாளர் மொஹமட் ஆசிப் மீது பரிசோதனை முடிவு வெளியானது. இதன் மீதான விசாரணை ஒக்டோபர் 11 ஆம் திகதி நடைபெறும் என்று ஐ.பி.எல். குழு தெரிவித்துள்ளது.




அமைக்கப்பட்ட ஐ.பி. எல். மூவர் கொண்ட குழுவில் சுனில் கவாஸ்கர், டாக்டர் ரவி பாபட், வழக்கறிஞர் ஷிரிஷ்குப்தே ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். இவர்கள் இந்த புகார் மீதான தீர்ப்பை வழங்குவர்.

ஆசிப் ஏ மற்றும் பி மாதிரிகள் இரண்டிலுமே தடை செய்யப்பட்ட ஊக்கமருந்து நண்ட் ரோலன் இருந்ததாக பரிசோதனை முடிவுகள் அறிவித்தன. இதனையடுத்து அவர் பாகிஸ்தான் கிரிக்கெட்டிலிருந்து தற்காலிகமாக நீக்கம் செய்யப்பட்டுள்ளார். ஒக்டோபர் 11 ஆம் திகதி நடைபெறும் இந்த விசாரணையில் அசிப்புடன்அவரது வழக்கறிஞர் கரீம், விளையாட்டு துறை மருத்துவர் மற்றும் ஊக்க மருந்து நிபுணரான டாக்டர் கிரஷ்டர்கண் ஆகியோரும் கலந்து கொள்கின்றனர்.

## ஐ.சி.எல் . அழைப்பை ஏற்க மறுத்தேன் மோட்டாசா தெரிவிப்பு

(சென்னை)

இந்திய கிரிக்கெற் சபைக்கு போட்டி அமைப்பான ஐ.சி.எல்லில் விளையாட ரூபா பத்துக் கோடிக்கு வாய்ப்பு வந்ததாகவும் அதை தான் ஏற்க மறுத்து விட்டதாகவும் பங்களாதேஷ் துணைத் தலைவர் கூறியுள்ளார்.



மேலும் அவர் கூறும் போது பணம் முக்கியம் தான் ஆனால் அதை விட நாட்டுக்காக விளையாடுவதே முக்கியம் என்றார் மோட்டார்ஷா.

முன்னாள் அணித்தலைவர் ஹபிபுள் பாச உட்பட 13 பங்களாதேஷ் வீரர்கள் சமீபத்தில் ஐ.சி.ல் லில் இணைந்தனர். இதற்காக பங்களாதேஷ் கிரிக்கெற் சபையால் அவர்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## தரங்கவின் அபார ஆட்டத்தின் மூலம் இலங்கை 'ஏ' 26 ஓட்டங்களால் வெற்றி


உபுல் தரங்கவின் அபார துடுப்பாட்டத் தின் மூலம் தென்னாபிரிக்க 'ஏ' அணியுடனான மூன்றாவது ஒரு நாள் போட்டியில் இலங்கை 'ஏ' அணி 26 ஓட்டங்களால் வெற்றியீட்டிக் கொண்டது.

தென்னாபிரிக்காவின் பவலோ பார்க் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியின் நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை 'ஏ' அணி 50 ஓவர்களுக்கும் 3 விக் கெட்டுகளை மாத்திரம் இழந்து 335 ஓட்டங் களைப் பெற்றது.

ஆரம்ப துடுப்பாட்ட வீரராக களமிறங்கி கடைசிவரை களத்தில் இருந்த உபுல் தரங்க 149 பந்துகளுக்கு முகம்கொடுத்து 20 பௌண்டரிகளும் 4 சிக்ஸர்களும் அடங்கலாக ஆட்டமிழக்காது 173 ஓட்டங்களை பெற்றார்.

இது தவிர இலங்கை அணியின் ஏனைய துடுப்பாட்ட வீரர்களும் சிறப்பாக செயல் பட்டு ஓட்டங்களைகுவித்தனர். மத்தியவரிசையில் வந்த தில்ருவன் பெரேரா 37 பந்துகளில் 44 ஓட்டங்களை பெற்றதோடு அணித்தலைவர் திலின கண்டம்பி 35 பந்துகளில் 30 ஓட்டங் களை குவித்தார்.

இதனை தொடர்ந்து சவாலான இலக்கை நோக்கி பதிலெடுத்தாடிய தென்னாபிரிக்க 'ஏ' அணி 47.5 ஓவர்களில் 309 ஒட்டங் களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்தது. அணி சார்பாக தனித்து போராடிய ஆரம்ப துடுப் பாட்ட வீரர் குலாம் போடி 136 பந்துகளுக்கு 17 பௌண்டரிகளும் 2 சிக்ஸர்களும் அடங் கலாக 153 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் ரங்கன ஹேரத் 48 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளை வீழ்த்திய தோடு இஷார அமரசிங்க 67 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளை பதம் பார்த்தார். இந்த வெற்றிமூலம் இரு நாடுகளுக்கும் இடையிலான 5 போட்டி களைக் கொண்ட ஒருநாள்தொடரில் இலங்கை 'ஏ' அணி 2-1 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.



# மட்டக்களப்பில் தமிழ் வர்த்தகர் சுட்டுக்கொலை

(கொழும்பு)

மட்டக்களப்பில் தமிழ் வர்த்தகர் ஒருவர் நேற்று காலை இனந் தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். மட்டக்களப்பு வெல்லாவெளி மண்டூர் பகுதியில் வைத்து இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

விஸ்வலிங்கம் தம்பிராசா எனப்படும் 42 வயதுடைய வர்த்தகரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக வெல்லாவெளிப் பொலிஸார் தகவல் வெளியிட்டுள்ளனர். இந்தத் துப்பாக்கிச் சூட்டுச்சம்பவம் குறித்து பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (அ-5)

# யாழ்.மாணவனுக்கு தேசிய வர்ண விருது

(கொழும்பு)

தேசியமட்ட பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகளில் நேற்று ஆரம்பமான தடகளப் போட்டிகளில் 19 வயதுக்குட்பட்டோர் பிரிவில் தட்டெறிதலில் பருத்தித்துறை ஹாட்லி கல்லூரி மாணவன் வடிவேஸ்வரன் ஹரிகரன் 4ஆம் இடத்தை பெற்று தேசிய வர்ண விருதை (Colour's Award) பெற்றுக் கொண்டார்.

இம்மாணவன் தட்டெறிதலில் 41.06 மீற்றர் தூரத்தை வீசியதன் மூலம் தேசிய வர்ண விருது கிடைத்தது.

இதேவேளை 19 வயதுக்குட்பட்டோருக்கான உயரம் பாய்தல் போட்டியில் யாழ். சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி கவிதா விமலநாதன் 6ஆம் இடத்தைப் பெற்று வடமாகாணத்திற்கு ஒரு புள்ளியைப் பெற்றுக் கொடுத்தார். (ச-5)

## எறிகணைத்...

எறிகணைத் தாக்குதலில் ரவிச்சந்திரன் விஜயகுமாரி (வயது28) என்ற பெண் படுகாயமடைந்துள்ளார்.

படையினரின் மோதல்களால் ஜெயபுரம் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து உருத்திரபுரம் பகுதியில் இந்தப் பெண் வசித்து வந்ததாக கிளிநொச்சி செய்திகள் தெரிவித்தன.

இதேவேளை நேற்று பிற்பகல் 2.50 மணியளவில் விசுவமடு தேராவில் மக்கள் குடியிருப்புக்களை இலக்கு வைத்து சிறிலங்கா வான் படையின் கிபிர் ரக வானூர்திகள் குண்டுத்தாக்குதலை நடத்தின.

இத்தாக்குதலினால் பயன்தரு மரங்கள் பல அழிவடைந்துள்ளதுடன் கால்நடைகள் பலவும் உயிரிழந்துள்ளன என கிளிநொச்சிச் செய்திகள் தெரிவித்தன. (ச-5)

## ஒரே குடும்பத்...

தமக்கும் ஆயுததாரிகளினால் அச்சுறுத்தல் இருப்பதாக பருத்தித்துறை நீதிமன்றில் தெரிவித்து பாதுகாப்பிற்காக தஞ்சமடைந்துள்ளனர். (எ-5)

# வலி.வடக்கில் மீள் குடியமர்வு

## விபரங்களை பதிவு செய்யாதோரை ஆவணங்களுடன் சமுகமளிக்க அறிவுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் மீளக் குடியமர்த்தும் பணி தொடர்பில் இதுவரை தமது பெயர் விபரங்களை வலி.வடக்கு பிரதேச செயலத்தில் பதிவு செய்யாதவர்களுக்கு ஓர் சந்தர்ப்பம் வழங்கும் வகையில் கிராம சேவகர் பிரிவு ரீதியாக கீழ்க்காணும் திகதிகளில் வலி.வடக்கு பிரதேச செயலகத்துக்கு உரிய ஆவணங்களுடன் சமுகமளிக்குமாறு வலி.வடக்கு பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

**29 ஆம் திகதி திங்கட்கிழமை**

இளவாலை வடக்கு (யா/221), இளவாலை வடமேற்கு (யா/222), வித்தகபுரம் (யா/223), பன்னாலை (யா/224), கொல்லன்கலட்டி (யா/225), நகுலேஸ்வரம் (யா/226), தெல்லிப்பளை கிழக்கு (யா/227), தெல்லிப்பளை (யா/228), துர்க்காபுரம் (யா/229), தந்தை செல்வாபுரம் (யா/230), மாவிட்டபுரம் (யா/231), மாவிட்டபுரம் தெற்கு (யா/232), காங்கேசன்துறை மேற்கு (யா/233),

**30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை**

காங்கேசன்துறை மத்தி (யா/234), காங்கேசன்துறை தெற்கு (யா/235), பளை வீமன்காமம் வடக்கு (யா/236), பளை வீமன்காமம் தெற்கு (யா/237), கட்டுவன் (யா/238), கட்டுவன் மேற்கு (யா/239), தென்மயிலை (யா/240), வறுத்தலைவிளான் (யா/241),குரும்பசிட்டி (யா/242),குரும்பசிட்டி கிழக்கு (யா/243).

**3 ஆம் திகதி வெள்ளிக்கிழமை**

வசாவிளான் கிழக்கு(யா/244), வசாவிளான் மேற்கு (யா/245), மயிலிட்டி வடக்கு (யா/246), தையிட்டி கிழக்கு (யா/247), மயிலிட்டித்துறை தெற்கு (யா/248), தையிட்டி வடக்கு (யா/249), தையிட்டி தெற்கு ( யா/250), மயிலிட்டித்துறை வடக்கு (யா/251), பலாலி தெற்கு (யா/252), பலாலி கிழக்கு (யா/253), பலாலி வடக்கு (யா/254), பலாலி வடமேற்கு (யா/255), பலாலி மேற்கு (யா/256). (ஓ)

## வன்னியில்...

தாக்குதல் நடாத்தி சேதங்களை ஏற்படுத்தியதாகவும் இராணுவம் கூறியுள்ளது.

இதேவேளை நேற்று முன்தினம் இடம்பெற்ற தாக்குதலில் 25 விடுதலைப் புலிகள் கொல்லப்பட்டதாகவும் இதில் மூவரின் சடலங்களையும் ஆயுத தளபாடங்களையும் படையினர் கைப்பற்றியிருப்பதாகவும் இராணுவம் கூறியிருக்கின்றது.

நேற்று முன்தினம் மாங்குளத்திற்கு வடக்கேயுள்ள கொக்காவில் பிரதேசத்தில் முன்னேறியிருக்கும் படையினர் ஏ-9 வீதியை அண்மித்திருப்பதாகவும் இராணுவம் குறிப்பிட்டிருக்கிறது. (ச-3)

## கிழக்கு அரி...

சாலையில் அனுமதிக்கப்பட்டுள் ளார்.

சம்பவம் இடம்பெற்ற நேரம் குடாக்கடல் பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்த ஜோன்சன் சந்திரமோகன் (வயது 36) என்பவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விடுதலைப் புலிகளின் தாக்குதலிலேயே பிரஸ்தாப மீனவர் காயமடைந்துள்ளதாக இராணுவத் தரப்புச் செய்திகள் தெரிவித்தன.

இத்தாக்குதல் சம்பவத்தின்போது விடுதலைப் புலிகளுக்கு ஏற்பட்ட சேத விபரங்கள் குறித்து தகவல் எவையும் வெளியாகவில்லை. (எ-49)

## மண்கும்பானில் இரவு...

இடத்தைச் சேர்ந்த 4 பிள்ளைகளின் தந்தையான சுப்பையா சிறிதரன் (வயது 53) என்ற குடும்பஸ்தரே கொல்லப்பட்டுள்ளார்.

இரவு நேர ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது சம்பவம் இடம்பெற்ற பற்றைப் பகுதியில் இருவரின் நடமாட்டத்தை அவதானித்து தாம் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டதாகவும் அதன்போது பிரஸ்தாப குடும்பஸ்தர் கொல்லப்பட்டதாகவும் கடமையில் இருந்த கடற்படையினர் நீதிவானிடம் தெரிவித்துள்ளனர்.

மேலும் ஒருவர் தப்பிச் சென்று விட்டதாகவும் கடற்படையினர் குறிப்பிட்டுள்ளனர். சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட ஊர்காவற்றுறை நீதவான் திருமதி ஜோய் மகாதேவன் பிரேத பரிசோதனையின் பின் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு யாழ்.போதனா வைத்தியசாலை நிர்வாகத்திற்கு உத்தரவிட்டார். (ச-5)

## இலங்கை...

களுக்கும் இடையிலான உறவுகளை இச்சந்திப்பு மேலும் வலுப்படுத்தியுள்ளது. இலங்கையின் சக்திவளப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதில் ஈரான் வழங்கிவரும் ஒத்துழைப்புக்கு ஜனாதிபதி இச்சந்திப்பின்போது நன்றி தெரிவித்தார்.

இலங்கையில் மேற்கொள்ளப்பட்டுவரும் விவசாய அபிவிருத்தி தொடர்பாக இலங்கை ஜனாதிபதி ஈரானின் ஜனாதிபதிக்கு இச்சந்திப்பின்போது விரிவாக எடுத்துக்கூறினார்.

பயங்கரவாதிகளிடம் இருந்து இப்போது மீட்கப்பட்டுள்ள கிழக்கில் விவசாய அபிவிருத்தியை மேம்படுத்துவதே தமது நோக்கம் என ஜனாதிபதி இங்கு எடுத்துக் கூறினார். (எ-5)

# சடலத்தை பொறுப்பேற்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கொடிகாமம் பொலிஸாரால் நேற்று முன்தினம் ஒப்படைக்கப்பட்ட 25 வயது மதிக்கத்தக்க ஆண் ஒருவரின் சடலமானது யாழ். போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் உள்ளது.

உரித்துடையோர் 05 நாட்களுக்குள் அச்சடலத்தை பொறுப்பேற்கும்படி யாழ்.போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் கேட்டுக் கொள்கின்றார். (ச)

## இராணுவ...

புக்களின் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மரணத்துள் வாழும் தமிழீழ மக்களின் அவலங்களை அறிந்திருந்தும், பாராமுகமாய் இருக்கும் உலகின் மனச்சாட்சியை கேள்வி கேட்கும் முகமாக இக்கவனயீர்ப்பினை ஏற்பாடு செய்கின்றோம்.

ஐக்கிய நாடுகள் சபை உள்ளிட்ட அனைத்துலக உதவி நிறுவனங்களை வன்னி மண்ணிலிருந்து வெளியேற்றி, எமது மக்கள் மீது இன அழிப்பு போரினை கட்டவிழ்த்து விட்டுள்ள இலங்கை பேரினவாத அரசைக் கண்டிக்குமாறு கோரியும் எமது மக்களுக்கு ஆதரவாக புலம்பெயர் வாழ் தமிழ் மக்களின் உணர்வெழுச்சியை வெளிபடுத்தும் முகமாகவும் அணிதிரள்வோம்.

இக்கவனயீர்ப்பின் அவசரத்தையும் அவசியத்தையும் உணர்ந்து, வேலைத்தளங்களில் முன்கூட்டியே விடுப்பினைப் பெற்று, மரணத்துள் வாழும் எமது மக்களின் உரிமைகளுக்காக வயது பேதமின்றி அனைவரும் இந்த அடையாள உண்ணாநிலைப் போராட்டத்திலும் கவனயீர்ப்பு போராட்டத்திலும் அணிதிரள்வோம். (ச-5)

## புலம்பெயர்ந்து வாழும்...

தமிழீழ தேசியத் தொலைக்காட்சியில் நிகழ்த்திய உரையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

மக்கள் புரட்சியினூடாகவே தமிழீழ தேசிய விடுதலை சாத்தியம் என்பதை கடந்த 21 ஆண்டுகளுக்கு முன்னர் ஈகச்சுடர் லெப். கேணல் திலீபன் அவர்கள் கூறியிருந்தார்.

இவ்வாறான மக்கள் எழுச்சியும் புரட்சியும் தற்போது தமிழீழ மண்ணில் வியாபித்துள்ளது. தமிழீழ மண்ணில் மட்டுமல்ல; புலம்பெயர் நாடுகளில் உள்ள மக்கள் மத்தியிலும் தமிழீழ விடுதலை தொடர்பான எழுச்சி என்றுமில்லாதவாறு காணப்படுகின்றது.

தமிழீழ மண்ணில் தற்போது போர்க்களங்களில் தமிழ் மக்கள் களப்பணிகளை ஆற்றி வருகின்றனர். சிறிலங்காப் படை என்றும் இல்லாதவாறு பலவீனமான முறையில் அகலக்கால் பதித்துள்ளது.

இதனை எமக்கு சாதகமாக பயன்படுத்தி தமிழீழ மண்ணினை மீட்டெடுப்பது மட்டுமல்லாது சிறிலங்கா படையினரின் வல்வளைப்பிலுள்ள மக்களையும் நிலங்களையும் மீட்கும் சாதகமான நிலை தற்போது ஏற்பட்டிருக்கின்றது.

தற்போது இருக்கும் களநிலைமையை எமக்கு சாதகமாக பயன்படுத்தி எமது விடுதலையை தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களின் காலத்தில் வென்றெடுக்கவேண்டும்.

வன்னியில் செயற்பட்ட ஐக்கிய நாடுகள் சபையின் அமைப்புக்களை சிறிலங்கா அரசு வெளியேற்றியுள்ள நிலையில் புலம் பெயர்ந்து வாழும் எமது உடன்பிறப்புக்கள் என்றுமில்லாதவாறு அனைத்துலக நாடுகள் முழுவதிலும் எழுச்சி கொண்டு அந்தந்த நாட்டு அரசுகளுக்கு அரசியல் ரீதியாக அழுத்தங்களை கொடுத்து வருகின்றனர்.

இந்நிகழ்வானது எமது விடுதலைப் போருக்கு பெரும் பலமாகவே இருக்கும். புலம்பெயர்ந்து வாழும் எமது உறவுகள் எமது தேசம் விடுதலை அடைகின்ற வரையும் தொடர்ந்து இதுபோன்ற போராட்டங்களை நடத்தி தமிழீழத்துக்கான பலத்தினை சேர்க்க வேண்டும் என்றார் அவர். (எ-5)

## புலிகளுடனான ஒப்பந்தம்...

நாடாளுமன்றம் சபாநாயகர் டபிள்யூ.ஜே.எம்.லொக்கு பண்டார தலைமையில் நேற்று முற் பகல் 9.30 மணியளவில் கூடியது.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் வாய்மூல கேள்வி நேரம் முடிபடைந்ததும் சபாநாயகர் இந் நியமனம் தொடர்பாக அறிவித்தார்.

இவற்றில் மிக் விமான விவகாரம் குறித்து ஆராயும் குழுவுக்கு ஊடகத்துறை அமைச்சர் அநுர பிரியதர்சன யாப்பாவும் விடுதலைப் புலிகளுடனான ஆளும் கட்சியின் உடன்பாடு குறித்த குற்றச்சாட்டுக்களை விசாரிக்கும் குழுவுக்கு அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவும், இறைவரித்திணைக்கள விவகா ரம் குறித்த விசாரணைக்குழுவுக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினரான கபீர் ஹாசிம் அவர்களும் தலைவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

முதல் இரண்டு விவகாரங்களில் குற்றச்சாட்டுக்கள் ஆளும் கட்சிக்கு எதிராக எழுப்பப்பட்டுள்ள நிலையில் அவற்றை விசாரிக்கும் குழுக்களுக்கு அரசாங்க அமைச்சர்களே தலைவர்களாக நியமிக்கப்பட்டதை பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி எதிர்த்துள்ளது.

இதனையடுத்து எதிர்த்தரப்புக்கும் அரசாங்கத் தரப்புக்குமிடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டது. இதனால் சபையில் சிறிது நேரம் குழப்பம் நிலவியது.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதம கொறடாவும் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜோசப் மைக்கல் பெரேரா இந்நியமனம் குறித்து எதிர்த்தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் அரசாங்கம் கலந்துரையாடவில்லை என சுட்டிக்காட்டினார்.

ஜே.வி.பி நாடாளுமன்ற உறுப்பினர்களும் கடுமையான எதிர்ப்புத் தெரிவித்தனர்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் தலைவராக அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவு செய்யப்பட்டமை செல்லுபடியற்றது என்றும் எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவரை தெரிவுக்குழுவின் தலைவராக நியமிக்க வேண்டுமென்றும் எதிர்க்கட்சிகள் வலியுறுத்தின.

அரசாங்கத்தின் பிரதம கொறடாவும் அமைச்சருமான தினேஸ் குணவர்த்தன எதிர்க்கட்சிகளின் சந்தேகங்களுக்கு விளக்கமளித்தார். ஆனாலும் அதனை ஏற்றுக் கொள்ளாத எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அரசு தரப்புடன் சர்ச்சையில் ஈடுபட்டனர்.

சபையில் அமைதி காக்குமாறு சபாநாயகர் கேட்டுக் கொண்டபோதும் இரு தரப்பு உறுப்பினர்களும் கடுமையாக வாக்குவாதப்பட்டனர். எவ்வாறாயினும் அரசாங்கம் எதிர்த்தரப்பு நியாயங்களை நிராகரித்தது.

நாடாளுமன்ற நிலையியற்குழு விதிகளின் பிரகாரம் சர்ச்சைக்குரிய விடயங்கள் தொடர்பான நாடாளுமன்ற தெரிவுக்குழு ஒன்றுக்கு தலைவராக எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவரே நியமிக்கப்படுவது வழமையாகும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ச-3,5)


# மரண அறிவித்தல்

## வைரவி நடராசா (வில்லன் நடராசா)

ஈவினையை பிறப்பிடமாகவும் நெல்லியடி, வெல்வத்தை, கரவெட்டியை வதிவிடமாகவும் கொண்ட வைரவி நடராசா 26.09.2008 அன்று காலமானார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 27.09.2008 இன்று சனிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் ஆலங்கட்டை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

வெல்வத்தை,
நெ.ம.ம.வீதி,
நெல்லியடி.

தகவல்:
மகன்
சுரேஸ்குமார்.

(C-1609)


இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.09.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.